www.tamilarangam.net

# களத்தில்

**கவிதை மூலை**

தமிழை மறந்த
தமிழனைச் சாடி
என்கவி தீண்டிடும் நண்பா!
தமிழோடு உறவாடும்
தகையோரை ஒருபோதும்
மனதாலுந் தீண்டாது என்பா

- சுடு கவி

திருவள்ளுவர் ஆண்டு 2027 மீனம் 06 (20.03.1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு: 60p

## சிறிலங்காப் படைகள் மீது புலிகள் தாக்குதல்கள்

# அப்பாவித் தமிழ்மக்கள் மீது அரசபடைகள் தாக்குதல்கள்

சிறிலங்கா அரசபடைகளுக்கெதிராக விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் வெற்றிகரமாகப் பல தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றனர். இத்தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கமுடியாத சிங்கள அரசு அப்பாவித்தமிழ் மக்கள்மேல் கோர வெறியாட்டம் ஆடியுள்ளது.

## மன்னார்க் கடலில் புலிகள் பாரிய தாக்குதல்

.96 அன்று மன்னார்க் கடற்பகுதியில் ..ந்து கடற்புலிகள் பாரிய தாக்குத ..ன்றைத் தொடுத்துள்ளனர். அன்று மதியம் ..மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்ப ..ள்ளது. கடற்படையினரின் நடமாட்ட ..க் கண்காணித்தபடி மன்னார் ..பரப்பில் நிலைகொண்டிருந்த கடற் ..ள், கடற்படையினரின் அதிவேகப்பீரங்கி ..கு களை நாலாபுறமும் சுற்றிவளைத்துத் ..க்குதலைத் தொடுத்தனர்.

முதலாவது பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளால் முற்றாக மூழ்கடிக்கப்பட்டது. அடுத்த படகு முற்றாக தாக்கிச் சிதைக்கப்பட மூன்றாவது படகுசேதம் எதுவுமின்றி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இத் தாக்குதலில் பத்துக்குமேற்பட்ட கடற் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்பட வில்லையென்பது குறிப்பிடத்தகுந்தது.

## மணலாறில் 10 படையினர் பலி

.3.96 அன்று மணலாறுப் பகுதியில் ..தலைப்புலிகளின் அதிரடிப் படையணி- ..ான்று திடீர்த் தாக்குதல் ஒன்றை ..ாத்தியுள்ளது. சுமார் 200 பேர் வரையிலான ..தலைப்புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கி ..ாகவும் மூன்றுமணிநேரம் தாக்குதல் நீடித்ததாகவும் எட்டு இராணுவத்தினரும் இரண்டு ஊர்காவற்படையினரும் கொல்லப் பட்டனர் எனவும், மேலும் ஏழுபேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்க ப்படுகிறது. இதில் ஏராளமான ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## வெல்லாவெளியில் தாக்குதல்

### 24 படையினர் தலத்திலேயே பலி

..டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளிப் ..தியிலும் விடுதலைப்புலிகள் மற்றுமொரு தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர். 13.03.96 அன்று மண்டூர் பாலத்தின் அருகேயுள்ள ..ல்லாவெளி விசேட அதிரடிப்படை ..காமிலிருந்து பிற்பகல் இரண்டுமணியளவில் ..ரோந்துக்குப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது ..டுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்கினர். ..ர் 20 நிமிட தாக்குதலில் 24 படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். இவ் உக்கிர தாக்குதலில் சிக்குண்ட இராணுவத் தினருக்கு பவள் கவச வாகனசகிதம் உதவவென வந்த அரச அதிரடிப்படையணி யினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டு இதில் ஒரு பவள் கவச வாகனம் சேதமடைந்தது. அதேவேளை வெல்லாவெளி முகாம்மீதும் எறிகணைத் தாக்குதல்களைப் புலிகள் தொடுத்தனர். இந்தத் தாக்குதலிலும் விடுதலைப்புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

## பொலன்நறுவையில் பொலிஸ் நிலையம் தாக்குதல்

பொலநறுவைப் பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் நிலையமொன்று 16.03.96 அன்று தாக்குதலுக்கு இலக்கானது. இதில் 5 பொலிசார் கொல்லப்பட்டிருப்பதாகவும், மேலும் 10 பேர் காயமடைந்திருப்பதாகவும் சிறிலங்கா த்தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் பொதுமக்கள்மீதும் வீடுகள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்ட சிறி லங்கா விமானப்படை வானூர்தியொன்றும் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டுள்ளது. வாக ரைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குத லுக்குள்ளாகிப் பலத்த சேதமடைந்தது.

## சிங்கள இராணுவம் வெறியாட்டம்

மேற்படி புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாத சிங்கள அரசு கோழைத்தனமாக அப்பாவிப் பொதுமக்களை நாட்டின் பல பாகங்களிலும் பலிவாங்கியுள்ளது. 11.03.96 அன்று மட்டக்களப்பு நகரில் பயங்கர வெறியாட்டம் ஒன்றை நிகழ்த்தியுள்ளது. இராணுவக் குண்டர்களால் பெண்கள் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். ஆண்கள் கம்பிகளாலும் பொல்லுகளாலும் பயங்கர ஆயுதங்களாலும் தாக்கப்பட்டுள்ளனர். பாலியல் வன்முறைக்கு ஆளான ஆறு குடும்பப் பெண்கள் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாகரையில் சிறிலங்கா விமானப்படைக் குண்டுவீச்சில் நான்கு பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

### வெட்டிக் கொலை

திருக்கோவில் பகுதியில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த 21 வயது தமிழ் இளைஞரை கைது செய்து கொண்டு சென்ற அதிரடிப்படையினர் அவரைக் கண்ட துண்டமாக வெட்டிக் கொலைசெய்துள்ளனர். கிருஷ்ணபிள்ளை யோகநாதன் என்ற இளைஞரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

### எறிகணைத் தாக்குதல்கள்

12 ஆம் திகதியிலிருந்து கண்மூடித்தனமாக நடாத்தப்படும் தாக்குதல்களில் மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் பலத்த சேதம் நிகழ்ந்துள்ளது. வாகரையைச் சேர்ந்த 34 வயது ஆறு பிள்ளைகளின் தாய் பலியாகியுள்ளார். வீடுகள் பல நாசமடைந்துள்ளன.

### மன்னாரிலும் படை-கள் வெறியாட்டம்

மன்னார்கடலில் கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலை யடுத்து சிங்கள இராணுவம் வெறித்தனமாக பொதுமக்கள்மேல் பாய்ந்துள்ளது. குண்டு வீச்சிலும் துப்பாக்கிப் பிரயோகத்திலும் 13 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 60 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். அன்று காலை 4.30 மணியளவில் மன்னார் நாச்சிக்குடாவில் விமானப்படையினர் நடாத்திய தாக்குதலில் ஆறுமாதக்குழந்தையுட்பட மேற் படி பொதுமக்கள் இறந்துள்ளனர். காயம-டைந்தவர்களில் அனேகர் நிலை கவலை க்கிடமாக உள்ளதாகவும் அறியப்படுகிறது. மரங்கள் உட்பட பல குடிசைகளும் வீடுகளும் எரித்தழிக்கப்பட்டுள்ளது.

### அம்பாறையில் சித்திரவதை

அம்பாறை மாவட்டம் விநாயகபுரம் பகுதியைச் சுற்றி வளைத்த சிங்கள விசே.. அதிரடிப்படைப்பிரிவினர் 40 வயதுடைய கண.. பதிப்பிள்ளை நேசம்மா என்ற குடும்பப் பெண்ணை மோசமாகச் சித்திரவதை செய்துள்ளனர். இவர் தற்போது வைத்தியசா..யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி ம..

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எல்லை மீறிய பிரச்சினை

இலங்கை இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை. இதன் தீர்வுக்கு வெளிநாடுகளின் உதவியோ அன்றி மத்தியஸ்தமோ தேவைமில்லை எனக் கூறும் சிறிலங்கா அரசுக்கும் பௌத்த பேரினவாதிகளுக்கும் கொழும்புப் பல்கலைக்கழக சமூகவியல் விரிவுரையாளரான நிமால் ரஞ்சித் சுதந்திரமான பதில் ஒன்றை அளித்துள்ளார். இவர் தனது பதிலில் வடக்கு – கிழக்கில் எழுந்துள்ள பிரச்சினையானது இலங்கைக்குரிய பிரச்சினை என்றாலும் உள்நாட்டில் தீர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்துகின்றார்.

இப்பிரச்சினையை சகல தரப்பினருமே சர்வதேச மட்டத்திற்கு கொண்டுவந்து விட்டனர். சிங்கள இனவாதிகள் கூட இதனையே செய்துள்ளனர். நளின் டி சில்வா இலண்டனுக்குச் வந்து இங்கே ஆர்ப்பாட்டம் செய்கின்றார். அரச தரப்பில் லக்ஸ்ஷமன் கதிர்காமர் உலகம் பூராவும் சென்று புலிகளுக்கு ஆதரவு தர வேண்டாமென்று பிரச்சாரம் செய்கின்றார். இந்நிலையில் இதனை உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அன்றி உள்நாட்டு மட்டத்திலேயே தீர்க்க முடியும் என்றும் எவ்வாறு கருத முடியும்? எனவும் நிமால் ரஞ்சித் கேள்வி எழுப்புகின்றார்.

இலங்கையில் இனப்பிரச்சினை ஆயதப் போராட்டமாக கூர்மையடையத் தொடங்கியதிலிருந்தே அது சர்வதேசப் பிரச்சினையாக வெளிநாடுகளுடன் தொடர்புபட்ட பிரச்சினையாக மாறிவிட்டது. அன்றிலிருந்து இப்பிரச்சினையானது சிறிலங்கா அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையையும் தீர்மானிக்கும் முக்கிய அம்சமாகவும் இருந்தது.

விடுதலைப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக முனைப்புப் பெற்ற போது அதில் இந்தியாவின் கை இருப்பதாகக் கருதிய அப்போதைய ஜே.ஆர் ஜெயவர்தனா அரசு மேற்குலகினதும் கிழக்காசியாவினதும் நெருக்கமான உறவைப் பேண முற்பட்டது. ஆனால் போராட்டம் ஜே.ஆரின் கையை மீறிப்போனபோது இந்தியாவுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொள்ள அது முயன்றது.

இதன் காரணமாக இந்தியாவின் மத்தியஸ்த்தத்துடன் – தலைமீட்டுடன் பெங்களூர், திம்பு எனப் பேச்சுவார்த்தைகள் தொடங்கின. அவை தோல்வியில் முடிவடைந்தாலும் இறுதியில் இந்தியா – சிறிலங்கா ஒப்பந்தத்துடன் இந்திய இராணுவத்தின் பிரவேசத்துடனும் இந்தியாவின் தலைமீடு நேரடியாக ஏற்பட்டது. இவ்வாறாக இனப் பிரச்சினையானது தற்பொழுதல்ல அது ஒரு தசாப்தத்திற்கு முன்பிருந்தே ஒரு சர்வதேசப் பிரச்சினையாக பரிமாணம் பெற்றுவிட்டது. சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் ஏனைய விடயங்களை விட முக்கிய விடயமாகவும் மாறி விட்டது.

ஆனால் இந்நிலையானது தனியாக ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சியுடன் மட்டும் முடிந்துவிடவில்லை. அதன் பின்பு வந்த பிரேமதாசாவிலிருந்து இன்று வரையிலும் இதுவே தொடர்கின்றது. பதவிக்கு வந்த ஆரம்பத்தில் இந்தியாவுடன் முரண்பட்டுக்கொண்ட பிரேமதாசா போராட்டம் கையை மீறிச் செல்ல இந்தியாவுடன் உறவை நெருக்கமாக்கிக் கெண்டார். இதன் காரணமாக குறிப்பிட்ட காலத்தில் மூன்று தடவைகள் இந்தியாவிற்கு அவர் விஜயம் செய்தார்.

தற்பொழுது ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூட ஆட்சிக்கு வந்த பின்னர் தமது முதலாவதுஉத்தியோக பூர்வ விஜயத்தை இந்தியாவிற்கு மேற்கொண்டமையும் இதன் விளைவேயாகும். அண்டைநாட்டுடன் நட்புறவை பேணுவதாகக் கூறிக்கொண்டாலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதே அவரின் நோக்கமாகும்.

இந்நிலை ஒருபுறமிருக்க இறுதியாக யாழ்குடாநாட்டின் மீதான பெரும் படையெடுப்புக்கு அரசு தயாரானபோது அதற்கென அது எடுத்துக்கொண்ட பெரும் எடுப்பிலான ராஜதந்திர முயற்சியானது இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்ற வடிவத்தையே முற்றாகக் கடந்து விட்டதை தெளிவுபடுத்தியது. இறுதி ராஜதந்திர முயற்சி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகவும் தீவிரமாகவே நடந்தது.

உள்நாட்டில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த இதில் முனைப்பாகச் செயற்பட்டார். கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளை அடிக்கடி சந்தித்துப் பேசிய அவர் சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எடுத்துக்கூறியதோடு அந்நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் முனைப்பாகச் செயற்பட்டார்.

இதே சமயம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சில மாதங்களாக உலகின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து விடுதலைப் புலிகளுக்கெதிராகப் பெரும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டதோடு உலகின் ஆதரவைத் திரட்டும் முயற்சியிலும் இறங்கினார். இந்த முயற்சியில் சிறிலங்காத் தொடர்பு சாதனங்களும் ஈடுபட்டன. மேற்குறித்த நடவடிக்கையானது 1972 இல் பங்களாதேசுின் மீது இந்தியா படையெடுப்பதற்கு முன்னதான இராஜதந்திர முயற்சிகளுக்கு ஒப்பானதாகும்.

இதற்கு மேலாக இன்று சிறிலங்கா ஜனாதிபதி உட்பட யார் வெளிநாடு சென்றாலும் தமிழர் பிரச்சினை குறித்து பிரஸ்தாபிக்காமல் இருக்க முடியாது. இதற்கு எடுத்துக் காட்டாக ஐக்கிய நாடுகள் சபையின் ஐம்பதாவது ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் கூட இப்பிரச்சினையை பிரஸ்தாபிக்காமல் இருக்க இயலவில்லை.

இதேசமயம் உலகநாடுகளும், மறுவளமாக இனப்பிரச்சினை சம்பந்தமாக கவனம் செலுத்தாமலில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென சிறிய அளவினதாயினும் அவற்றின் அழுத்தம் சிறிலங்கா அரசிற்கு இல்லாமலில்லை.

இந்த நிலையில் சிறிலங்கா அரசோ இனப்பிரச்சினையை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை யென்றும் அதனை சிறிலங்கா அரசுதீர்த்து வைக்க முடியுமெனக் கருதுவது அவர்களின் வரட்டுத்தனமான சிந்தனைக்கே தவிர நடைமுறைச் சாத்தியமான தொன்றல்ல. இவர்களின் சிந்தனை எவ்வாறிருப்பினும் இலங்கை இனப்பிரச்சினை இன்று சர்வதேச ரீதியில் முனைப்பாகவுள்ள பிரச்சினைகளில் ஒன்றாகும்.

# செய்திச் சுருள்

## சிறிலங்கா கடற்படை மீனவர் மீது தாக்குதல்:

08.03.1996 அன்று இரவு இரணைதீவுக் கடற்பரப்பில் சிறிலங்காவின் கடற்படையினர் மீனவர் மீது நடத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டும் ஆறு பேர் காணாமல் போயுமுள்ளனர். இச்சம்பவத்தில் இவர்கள் சென்ற மீன்பிடிப் படகும் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 55 வயதான அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை என்பவரே சம்பவத்தின்போது உயிரிழந்தவராவார். காணாமல் போயுள்ள ஆறு மீனவர்களதும் நிலை தொடர்பாக அறிய முடியாமலுள்ளது. இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரையோரக் கிராமமான முள்ளி வாய்க்கால் கடற்பரப்பில் நுழைந்த சிறிலங்காக் கடற்படையின் பீரங்கிப் படகுகள் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பலத்த தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலையடுத்து மக்கள் அபடபகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேத விபரங்கள் அறியப்படவில்லை. கடந்த ஏழாம் திகதி திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளி–வெட்டிப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்காப்படையினருக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. இம்மோதலின்போது படையினர் தமக்கு ஏற்பட்ட இழப்புக்களுடன் பின்வாங்கிக் கொண்டனர்.

## தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள தமிழ்க் குழுக்கள் தயார்–

சிறிலங்கா அரசு முன்வைத்துள்ள மலினப்படுத்தப்பட்ட தீர்வுத்திட்ட சட்ட வரைவை ஏற்றுக்கொள்ள தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உட்பட ஏனைய தமிழ்க் குழுக்களும் தயாராக உள்ளதாக அறியப்படுகின்றது. ஆயினும் இச் சிறு சலுகைகளைக் கூட சிங்கள அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பது தெரிகின்றது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவினுள்ளே இச்சட்ட வரைவை மேலும்மலினப்படுத்தினால் சர்வதேச கண்டனத்திற்கு உட்பட நேரிடும் என்றும் அது தனது இலக்குகளுக்குப் பாதகமாக அமையுமென்றும் அரசாங்கம் கருதுகின்றது. பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இச் சட்ட வரைவை ஏற்காதுபோனால் சிறுபான்மை மக்களின் வாக்குகளை இழந்து விடுவோமென அஞ்சுகின்றது. ஆகவே பாராளுமன்றத் தெரிவுக்குழுவினுள் விவாதங்களை நடத்துவதன் மூலம் தமது இனவாத விருப்புகள் அம்பலப்பட்டுப் போகுமென்று அவை அஞ்சுகின்றன. எனவே வடபகுதி மீதாக இராணுவ நடவடிக்கை முடிவுறும் வரை விவாதம் எதையும் நடத்தாது காலம் கடத்துவதென அரசாங்கம், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூட்டாக முடிவெடுத்துள்ளதாக அறியப்படுகின்றது. அதேவேளை இந்த நிலையைச் சமாளிப்பது குறித்து அரசாங்கம் தீவிரமாகச் சிந்தித்து வருவதாகவும் தெரியவருகின்றது.

## சிறிலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரம்–

வெளிநாடுகளில் சிறிலங்கா அரசு மிகக் கேவலமான பொய்ப்பிரச்சார செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. மேற்கு நாடுகளிலுள்ள சிறிலங்கா அரச முகவர்கள், விடுதலைப் புலிகளின் பெயரில் கீழ்த்தரமான மிரட்டல் கடிதங்களை, பொது நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளன. சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் இச்செயலானது விடுதலைப் புலிகளைக் களங்கப்படுத்தி மேற்கு நாட்டு அரசாங்கங்களை நடவடிக்கை எடுக்கத் தூண்டும் செயலென விடுதலைப் புலிகளின் பேச்சாளர் கண்டித்துள்ளார்.

## வாழைச்சேனையில் இராணுவம் வெறியாட்டம்–

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனைப்பகுதியில், சிறிலங்கா அரச படையினர் 45 வயதுக் குடும்பப் பெண்ணொருவரை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். அனைத்துலக மகளிர் தினமான கடந்த எட்டாம் திகதியே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவரது குடும்பத்தினர் வெளியே சென்றிருந்த வேளையில், தனது குடிசையில் தனியாக அவர் இருந்தபோது, அங்கு வந்த இரண்டு இராணுவத்தினரே இக்காடைத்தனத்தைப் புரிந்துள்ளனர்.

பொலநறுவைப் பகுதியில் தேடுதலை மேற்கொண்ட சிறிலங்காப் படையினர் 98 தமிழ் மக்களைக் கைது செய்துள்ளனர். இவர்களில் ஏழு பேர் பெண்களாவர். விசாரணை என்ற பெயரில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு அச்சுறுத்தலுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

## முல்லைத்தீவில் விமானப்படை குண்டுவீச்சு–

முல்லைத்தீவு மாவட்டத்தில், சிறிலங்கா விமானப்படையின் புதிய ரக யுத்த விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன. கடந்த 10ஆம் திகதி காலை நிகழ்த்தப்பட்ட இத் தாக்குதலிலால் ஏற்பட்ட சேத விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இது ஒருபுறமிருக்க, பருத்தித்துறைக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தற்காலிக, விமான இறங்கு தளத்தை தமது விமானப்படை குண்டு வீசி அழித்திருப்பதாக சிறிலங்கா அரசு செய்தி தெரிவித்துள்ளது.

## கனடாவில் கருத்துக் கணிப்பு–

கனடாவில் வாழும் தமிழர்கள் மத்தியில் சுதந்திரமான பொது அமைப்பொன்று கருத்துக் கணிப்பொன்றை நடாத்தியுள்ளது. சில கேள்விகளை முன்வைத்து எடுக்கப்பட்ட இக்கருத்துக் கணிப்பு அங்கு நீண்ட காலமாக வாழ்வோர், கடந்த சில வருடங்களில் குடியேறியோர், போராட்டத்தை ஆதரிப்போர், எதிர்ப்போர் என பல தரப்பட்ட மக்களையும் கவனத்தில் கொண்டு எடுக்கப்பட்டது. கனடா உலகத் தமிழர் இயக்கம் மக்களிடம் மிரட்டிப் பணம் பெறுகிறதா என்ற கேள்விக்கு 89.8 வீதமான மக்கள் இல்லையெனப் பதிலளித்துள்ளனர் உலகத் தமிழர் இயக்க செயற்பாடுகள் உங்களைப் பாதிக்கின்றதா என்ற கேள்விக்கு79.4 வீதமான மக்கள் இல்லையென்று பதிலளித்துள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்க செயற்பாடுகள் உங்களைப் பாதிக்கின்றதா என்ற கேள்விக்கு77 வீதமான மக்கள் இல்லையென்றும் பதிலளித்துள்ளனர். சுதந்திர தமிழீழத்தை ஆதரிக்கின்றீர்களா? என்ற கேள்விக்கு74 வீதமான மக்கள் ஆமென்றும் பதிலளித்துள்ளனர்.

## சிங்கள இராணுவம்...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மேலும் மட்டக்களப்பு கிரான் செங்கலடி களுவங்கேணிப் பகுதியில் பல அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் விபரம் எதுவும் தெரிவிக்கப்படாமல் மறுக்கப்பட்டும் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்களும் அடங்குவர்

### ஒன்றரை வயதுக் குழந்தை பலி

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைக்கு ஒன்றரை வயதுக் குழந்தையொன்று 16.03.96 அன்று பலியாகியுள்ளது. யோகராசா கல்பனா என்ற பெண்குழந்தையே இவ்வாறு பலியானார் அக்குடும்பத்தைச் சேர்ந்த மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

www.tamilarangam.net



# உதவி நிறுவனங்கள் எடுத்து வந்த பொருட்கள் தாண்டிக்குளத்தில் தடுப்பு

இடம் பெயர்ந்த மக்களுக்குக் குடியிருப்பு வசதி-களை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தேவையான பொருட்களையும் தளபாடங்களையும் வடக்கிற்கு எடுத்துச் செல்ல, சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்குச் சிறிலங்கா அரசு தடைவிதித்துள்ளது.

மேற்படி நிறுவனங்கள், உதவி வழங்கும் நோக்குடன் எடுத்து வந்த பெருமளவு பொருட்கள், தாண்டிக்குளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

யு. என். எச். சி. ஆர் எடுத்துவந்த தளபாடங்களைக் கூட விநியோகிக்கக் கூடாது என சிறிலங்கா அரசு தடுத்து விட்டதால் அவை தேங்கிக் கிடக்கின்றன.

இதே போல் இடம்பெயர்ந்த மக்களுக்கென அமைக்கப்பட்டு வரும் குடியிருப்புகளுக்கு வழங்குவதற்கென 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தினால் கொண்டுவரப்பட்ட பிளாஸ்ரிக்கினாலான மலசலகூட கோப்பைகள் கூட, தாண்டிக்குளத்தில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கென எடுத்துவரப்பட்ட உபகரணங்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. 'றெட்பானா' நிறுவனம் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கென எடுத்துவந்த புடவைகளுக்குக் கூட சிங்கள அரசு தடைவிதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது தவிர, முன்பள்ளி ஆசிரியர்களுக்கென எடுத்துவரப்பட்ட துவிச்சக்கர வண்டிகள், கெயர், யு. என். எச். சி. ஆர் ஆகியன நுண்கருத்திட்டத்தின் கீழ் எடுத்து வந்த விவசாய உபகரணங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது அலுவலக தேவைக்கென எடுத்து வந்த உருக்கு அலுமாரிகள், காகிதாதிகள் கூடத் தாண்டிக்குளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# வலிகாமத்திற்கு செல்ல மறுத்த 60 பொலிசார் இடைநிறுத்தம் இரு அதிகாரிகளும் உள்ளடங்குவர்

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கும் பகுதியில் சேவையாற்ற செல்ல மறுத்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட அறுபது பேரின் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என பொலிஸ்மா அதிபர் ராஜகுரு தெரிவித்துள்ளார்.

இரண்டு பொலிஸ்அத்தியட்சகர்கள் உதவி பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர்கள் இதற்குள் அடங்குவர்

இதே வேளை பொலிஸ் சேவையில் இணைந்த பின்னர் யாழ்ப்பாணத்திற்கு செல்லாமல் கொழும்பில் பதினைந்து-இருபது வருடங்கள் தங்கியிருந்தவர்களும் அடங்குவர். இவர்கள் பொலிஸ் சேவையில் இருந்து விலகிக் கொண்டவர்களாக கணிக்கப்படுகின்றனர்.

## ஈழத்தமிழர் மீது தமிழக மக்கள் அக்கறையின்றி இருக்க மாட்டார்கள்

### -முன்னாள் இந்திய இராணுவத் தளபதி கல்கட்

ஈழத்தமிழர்கள் மீது, தமிழக மக்கள் தொடர்ந்தும் அக்கறையின்றி இருக்கப் போவதில்லை என இந்திய அமைதிப் படைத்தளபதியாக இலங்கையில் பணியாற்றிய ஓய்வு பெற்ற லெப்.ஜெனரல் கல்கட், சென்னையிலிருந்து வெளியாகும் புரொன்ட்லைன் என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

'ஈழத்தமிழர்களைத் தமிழகம் புறந்தள்ளிவிடும் என நான் எண்ணவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினர் ஏற்கனவே அனுபவித்துவரும் விநியோகச் சிக்கலை இன்னமும் அனுபவிக்கின்றனர். இராணுவத்திற்கான தொடர்பு மாற்றங்கள் செறிவற்றவையாகவுள்ளன.

வன்னியுடனான பிரதான தரைமார்க்கம் மூலம் விநியோகத்தைப் பேண முடியாதுள்ளது. கடல், வான் மூலமாகச் சிக்கல்களின் மத்தியில் விநியோகம் நடைபெறுகிறது. இந்தளவு பெரும் எண்ணிக்கையிலான படையினருக்கு விநியோகத்தைப் பேணுவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது' என கல்கட் மேலும் தெரிவித்துள்ளார்.

## பலாலித்தள விநியோகத்தில் மேலும் சில தனியார் விமானங்கள்

கொழும்பில் இருந்து பலாலிக்கான வான்வழி விநியோகத்திற்கென சிறிலங்கா அரசு குறிப்பிட்ட தனியார் விமான சேவைஒன்றை வாடகைக்கு பெற்றுள்ளமை கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது இதற்கென அரசு கேள்விப்பத்திரக் கோரல் எதையும் விடுக்கவில்லை. ஏனைய தனியார் விமான சேவையுடன் இது தொடர்பாக அரசு எந்த தொடர்பையும் மேற்கொள்ளவில்லை. அரசு தனக்கு அறிமுகமான சில முகவர்கள் மூலம் குறிப்பிட்ட தனியார் விமானங்களை இச் சேவைக்கு எடுத்துள்ளது. ரஷ்ய கனரக போக்குவரத்து விமானங்களையும் லயன் ஏயார் என்ற தனியார் சேவை மூலம் அரசு பெற்றுள்ளது.

இவை வாரத்தில் ஆறு நாட்களில் 12 பயணங்களை மேற்கொள்ளுகின்றன. தனக்கு நெருங்கியவர்கள் மூலம் குறிப்பிட்ட ஒரு விமானசேவையை அரசு பெற்றுக் கொண்டது தொடர்பாக ஏனையதனியார் விமான சேவை நிறுவனங்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளன. அரசு தொடர்ந்து போக்குவரத்து விமானங்களை இழந்தமையினாலேயே தனியார் விமானங்களை படையினரின் விநியோகத்திற்காக பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தது குறிப்பிடத்தக்கது.

அரசு தனியார் விமான சேவைகளுக்குத் தடைவிதித்துவிட்டு தனியே ஒரு நிறுவனத்திடம் இருந்து மட்டும் விமானங்களை சேவைக்கு எடுப்பதால் ஏனைய நிறுவனங்களுக்கு வருமானம் ஏதும் இன்றி இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஆடி மாதம் வரை தனியார் சேவை விமானங்கள் சேவையில் ஈடுபடுவதற்கு அரசு தடைசெய்துள்ளது.

# ஆயுதங்களைக் கைவிடக் கோருவது இன்றைய நிலையில் அவசியமல்ல

ஆயுதம் ஏந்தியதன் மூலமே இன்று தமிழர் பிரச்சனை இவ்வளவு தூரம் வெளிவரத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் அல்லது ஒப்படைக்க வேண்டும் எனக்கூறுவது பேச்சுவார்த்தைக்கு அவசியமானதல்ல என, 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் ஒருமைப்பாட்டுக்கு வர ஆயுதம் ஒரு பிரச்சனையல்ல. ஆயதப் போராட்டம் மூலமே தமது உரிமைகளைப் பெற முடியும் என்ற முடிவிற்கு வந்தவர்கள், பிரச்சனை தீரமுன்னர் எப்படி ஆயுதங்களைக் கைவிடுவர்? ஒருமைப்பாட்டுக்கு வந்த பின்னரே இது குறித்து நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கவனம்

வழக்கம் போலல்லாது உலகம் வேறொரு காரணத்துக்காக சிறிலங்கா நோக்கித் தனது கவனத்தைத் திருப்பியுள்ளது. உலகக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டப் போட்டியில் சிறிலங்கா முதன் முதலாக வெற்றியீட்டியுள்ளமை அதற்கான காரணமாகும்.

இவ் வெற்றி, விளையாட்டுக்களில் சிறிய நாடுகளின் வளர்ச்சிக்கு கட்டியங் கூறுமோர் முன்னுதாரண நிகழ்வாகவும், சிறிய நாடுகளைக் கிள்ளுக்கீரையாக நினைத்துவந்த ஏனைய நாடுகளுக்கு அவர்களின் மமதையை அடக்கும் எடுத்துக் காட்டாகவும் அமைந்துள்ள அதேவேளை, அது விளையாடி வெற்றியீட்டிய வீரர்களுக்கு அல்லாவிடினும் சிங்கள அரச-ியல்வாதிகளுக்கும் பௌத்த பேரினவாதிகளு க்கும் ஒரு மமதையை ஊட்டிவிடுமோ? என ஓர் அச்சத்தையும் தோற்றிவித்துள்ளது.

"கிரிக்கட் முடிய அடியாம்" என்று தமிழ் மக்களிடையே பரவலாகப் பேசப்பட்டு வந்தமையே இவ் அச்சத்துக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

வெற்றியில் மமதை ஆட்சியாளரிடையே அலை போன்று பரவி 'பாருங்கள் எமது நாடு விளையாட்டிலும் உன்னத நிலையிலேயே உள்ளது ஒரு கொஞ்சப் பயங்கரவாதிகளே நாட்டை நாசமாக்குகிறார்கள் அவர்களை அழிக்க ஆயுத உதவிசெய்யுங்கள்' என்று சிங்கள அரசு தனது "பிச்சை ஓட்டை" எடுத்துக்கொண்டு திரும்பவும் உலகவலம் வர, அல்லது இலங்கையின் இனப்பிரச்சனையை பூசி மெழுகி மறைக்க, அன்றிலும் தனது ஆட்சியின் "சாதனை" என்று சிங்கள மக்களையும் ஏமாற்ற, பல்வேறுவழிகளில் இவ் வெற்றி உதவக்கூடும்.

ஆனால் உலகத்துக்கு "விளையாட்டில் எதற்கு அரசியல்" என்று விளையாட்டையும் அரசியலையும் வேறுபடுத்திப் பிரித்து ஆய்ந்து கொள்ளும் தன்மையுண்டு. அதேவேளை "அரசியலில் எதற்கு விளையாட்டு" என்று தமிழர்களுக்கெதிரான சிங்களஅரசின் ஏமாற்று வித்தைகளையும், தமிழினப் படுகொலைகளைப் புரிந்துகொண்டே தீர்வு சமாதானம் என்று விளையாடும் அரசியல் விளையாட்டையும் உலகம் நன்கு புரிந்துகொள்ளும்.

"யாழ் வென்றோம், கொடிநாட்டினோம். பார் இன்று உலகக் கிண்ணமும் வென்றோம். பெயர் நிலைநாட்டினோம். இது சந்திரிகா அரசின் சாதனை"யென்று பட்டியலிட்டு அப்பாவிச் சிங்களமக்களின் கவனத்தைத் திசை திருப்பி இராணுவ நடவடிக்கையொன்றை தமிழ் மக்களின்மேல் சிறிலங்கா அரசு ஏவிவிடக்கூடுமோ? என்ற தமிழர்களின் அச்சத்திலும் நியாயம் இல்லாமலில்லை.

இது கடந்தகாலங்களிலும் அவ்வப்போது சிங்கள அரசுகளினால் மேற்கொள்ளப்பட்ட தந்திரமுங்கூட. வட பகுதியில் சிங்கள இராணுவத்தின் "துடுக்காட்டங்களை" சிங்களமக்கள் அறியாது வைத்திருப்பதற்கு அவர்களின் கவனத்தைத் திசைதிருப்ப ரூபவாகினியில் துடுப்பாட்ட ஒளிபரப்புக்கள் உதவிய காலமும் உண்டு.

இது போன்றே வெற்றிக்களிப்பைச் சிங்கள மக்களுக்கு பல்வேறு வழிகளிலுந் தூண்டி வெற்றிப்போதையூட்டி அவர்களின் கவனத்தை துடுப்பாட்டத்தின் பக்கத்தில் வைத்துக் கொண்டு மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையைச் சிங்கள அரசு தமிழர்கள்மேல் நடாத்த முனையக்கூடாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத் தீவில் இரண்டு நாடு இரண்டு இனம், இரண்டு மொழி, இரண்டு இராணுவம்....

## ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மொழி, ஒரு இராணுவம் என்பது கற்பனை!

- நக்கீரன்

சென்ற இதழில் தமிழர் சிங்களவர்களுக்கு இடையிலான இடைவெளி நிரம்ப முடியாத அளவிற்கு விரிந்து கொண்டு போவதுபற்றி குறிப்பிட்டிருந்தோம்.

அதனை உறுதிப்படுத்த தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு இவற்றின் தொட்டிலாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை ஏற்றி 'வெற்றி விழா' கொண்டாடிய சம்பவத்தையும் குறிப்பிட்டிருந்தோம்.

அது மட்டும் அல்லாமல் நல்லூர் கந்தசுவாமி கோவில், இடிக்கப்பட்ட புத்தவிகாரையின் மீது கட்டப்பட்டிருப்பதாக அபய ஆரியசிங்க என்ற பேராசிரியர் ஆராய்ச்சி என்ற போர்வையில் புதிய சரித்திரம் எழுத முற்பட்டிருக்கிறார் என்றும் சொல்லியிருந்தோம்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக சிங்கள பௌத்த பேரினவாதிகள் நாடு **(country)** இனம் **(Race)** சமயம் **(Religion)** இவற்றை மையமாக வைத்தே இலங்கை அரசியலை ஆட்டிப்படைத்து வருகிறார்கள்.

அதாவது முழு இலங்கையும் (நாடு) சிங்கள (இனம்) பௌத்தர்களுக்கு (மதம்) மட்டுமே சொந்தமானது என்ற கோட்பாட்டை இந்த சிங்கள பௌத்த இனவாதிகள் முன்வைத்து அதற்கு இணங்க செயற்பட்டு வருகிறார்கள். இலங்கையில் வசிக்கும் ஏனைய இனத்தவர்களை இன ரீதியாகப் பிரித்துக்காட்ட சிங்களவர்கள் தங்களை ஆரிய இனத்தவர் என்று சொல்லி வருகிறார்கள்.

அநகாரிக தர்மபால என்பவரே 'சிங்கள பௌத்தயா' என்ற சொற்றொடரை 1906ஆம் ஆண்டு முதன் முதலாகப் பயன்படுத்தியவர் ஆவார்.

இவரே சிங்களவரை, பழைமையான வரலாறு படைத்த இனிமையான மென்மையான இதமான ஆரியக் குழந்தைகள் **(The sweet, tender, gentle, Aryan children of an ancient historic race)** எனப் புகழ்ந்து எழுதியவர்.

இதன் மூலம் சிங்களவர் வேறு, தமிழர் வேறு (ஆரியர், திராவிடர்) என்று சொல்லி சிங்களவர்களுக்குத் தனி அடையாளம் கொடுக்க முயற்சி செய்யப்பட்டது. அது மட்டும் அல்லாமல் ஆரியரான சிங்களவர்கள் இனரீதியாக திராவிடரான தமிழரைவிட மேலானவர்கள் என்பதை நிலைநிறுத்தவும் எத்தனிக்கப்பட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால் எந்தச் சிங்கள மன்னர்களும் தங்களை ஆரிய இனம் என்றோ, ஆரியவம்சம் என்றோ அழைத்தது கிடையாது.

மாறாக யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட தமிழ் மன்னர்களே தங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று அழைத்துக் கொண்டார்கள்.

அநகாரிக தர்மபாலாவை அடியொற்றி 1953 ஆம் ஆண்டில் டி.சி. விஜயவர்த்தனா என்பவர் கோவிலில் கலகம் **(The Revolt in the temple composoed to commemrate 2500 years of the land, the race and the faith)** என்ற நூலை எழுதி வெளியிட்டிருந்தார்.

விஜயவர்த்தனா சேனநாயக்கா குடும்பத்தினரது நெருங்கிய உறவினர். ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தின் தாபகரான டி.ஆர். விஜயவர்த்தனவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நூலின் மூலம் விஜயவர்த்தன, அநகாரிக தர்மபாலா வின் அதி தீவிர இனமத வெறிக்கு பட்டை தீட்டினார்.

இந்தப் பின்னணியில்தான் யாழ்ப்பாணத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை சிங்கக் கொடியேற்றி விழாக் கொண்டாடியதையும் சிறிலங்காவின் மகாராணி சந்திரிகா குமாரதுங்காவிடம் அவரது ஆணைக்கு இணங்க 'சாம சங்கரமய' அதாவது 'சமாதானத்துக்கான போரை' தொடுத்ததன் மூலமாக 'யாப்ப பட்டுன' நகரையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் பயங்கரவாதிகளிடம் இருந்து பலத்த உயிர்த் தியாகத்தின்பின் கைப்பற்றி விட்டதாக பண்டைய மன்னர்கள் காலத்துப் பாணியில் ஓலை எழுதி அதனை பேழையில் வைத்து கையளித்ததையும் நோக்க வேண்டும்.

சிங்கக் கொடியை யாழ்ப்பாணத்தில் ஏற்றிய கையோடு ஓலை அடங்கிய பேழையை கொழும்பு காலிமுகத் திடலில் அமைந்திருக்கும் சனாதிபதி செயலகத்தில் அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'வெற்றிவிழா' வைபவத்தில் சனாதிபதி சந்திரிகாவிடம் அநுருத்த ரத்வத்த கையளித்தது கவனிக்கத்தக்கது.

இன்றைய தலைமுறையினர் மட்டுமல்ல, இனிவரும் தமிழர் பரம்பரையும் சிங்கள பௌத்த வெறியர்களின் ஏகாதிபத்திய ஆசைகளை சரிவரத் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக, ஓலையில் எழுதப்பட்டிருந்த வாசகத்தை அப்படியே கீழே தருகிறோம்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் என்று அழைக்கப்படும் பயங்கரவாதிகளினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரக் கொடுங்கோன்மையின் பிடியில் சிக்குண்டிருந்த சரித்திரப் பிரசித்தி மிக்க 'யாப்பா பட்டுன' வில் மேன்மை தங்கிய சனாதிபதியான உங்களின் அரசாங்கத்தின் ஆணையை நிலைபெறச் செய்யுமாறு எனக்கும் முப்படைகளுக்கும் உங்களினால் வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் 'சாமசங்கரமய' அல்லது 'சமாதானத்துக்கான போரை' தொடுத்ததன் மூலமாக 'யாப்பா பட்டுன' நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சமாதானத்தின் எதிரிகளான அந்தப் பயங்கரவாதிகளை வீரமிகு தளபதிகளும் வீரமிகு. ஆயுதப் படையினரும் காவல்துறையினரும் பெரும் தியாகங்களைச் செய்து பாரிய முயற்சியினூடாக உங்களது ஆட்சியையும் அதிகாரத்தையும் மீள நிலை நாட்டியுள்ளோம் என்பதை மிகுந்த மரியாதையுடன் அறிவிக்கின்றேன்"

யாழ்ப்பாணத்தில் இல்லை யாப்பாபட்டுனவில் சிங்கக் கொடியை பறக்கவிட்டதன் மூலம், அங்கு சிறிலங்காவின் ஆட்சியையும், அதிகாரத்தையும் மீள நிலைநாட்டியுள்ளோம் என அநுருத்த ரத்வத்தை ஓலையில் குறிப்பிட்டிருப்பதன் அர்த்தம் தெளிவானது.

இலங்கைத் தீவு சிங்கள இனத்தவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் மட்டும் சொந்தமானது (நாடு, இனம், மதம்) என்பதே அதன் அர்த்தமாகும். அதாவது ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மதம் வேறு பேச்சுக்கு இடமில்லை என்பதே அநுருத்த ரத்வத்தை தீட்டிய ஓலையின் அர்த்தமாகும்.

இலங்கையிலுள்ள மூன்று முக்கிய பௌத்த பீடங்களின் அதிபதிகளும் சிங்கள பௌத்தர்களின் உரிமைகள்பற்றி மட்டுமே பேசுகிறார்கள். மற்ற இன, மத மக்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கும் உரிமைகள் இருக்கிறது என்பதை அவர்கள் ஒத்துக் கொள்ளத்தயாராயில்லை.

கலிங்கத்தை வெற்றிகொண்ட அசோகன் அந்தப் போரில் ஏற்பட்ட உயிரழிவுகளால் மன அமைதி இழந்து புத்தமதத்திற்குமாறி அமைதி பெற்றான். ஆனால் சிறிலங்கா பௌத்த மத பீடாதிபதிகளோ யுத்தத்திற்கு தூபதீபம் காட்டி உயிரழிவுகளுக்கு வழிகோலுகிறார்கள்.

இலங்கையிலுள்ள பௌத்த மத பீடாதிபதிகள் கிணற்றுத் தவளைகள். அவர்களுக்கு நாட்டு வளப்பம் தெரியாது என்று சிலர் எண்ணக்கூடும்.

ஆனால் இந்த பௌத்த மத மடாதிபதிகள் போலவே அமெரிக்காவில் கருணையின் வடிவம் புத்தபிரானின் அகிம்சைத் தத்துவத்தை பரப்ப சிறிலங்காவில் இருந்து வந்திருக்கும் மஞ்சள் அங்கி அணிந்த தேரர்களும் தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை கக்கியிருக்கிறார்கள்.

புத்ததேரர் அலுத்நுவர சுமன்திச தலைமையில் "தேசப்பிரேமி பிக்கு பெரமுனை" என்ற அமைப்பு அமெரிக்கா எங்கும் சந்திரிகாவின் தீர்வுத்திட்ட யோசனைக்கு எதிராக கையெழுத்து வேட்டையில் இறங்கி இருக்கின்றது.

நல்ல நாள், கோள் பார்த்து இந்த 'நற்பணியை' ஆரம்பிக்க வேண்டாமா? மயித்திரி விகாரையில் புத்தாண்டு தினத்தில் தேரர்கள் இத்திருப்பணியை ஆரம்பித்துள்ளார்கள். மயித்திரி விகாரை கலிபோர்னியா **Sun Valley** யில் இருக்கிறது. அமெரிக்காவிலுள்ள சுமார் பத்து விகாரைகளில் இதுவும் ஒன்று.

தீர்வுத் திட்டத்தை அமுல் செய்தால் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் புத்த வழிபாட்டுத் தலங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் போய்விடும் என்பது தேசப்பிரேமி பிக்கு பெரமுனையின் வாதமாகும்.

பௌத்த மத மடாதிபதிகளும் புத்த தேரர்களும் இராணுவத்தினரையும் இராணுவ தளபாடங்களையும், ஆயுதங்களையும், இராணுவக் கொடிகளையும் பிரித்தோதி ஆசீர்வாதம் செய்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஏற்றப்பட்ட சிங்கக் கொடியையும், இராணுவக் கொடிகளையும் கண்டி அஸ்கிரிய மல்வத்தை பௌத்த மத மடாதிபதிகள் ஆசீர்வாதம் செய்திருக்கிறார்கள்.

கலிங்கத்தை வெற்றி கொண்ட அசோகன் அந்தப் போரில் ஏற்பட்ட உயிரழிப்புகளால் மன அமைதி இழந்து

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

இன்றைய தலைமுறையினர் மட்டுமல்ல, இனிவரும் தமிழர் பரம்பரையும் சிங்கள பௌத்த வெறியர்களின் ஏகாதிபத்திய ஆசைகளை சரிவரத் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக, ஓலையில் எழுதப்பட்டிருந்த வாசகத்தை அப்படியே கீழே தருகிறோம்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் என்று அழைக்கப்படும் பயங்கரவாதிகளினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரக் கொடுங்கோன்மையின் பிடியில் சிக்குண்டிருந்த சரித்திரப் பிரசித்திமிக்க 'யாப்பா பட்டுன" வில் மேன்மை தங்கிய சனாதிபதியான உங்களின் அரசாங்கத்தின் ஆணையை நிலைபெறச் செய்யுமாறு எனக்கும் முப்படைகளுக்கும் உங்களினால் வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் 'சாமசங்கரமய" அல்லது 'சமாதானத்துக்கான போரை" தொடுத்ததன் வீலமாக 'யாப்பா பட்டுன" நகரிலும் அதனைச் நீழவுள்ள பகுதிகளிலும் சமாதானத்தின் எதிரிகளான அந்தப் பயங்கரவாதிகளை வீரமிகு தளபதிகளும் வீரமிகு ஆயுதப் படையினரும் காவல்துறையினரும் பெரும் தியாகங்களைச் செய்து பாரிய முயற்சியினூடாக உங்களது ஆட்சியையும் அதிகாரத்தையும் மீள நிலை நாட்டியுள்ளோம் என்பதை மிகுந்த மரியாதையுடன் அறிவிக்கின்றேன்"

www.tamilarangam.net



# தமிழீழப் பகுதிகட்கு அப்பால் வாழும் தமிழர்களின் இன்றைய அவலநிலை

**தமிழீழத்துக்கு அப்பால் வாழும் தமிழர்களிற் பெரும்பாலானோர் அச்சமும், பதற்றமும் மேலிடத் தங்கள் வாழ்நாளின் பொழுதுகளை நகர்த்துகின்றனர். இராணுவ, பொலிஸ் கெடுபிடிகள் ஒரு புறமும், விழிப்புக் குழுக்கள் மற்றும் ஊர்காவற் படையினர் தொல்லைகள் மறுபுறமும், அயலவர்களின் சந்தேகக் கண்கள் இன்னுமொருபுறமுமாக அவல வாழ்வுதான் அவர்களுக்கு உரியதாகியுள்ளது.**

-சசீகரன்

காலம் காலமாகப் பெரும்பான்மை இனத்தவர்களால் அடிமைப்படுத்தப்பட்டு வந்த தமிழினம், இன்று அடிமைத் தளையிலிருந்து விலகித் தனக்கென ஒரு நாட்டை நிறுவிச் சுதந்திர மனிதர்களாக வாழத் துடிக்கும் வேளையில், தமிழர்களிற் சிலர் சிங்களப் பேரினவாதத்துக்கு அடிமைகளாகி, இன்று எமது மக்கள் பல்வேறு விதமான இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டுக் கொண்டிருப்பது, வேதனையான ஒரு விடயமாகவேயுள்ளது.

தமிழ்த் தலைவர்கள், கடந்த காலங்களிற் தம் சுயநலன்களுக்காகத் தம் இனத்தையே சிங்களவர்களுக்கு அடிமைகளாக்கி வந்தனர். இத்தகைய புல்லுருவிகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட சிறிலங்காவின் முன்னைய ஆட்சியாளர்கள், அவர்களுக்கு ஒருசில அற்ப சலுகைகளை வழங்கிவிட்டு, அவர்களை நம்பியிருந்த தமிழர்களைப் பல்வேறு வழிகளிலும் தமக்கு அடிமைகள்போல் நடத்தி வந்தனர்.

சிங்கள ஆட்சியாளர்களின் அடிமைத்தனத்தையும் தமிழ்த் தலைவர்களின் சுயநலப் போக்கினையும் கவனத்தில் கொண்ட எம் தேசியத் தலைவர், ஆயுதப் போராட்டத்தின் மூலமே விடுதலையை வென்றெடுத்துத் தமிழினத்தைத் தலை நிமிர்ந்து தரணியிலே வாழ வைக்க முடியும் என்ற தீர்க்க தரிசனத்துடன், தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

தமிழர் தாயகத்தில், சுதந்திரமாக நடமாடிய அப்பாவித் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்தும், தேடுதல் என்ற போர்வையில் தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடியும் அழித்தும் வந்த சிறிலங்காப் படைகள் முகாம்களுக்குள் முடக்கப்பட்டன.

ஆரம்ப காலத்திற் தேடுதல் வேட்டை என்ற போர்வையிற் கைது செய்யப்பட்டு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள், மிகக் கொடூரமான முறையிற் சித்திரவதை செய்யப்பட்டுப் பல வருடங்களாகச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். சித்திரவதைகளுக்குள்ளான பலர் கொல்லப்பட்டும், வேறு சிலர் அங்கவீனர்களாக்கப்பட்டதுடன் சித்தசுவாதீனமற்றவர்களாகவும் ஆகியுள்ளனர்.

இதன்போது படையினரின் கெடுபிடிகளுக்கு அஞ்சிய பெற்றோர், அவர்களின் பிடியிலிருந்து தமது பிள்ளைகளைப் பாதுகாக்க வெளிநாடுகளுக்கு அனுப்பினர். வேறு சிலர் தென்னிலங்கைக்குச் சென்றும் குடியேறினர்.

தமிழர் பிரதேசங்களின் கெடுபிடிகளிலிருந்து தப்பித்துத் தமது பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம், சுகபோகம் ஆகியனவற்றைக் கருத்திற் கொண்டவர்களும் கொழும்பில் குடியேறினர்.

இத்தனைக்கும் மத்தியிற் பல்வேறு இன்னல்களுக்கும் முகம் கொடுத்து வாழ்ந்த தமிழ் இளைஞர்களில் பலர் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்கள் சமுதாயத்தின் விடிவிற்காகத் தமது அனைத்துச் சுகங்களையும் துறந்து விடுதலைப் புலிகள் அணியில் இணைந்து ஆயுதமேந்தினர். இதனால் இன்று, பெருமளவு பிரதேசங்கள் இராணுவத்தினர் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. புதிதாக படைகள் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து கூட, தமிழினம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் மக்கள் இராணுவ அச்சுறுத்தல்களின்றி நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், தமிழீழத்துக்கு வெளியே வாழ்ந்து வந்த தமிழர்களின் நிலையோ இன்று பெரும் பரிதாபத்துக்குரியதாகிக் கேள்விக்குறியாகிவிட்டது.

இரவோடிரவாக வீடுகளுக்குள் புகும்படையினர் சோதனைகளை மேற்கொள்வதுடன், இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்து கொண்டு செல்கின்றனர். பகல்வேளைகளில் வீதிகளிலும் அக்கைதுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இதனால் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடனேயே கொழும்பிற் தமிழர்கள் தமது வாழ்க்கையை நகர்த்த வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழர்கள் தமது கல்வியைத் தொடரவோ, தொழில் புரியவோ முடியாத நிலை இன்று உருவாகிவிட்டது. உறவினர்கள், நண்பர்களின் வைபவங்கள், மதநிகழ்வுகள், வைத்திய தேவைகள், மரண வீடுகளுக்குக் கூடச் செல்ல முடியவில்லை. இரு தமிழர்கள் ஒன்றாக ஓரிடத்தில் நின்றால் உடன் கைது செய்யப்படுகின்றனர். இவர்கள் இன்று வீதிகளில் நடமாட முடியாத நிலையில் இரவு பகலாக வீடுகளுக்குள்ளேயே முடங்கி வாழும் நிலை உருவாகிவிட்டது.

தினமும் தமிழர்களைத் தேடி வேட்டையாடித் திரியும் சிங்களப் படைகள், அவர்களை ஆடு மாடுகளைப் போல் பிடித்துச் சென்று அடைத்து வைக்கின்றனர்.

சிங்கள மக்கள் இன்று தமிழர்களுக்கெதிராகச் சினந்தெழத் தொடங்கிவிட்டனர். தமது வீடுகளில் வாடகைக்குக் குடியிருந்த தமிழர்களை இன்று வீடுகளைவிட்டு வெளியேறுமாறு பணித்து வருவதுடன், பொலிசாருக்கும் தகவல்களை வழங்கி விடுகின்றனர். சிங்களவர்கள் சொல்வதைக் கைகட்டி வாய்பொத்தி நின்று செய்யவேண்டிய அடிமை நிலையிற் தமிழர்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

விடுதிகளிலோ, உறவினர் வீடுகளிலோ தமிழர்கள் தங்க அனுமதி வழங்கப்படுவதில்லை. தமிழர்கள் தங்க அனுமதிப்பவர்கள் யாராக இருந்தாலும்கூடக் கைதாகும் நிலை உருவாகி விட்டது. கைதாவோர் எங்கு வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக்கூட அறியமுடியாத நிலையிற் கொழும்புவாழ் தமிழ்ப் பெற்றோர் கண்ணீருடன் காலம் கழித்து வருகின்றனர்.

கொழும்பிற் பரவலாகக் கைதாகும் இளைஞர்களையும், யுவதிகளையும் எதுவித விசாரணைகளுமின்றித் தடுத்து வைப்பதற்கான உத்தரவுகள் கூடப் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் சிலர் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களிற் தங்க வைக்கப்படுகின்றனர். இவர்களுக்கு ஒரு நேர உணவு மட்டுமே வழங்கப்படுவதுடன், அடிப்படை வசதிகளோ மலசல கூட வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. உறவினர்களைச் சந்திக்கவே அனுமதி அளிக்கப்படாத நிலையில் ஆண்களும் பெண்களும் தனிமைப்படுத்தப்பட்டு, தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதித் தமிழர்கள் கொழும்பு செல்ல, படையினர் தற்போது அனுமதி மறுத்து வருகின்றனர். இதைமீறி, பல்வேறு அவசரத் தேவைகளுக்காகச் சென்றோரும் வலுக்கட்டாயமாக வவுனியாவிற் தடுக்கப்பட்டு, புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாம்களிற் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இப்படித் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்குக் கூட, எதுவித வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையில், அவர்களும் ஒருவிதச் சிறை வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய பரிதாப நிலையிலும் கூட, தமது சொந்த மண் திரும்ப விரும்பாது பெருமளவு தமிழர்கள் இன்றுவரையில், சிங்களப் பெரும்பான்மையினருக்கு அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பது தமிழினத்திற்கே அவமானமானது.

இவர்கள் இனியாவது சிந்திக்க வேண்டும். தமிழன் தமிழனாக வாழ வேண்டும். யாருக்கும் அடிமையாக வாழக்கூடாது. தலை நிமிர்ந்து வாழ அவனுக்கென்றோர் நாடு வேண்டும். அதனைப் பெற்றிடத் தமது உயிர்களைத் தியாகம் செய்து மாவீரர்களான போராளி உடன் பிறப்புக்களின் தியாகங்களைப் புரிந்து கொண்டு, போராட்டத்திற் குதிக்க முன்வரவேண்டும். தமிழினம் ஒன்றிணைந்து முழு மூச்சுடன் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது. விரைந்து வந்து விடுதலையை வென்றெடுக்க, விடுதலைப் புலிகள் அணியில் இணைந்திடுவது ஒரு வரலாற்று அவசியமாகும்.

**இரவோடிரவாக வீடுகளுக்குள் புகும் படையினர் சோதனைகளை மேற்கொள்வதுடன், இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்து கொண்டு செல்கின்றனர். பகல்வேளைகளில் வீதிகளிலும் அக்கைதுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இதனால் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடனேயே கொழும்பிற் தமிழர்கள் தமது வாழ்க்கையை நகர்த்த வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.**

# இனித்தான் உண்மையான போர்

சனாதிபதி சந்திரிகா அரசின் பலம் வாய்ந்த அமைச்சர்களில் ஒருவரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, பட்ஜட் விவாதத்திற் பங்கு கொண்டு பேசுகையில், நிறைவேற்று சனாதிபதி முறையை ஒழிப்பதற்கு மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படுமெனவும் அத் தீர்மானம் குறித்து எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் பேசியுள்ளார். அவர் சந்திரிகாவின் அரசியற் தீர்வுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்ப்பவர். யாழ்பாணத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் சந்திரிகாவின் இராணுவம் முனைப்பாய் இருந்த வேளையில் விக்கிரமநாயக்கா இப்படிப் பேசியதற்குக் காரணமில்லாமலும் இல்லை.

'சந்திரிகாவின் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்டால், அது பிரயோசனமில்லாத கைப்பற்றலாக இருந்தாலுங் கூட, அரசின் செல்வாக்கு அதிகரிக்கும்: அவ்வேளையிற் சனாதிபதி முறை மாற்றப்படாது போகவும் கூடும். ஆனால் சனாதிபதி முறை மாற்றப்படாமல் இருப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டது. பட்ஜெட்டில் சனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படவில்லை. ஆகவே சனாதிபதி முறை சம்பந்தமான மாற்றங்கள் அண்மையில் இல்லை. அது நீடிக்கப்படவேண்டுமென்ற ரீதியிற் கருத்துக்களும் முன்வைக்கப்படத் தொடங்கியுள்ளன'

இவ்வாறு, சனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பாராளுமன்றத்திற் பேசிய கோமாளி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாசூக்காகக் கூறியுள்ளார். மேலும், சனாதிபதி முறையை நீக்குவதாயின் நாட்டில் ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டும் அத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கு யுத்தம் முடிவடைய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் யுத்தம் முடிவடைந்து விடும் என்று பீற்றிக் கொண்டு சிங்களவரை ஏமாற்றிவரும் அரசுக்கு யுத்தம் இப்போதைக்கு முடியாது என்று நன்றாகத் தெரியும். யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுப்புத் தொடங்கியதிலிருந்து தமிழ் மக்களின் யுத்தம் புதிய பரிணாமத்தை எடுத்துள்ளது. இதற்கு அரசுதான் உதவி செய்துள்ளது. முளுமையான ஒரு இடப்பெயர்ச்சியை வலிகாமத்திலிருந்து தமிழ் மக்கள் செய்திருந்த போதும், தாம் விட்டு வந்த மண்ணை மீட்டெடுப்பதற்குத் தங்களைச் சுதாகரித்துக் கொண்டு மக்கள் விழித்தெழத் தொடங்கிவிட்டார்கள். இனித்தான் உண்மையான போர் எனக் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திய ஆளும் வர்க்கத்தின் தவறான கற்பிதங்கள்

இலங்கைத் தமிழ்மக்கள் இந்தியாவின் விரோதிகள் அல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டமும் இந்தியத் தேசிய நலனுக்கு விரோதமானதல்ல. இது குறித்துப் பல தடவைகள் இலங்கைத் தமிழ்மக்கள் சார்பாக வெளிப்படுத்தப் பட்டுவிட்டது. ஆனால் இந்திய ஆளும் வர்க்கத்தினர் விளங்கிக் கொண்டார்களோ அன்றி விளங்கிக் கொள்ளவில்லையோ? தெரியவில்லை. ஆனால் இதனை இன்னும் அவர்கள் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

தற்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்களின்படியும் இந்திய ஆளும் வர்க்கம், சிங்கள பேரினவாத அரசிற்குத் தனது தார்மீக ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்தின் மீது சிங்கள இராணுவம் மேற்கொண்ட மிகப்பெரும் படையெடுப்பிற்கு இராணுவத்தளபாட உதவிகள்–குறிப்பாகப் பெருமளவு எறிகணைகளை–வழங்கியதாகவும் சில உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இத்தனைக்கும் தமிழ்மக்கள் மீதும் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் இந்தியா கொண்டுள்ள அச்சமானது அர்த்தமற்றதும், ஆதாரமற்றதும் ஆகும். மறுவளமாக இந்திய மத்திய அரசின் செயற்பாடானது முற்றிலுமாக வஞ்சம் தீர்க்கும் நோக்கம் கொண்டதாகவே உள்ளது.

1987 இந்திய–சிறிலங்கா சமாதான உடன்பாடு, இலங்கைத் தமிழ்மக்களின் நலனைப் பேணாதுவிடினும், அது இலங்கைத் தமிழ்மக்களினால் முதலில் ஏற்றுக்கொள்ளப் பட்டமை, இந்தியாவிடமிருந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் நட்புறவின் அடிப்படையிலுமேயாகும். ஆனால் இவ் உடன்பாடு பின்னால் நிறைவேறாமற் போனதும் தோல்வியுற வேண்டி வந்ததும், சிறிலங்கா அரசு உடன்பாட்டிற்கு விரோதமாக நடக்க முற்பட்டமையினாலும் இந்திய அரசு உடன்பாடு நிறைவேற்றம் தொடர்பாக ஒரு தலைப்பட்சமாக நடக்க முயன்றமையாலுமேயாகும்.

அதாவது, தமிழ்மக்களின் நலனை இந்திய அரசு பாதிப்புக்குள்ளாக்க முற்பட்ட போதே, தமிழ்மக்கள் இந்தியாவுடன் விரோதம் பாராட்ட வேண்டி வந்தது. அதாவது தமது பாதுகாவலர்கள் எனத் தமிழ்மக்கள் நம்பியிருந்த இந்தியா, தமக்குத் துரோகம் இழைத்த போதே இப்பகைமை உணர்வு ஏற்பட்டது. இதனை வேறுவிதமாகக் கூறுவதானால், இந்தியா இலங்கைத் தமிழ்மக்களின் நலன்களை விடத் தனது நலன்களுக்கு முதன்மையளிக்க முயன்றதும் தமிழ்மக்களின் போராட்டத்தைத் தமது உள்நாட்டு வெளிநாட்டு அரசியலுக்கு பயன்படுத்த முற்பட்டமையுமே தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலேயுள்ள முரண்பாட்டுக்குக் காரணமாகும்.

ஆனால் இது தமிழ்மக்களின் தவறினால் ஏற்பட்டது அல்ல. தமிழ்மக்களின் உணர்வுகளை மதியாது இந்தியா மேற்கொண்ட நடவடிக்கையால் வந்ததாகும். இல்லாது போனால் மாலை போட்டு வரவேற்ற மக்கள், "வெளியே போ" எனக்குரலெழுப்ப வேண்டி வந்திருக்காது.

இதேசமயம் தமிழீழ விடுதலைப் போராட்டமானது, இந்திய நலனுக்கு விரோதமானது, இந்தியத் தேசிய ஐக்கியத்திற்குப் பாதகமானது என்பது போன்ற வாதங்களும் சிறுபிள்ளைத் தனமானவை. அண்டை நாடொன்றில் இருக்கும் சிறுபான்மையினம் விடுதலை பெறும் போது, தனது நாட்டிலும் இருக்கும் அதே சிறுபான்மையினம் விடுதலைப் போராட்டத்தில் இறங்கும் என்பது தவறான சித்தாந்தமாகும்.

ஒவ்வொரு நாட்டிலுள்ள சிறுபான்மை இனமும் தன்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும்போதே போராட்டத்தில் இறங்குகின்றது. ஆனால், அண்டை நாட்டிலோ அல்லது உலகின் வேறொரு பகுதியிலோ உள்ள தனது இனம், விடுதலை பெற்று விட்டது என்றதும் தாமும் போராட்டத்தில் இறங்குவது இல்லை. அவ்வாறு இறங்குவதானால் உலகில் ஒரு இனம் சுதந்திரநாடு ஒன்றைப் பெற்றிருப்பின், அவ்வினம் உலகம் பூராவும் வாழும் சகல பகுதிகளிலும் சுதந்திர அரசுகளை அவ்வாறு அமைத்திருக்கவேண்டும். அவ்வாறான நிலையொன்று இருப்பின், உலகநாடுகளின் எண்ணிக்கை இன்று உள்ளதுபோல் இரண்டு மடங்குக்குமேல் இருந்திருக்க வேண்டும். அல்லது உலகின் முழுப்பகுதியிலுமே இன்று விடுதலைப் போராட்டங்கள் அல்லவா நடந்துகொண்டிருக்கவேண்டும்?

இதுபோன்றதே, அகன்ற தமிழ் அரசு ஒன்றை அமைப்பதற்கான முயற்சி என்பதுமாகும். இது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான ஒரு கற்பனாவாதக் கருத்துருவமேயாகும். தமிழகத்திற்கும் இலங்கைத் தமிழருக்குமான பிணைப்பு வரலாற்றுக்காலத்துக்கும் முற்பட்டது. இந்நிலையில் ஒரு பகுதியில் அவ்வினம் ஒடுக்கப்படும் போது, அண்டையில் உள்ள தனது இனத்திடம் உதவி யை நாடுவது, அங்கிருந்து ஆதரவுக்குரல் எழுப்பப்படுவதும் அபூர்வமானதொன்றல்ல.

அதை வைத்துக்கொண்டு இருபகுதியினரும் இணைந்து ஒரு அகன்ற சாம்ராச்சியத்தை நிறுவ முயல்கின்றனர் என்பது யதார்த்தத்திற்குப் புறம்பான கற்பனையாகும். இதனைப் பிரச்சாரப்படுத்துபவர்கள் கூறுவதுபோல், அண்டைநாட்டிலுள்ள தமது இனங்களுடன் சேர்ந்து, உலகிலுள்ள இனங்களெல்லாம் தனி அரசையோ அன்றி சாம்ராச்சியங்களையோ நிறுவுவதானால் இன்று உலகில் 170க்கும் மேற்பட்ட அரசுகள் இருந்திருக்கமாட்டாது. மிகக்குறுகிய எண்ணிக்கையான அரசுகளே இருந்திருக்க முடியும். இவ்விடயத்தில் இந்தியாவுக்கு நேரடி அனுபவம் கூட உண்டு.

அதாவது வங்களாதேசம் என்ற அரசு உருவான போது, இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த மேற்கு வங்காள மாநிலம் பிரிந்துபோகவில்லை. அதற்கான முயற்சிகளும் இல்லை. வங்களாதேசமும் மேற்கு வங்காள மாநிலமும் சேர்ந்து ஒரு சாம்ராச்சியத்தை உருவாக்க முயலவில்லை. இத்தனைக்கும் வங்களாதேச மக்களும் மேற்குவங்காள மக்களும் தமிழக மக்களையும் ஈழத் தமிழ் மக்களையும்விட, நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருந்தவர்கள். சிறப்பாகக் கூறுவதானால் ஒன்றாகவே இருந்து பிரித்தானிய ஆட்சியாளர்களாற் பிரிக்கப்பட்டவர்கள். ஒரு தொடர் நிலப்பரப்புக் கொண்டவர்கள்.

ஆனால் இவற்றையெல்லாம் இந்தியாவில் ஆட்சியிலுள்ளவர்கள் புரியாது விட்டாலும், அன்றிப் புரிந்து கொண்டு அதற்கு முரண்பாடாக நடந்தாலும், இந்தியாவின் ஒருதரப்பினரால் இவ்விடயம் தற்போது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது மட்டுமல்ல, வெளிப்படுத்தப்பட்டுமுள்ளது.

அபாயச் சூழல் கொடுத்த, அந்த, அவசர இடம்பெயர்வு நடந்து முடிவடைந்து விட்டது.

5 இலட்சம் மக்களின் திடீர் அகதி நிலை

இந்த மக்களுக்கு உடனடி தங்குமிட வசதிகளை கொடுக்கக் கூடிய கட்டட வசதிகள் அந்த தென்மராட்சியின் இயலாநிலை

மழை–குளிர்–பனி என்ற பாதகமான காலநிலை

உணவுப் பற்றாக்குறை–மருந்தின்மை–குழந்தை உணவுகளுக்குத் தட்டுப்பாடு என்கிற நெருக்கடி நிலை

கழிப்பிட வசதியின்மை–நோய்த் தொல்லை என்ற சுகாதாரப் பிரச்சினைகள்,

இவற்றிற்கெல்லாம் இடம்பெயர்ந்த மக்கள் எப்படி முகங் கொடுக்கப் போகின்றார்கள்?

பெரும் அவலத்தையே ஏற்படுத்தி விடக் கூடிய இந்தப் பாரிய பிரச்சினைகளை புலிகள் இயக்கம் எப்படிச் சமாளிக்கப் போகின்றது?

அவநம்பிக்கையுடனும், ஏக்கத்துடனும், பீதியுடனும், அந்த நாட்களில், ஒவ்வொருவரும் மற்றவரைப் பார்த்துக் கேட்ட கேள்விகள் இவை.

ஆனால், ஆச்சரியத்தைத் தரும் வகையில் பதில்கள் அமைந்து விட்டது. தேசத்திற்கு ஒரு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

# இடம்பெயர் சமரை வென்றுவிட்டோம்

இத்தகைய ஒரு இடப்பெயர்வு இந்திய–பாகிஸ்தான் பிரிவினையின்போது நிகழ்ந்த வேளை பல்லாயிரம் பேர் பட்டினியாலும்–நோயாலும்–நெரிசலாலும் இறந்துபட்டனர்.

இத்தகைய ஒரு இடப்பெயர்வு அண்மையில் றுவாண்டா தேசத்தில் நடந்தபோது பல்லாயிரம் பேர் பட்டினியாலும்–நோயாலும் செத்து மடிந்தனர்.

இரண்டாம் உலகப் போரின்போது இருபக்கத்தையும் சேர்ந்த போர்க் கைதிகள்–இத்தகைய திடீர் இடம்பெயர்வுகளை–நீண்ட தூரத்திற்கு செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்கள் இருந்தன. திடகாத்திர உடலையும்–சவால்களை எதிர்கொள்ளக் கூடிய மனநிலையையும் கொண்டிருந்த அந்தப் படை வீரர்களே இத்தகைய பாரிய இடம்பெயர்வால் ஏற்பட்ட கஷ்டங்களுக்கும் – அதன் விளைவுகளுக்கும் முகங்கொடுக்க முடியாமல் பல நூற்றுக்கணக்கில் செத்து மடிந்ததாக வரலாறு சொல்கின்றது.

ஆனால், தமிழீழ வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விட்ட வலிகாம இடம்பெயர்வில் மேற்குறித்த மனித அவலங்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்பது முக்கிய விடயமாகும்.

இந்த வரலாற்று வெற்றிக்கு பிரதான காரணம் எமது மக்களே ஆகும். துன்பங்களை எதிர்கொள்ளத் துணிந்த அவர்களது மன நிலையும்–அந்த ஓரிரு நாட்களில் தங்களை தாங்களே காத்துக் கொண்டபடி, நம்பிக்கையை இழக்காது அவர்கள் வாழ்ந்த உறுதியான வாழ்க்கையும் அந்த வரலாற்று வெற்றிக்கு துணையாக நின்றன.

இதேவேளை பெருந்தொகை போராளிகளை ஈடுபடுத்தி புனர்வாழ்வுப் பணியாளர்களையும் – சுகாதாரத் துறையினரையும் ஒருங்கிணைத்து மக்களது அவசரத் தேவைகளை கணிசமான அளவுக்கு நிறைவேற்றிய புலிகள் இயக்கம், அந்த இடம்பெயர்வை திறம்படக் கையாண்டிருந்தது.

புலிகள் இயக்கத்தின் இந்த அரும்பணியை வெளிநாட்டு தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளில் சிலர் வெளிப்படையாகவே பாராட்டியிருந்தனர்.

இடம் பெயர்ந்தோரை ஒழுங்குபடுத்துவதில் போதிய பயிற்சியும்–அதற்கு வேண்டிய உபகரணங்களும் மற்றும் தேவையான அளவு பயிற்றப்பட்ட தொண்டர்களையும் கொண்டிருக்கும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் கூட, புலிகள் இயக்கத்தைப்போல, நிலைமையை திறமையாக கையாண்டிருக்க முடியாது என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஒரு முனையில்பெரும் சமர் ஒன்றிற்கு முகங்கொடுத்தபடி மறுமுனையில் இருப்பிட நிவாரண பணிகளுக்கான, சிக்கலான, நிருவாக வேலைகளிலும் ஈடுபடுவது என்பது சாதாரண விடயமல்ல. அதுவும், குறைந்தளவு வளங்களை உடைய ஒரு விடுதலை அமைப்பிற்கு இது சாத்தியமே அல்ல. ஆனால், புலிகள் இயக்கம் அதை சாதித்து முடித்துள்ளது.

அந்த நெருக்கடியான நாட்களில் தலைவர் பிரபாகரன் ஆற்றிய பணிபற்றி அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறும்போது சொன்னார்...

"ஒவ்வொரு நாளும் சமர்க்கள நிலையையும் மக்களது நிலைமைகளையும் கேட்டறிந்த தலைவர் அவர்கள் அடுத்து என்ன செய்யப்பட வேண்டும் என்று தளபதிகளுக்கும் மற்றும் துறைப் பொறுப்பாளர்களுக்கும் பணிப்புரைகளை வழங்கி வலிகாமச் சமரையும்–இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளையும் நெறிப்படுத்தினார்."

வலிகாமச் சமரில் ஒரு இராணுவ பின்னடைவை தமிழினம் சந்தித்துவிட்டது. ஆனால் இடம்பெயர்சமரை பெரு வெற்றியுடன் தமிழினம் நிறைவேற்றிவிட்டது.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து–வன்னிநோக்கிச் சென்ற மக்களுக்கு உதவும் சிறப்பு வேலைத் திட்டங்கள் தலைவரின் பணிப்பின் பேரில் விரைவுபடுத்தப்பட்டுள்ளது என்ற செய்தி மக்களுக்கு நிம்மதியையும்–மகிழ்ச்சியையும் அளித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திர தமிழீழமே நிரந்தர சமாதானத்துக்கு வழி சமைக்கும்

தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்படவேண்டும் என்று நினைக்கின்ற புத்திசாலிபோல, சிறிலங்காவில் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி சரி, அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் உள்ள பொதுசன ஐக்கிய முன்னணி சரி, சிறிலங்கா எப்படிக் குட்டிச் சுவராகப் போனாலும் சரி தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதில் கொடுக்கை வரிந்து கட்டிக் கொண்டு காரியமாற்றி வந்திருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஆயிரம் பேதங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களின் உரிமைகளை குழிதோண்டிப் புதைத்து அவர்களை ஆயுத முனையில் அடக்கி ஆளவேண்டும் என்பதில் இந்தக் கட்சிகள் இரண்டுக்கும் இடையில் பேதங்கள் இல்லை. வாதங்களும் இல்லை.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாகப் புரையோடிப் போய்விட்ட இனப் பிரச்சனைக்கு இரண்டு கட்சிகளுமே இராணுவத் தீர்வை நாடி வந்திருக்கின்றன.

**ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஆயிரம் பேதங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களின் உரிமைகளை குழிதோண்டிப் புதைத்து அவர்களை ஆயுத முனையில் அடக்கி ஆளவேண்டும் என்பதில் இந்தக் கட்சிகள் இரண்டுக்கும் இடையில் பேதங்கள் இல்லை. வாதங்களும் இல்லை.**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட ஐக்கிய தேசியக் கட்சி மேலானதென்றோ, ஐக்கிய தேசியக் கட்சியை விட சிற–லங்கா சுதந்திரக் கட்சி பறவாயில்லை என்றோ ஆராய்ச்சியில் இறங்குவது எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி என்ற ஆராய்ச்சியை ஒத்ததாகும்.

காரணம் இரண்டு கட்சிகளுமே பச்சையான சிங்கள பௌத்த இனவாதம் பேசுவதில் ஒன்றுக்கு ஒன்று விட்டுக் கொடுப்பதில்லை. ஒன்றுக்கு ஒன்று இளைத்ததும் இல்லை.

இலங்கைத் தீவு முழுவதும் சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தம் என்பதில் இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையில் எள்ளத்தனை கருத்து வேறுபாடும் கிடையாது.

சிங்களம் மட்டும் ஆட்சி மொழி, பௌத்த மதத்திற்கு முதலிடம், இந்த இரண்டிலும் ஐ.தே.கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கொள்கை வித்தியாசமில்லை.

இந்த இரண்டு கட்சிகளும் ஆட்சிக் கதிரையை பிடிக்க அல்லது ஆட்சியை காப்பாற்ற தமிழர்களது கட்சிகளுடன் ஒப்பந்தங்கள் எழுதி பின் அவற்றை கிழித்து எறிந்திருக்கின்றன.

இந்த இரண்டு கட்சிகளுமே தமிழினத்துக்குள் இருக்கும் ஐந்தாம் படையை பணமும் பதவியும் கொடுத்து தமிழின ஒழிப்புக்கு பயன்படுத்தி வந்திருக்கின்றன. வருகின்றன.

சிறிலங்காவின் பொருளாதாரம் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இராணுவச் செலவை ஈடுசெய்ய சிற–லங்கா அரசு வங்கிகளிடம் கடன் வாங்குகிறது. இதனால் வங்கிக் கடன் 20 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால் பணவீக்கம் ஒருபுறம். வேலையில்லாத் திண்டாட்டம் மறுபுறம் அதிகரித்துக் கொண்டு போகிறது. விலை வாசியும் எக்கச் சக்கமாக ஏறிக்கொண்டு போகிறது. அந்நிய முதலீடு 34 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இவை காரணமாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் பறந்து விட்டன.

தேர்தல் வாக்குறுதிகளில் மிக முக்கியமான வாக்குறுதி சிங்களவர் தமிழர்களுக்கு இடையிலான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இரு தரப்பிலும் இரத்த ஆறு ஓடுவதை நிறுத்தி யுத்தத்துக்குச் செலவாகும் கோடிக்கணக்கான பணத்தை அபிவிருத்திக்குத் திருப்பி விட்டு நாட்டில் சுபீட்சத்தையும் சமாதானத்தையும் ஒளி–மயமான எதிர்காலத்தையும் கொண்டு வருவது என்பதாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் அரசு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் தேனும் பாலும் ஓட வைப்பதற்குப் பதில் முழு நாட்டையுமே யுத்த சன்னத்துக்கு மாற்றியுள்ளது. இரத்த ஆறு கரையுடைத்துப் பாய்கிறது வடதமிழீழத்தில்.

தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு சனாதிபதி சந்திரிகா அரசு ஐம்பது கோடி பணச் செலவில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை யாழ்ப்பாணத்தின் மீது ஏவிவிட்டது.

இதன் விளைவாக 5 இலட்சம் தமிழ் மக்கள் அகதிக–ளாக்கப்பட்டதுதான் கண்ட மிச்சம்.

இப்போது மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தை பிடித்து வைத்துக்கொண்டு, அடுத்து என்ன செய்வதென்று

சேரமான்தேவி

தெரியாது சனாதிபதி சந்திரிகாவும் அவரது துணைப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் திண்டாடிக்கொண்டிரு க்கிறார்கள்.

கொழும்பிலுள்ள தமிழ் துரோகக் குழுக்களின் ஒத்துழைப்போடு ஊரையும் உலகத்தையும் ஏமாற்ற யாழ்ப்பாணத்தில் இடைக்கால நிர்வாகத்தை நிறுவும் முயற்சியில் தோல்வி கண்டுள்ளது.

**முதலாவது, இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் சிங்கள பௌத்த திவிரவாதிகளின் எதிர்ப்புக்குள்ளாகி வருகிறது. பிரதேச சபையை கலைக்கும் உரிமை சனாதிபதிக்கு உண்டு என்று திருத்தம் செய்யப்பட்டாலும் தீர்வுத் திட்டத்தை பௌத்த மத பீடாதிபதிகள் கடுமையாக எதிர்க்கப்போவதாக அறிவித்துள்ளார்கள். சிறிலங்கா அரசியல் சதுரங்கத்தில் பௌத்த பீடாதிபதிகள் வைத்ததே சட்டம் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசிய மாகும். சனாதிபதி சந்திரிகா தனது போர் மூலமும் சமாதானம் என்ற கோட்பாட்டின் மூலம் சற்று அடங்கிக் கிடந்த சிங்கள பௌத்த இனவாத சக்திகளுக்கு புத்துயிர் கொடுத்துவிட்டார் என்பதையே பீடாதிபதிகளின் போர்க்கோலம் தெளிவாக்குகிறது.**

வாக்குறுதிகளை அள்ளிவீசி யாழ்ப்பாணம் திரும்புங்கள் உங்களுக்கு அரிசியும், பருப்பும், கல்லும், சீமெந்தும் தருகிறோம் என்று தமிழ் மக்களுக்கு சனாதிபதி சந்திரிகா துண்டுப் பிரசுரங்கள் மூலம் விடுத்த அழைப்பும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை தமிழ் மக்களை மேலும் விடுதலைப் பாதைக்கு தள்ளிவிட்டிருக்கிறது.

எல்லோரும் ஆயுதம் தூக்கினால் ஒழிய அந்நிய சிங்களப் படையை தமிழீழ மண்ணில் இருந்து அடித்துத் துரத்த முடியாது என்று தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் எண்ணத் தலைப்பட்டுள்ளார்கள். இதன் விளைவாக ஆயிரக் கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு வருகிறார்கள்.

சிங்கள இராணுவத்தின் படையெடுப்பால் வீட்டுக்கு மதில் போடுவதில் பிரயோசனம் இல்லை, எங்கள் நாட்டுக்கு வேலிபோட வேண்டும் என்ற விடுதலை உணர்வு எல்லோரது இதயங்களிலும் முன்னர் எப்போதும் இல்லாதவாறு கரைபுரண்டு ஓடுகிறது.

'யாப்பனுவ பட்டினத்தை பிடித்து விட்டோம். அங்கு சிங்கக் கொடியை ஏற்றிவிட்டோம். சிங்கள மேலாண்மையை அமுல்படுத்தி விட்டோம்' என்று கொழும்பில் அந்தக் காலத்து அரசர்கள்போல் பெரிய 'வெற்றி விழா' கொண்டாடிய சனாதிபதி சந்திரிகாவின் அரசு தென் தமிழ் ஈழத்தில் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் சிங்கள இராணுவத்துக்கு ஏற்படும் ஆள், ஆயுத இழப்பையிட்டு கவலைகொள்ள ஆரம்பித்துள்ளது.

வடக்கு தலை, தெற்கு உடல், தலையை வெட்டிவிட்டால் உடல் தானாகவே இயக்கம் இழந்துவிடும் என்ற சிறி லங்கா இராணுவத்தினரதும் சிறிலங்கா அரசினதும் கணிப்பு பிழைத்துவிட்டது.

கிழக்கில் இப்போது இராணுவ இலக்குகள் மட்டும் அல்லாது சிறிலங்கா அரசின் பொருளாதார இலக்குகளும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வரு கிறது. சகல உயர் கட்டிட உச்சி மீதும் விமான எதிர்ப்பு பீரங்கிகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ராடர்கள் பொருத்தப்பட்டுவருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த மேலதிக பாதுகாப்புக்குச் சொல்லப்படும் காரணம் விடுதலைப் புலிகளிடம் சிறிய ரக விமானங்கள் இருப்பதாகவும் அதில் ஒன்று வட தமிழீழ வான்பரப்பில் பறந்ததை சிறிலங்கா விமானப் படை ஓட்டிகள் கண்டதாக வும் சொல்லப்படும் செய்தியே. அது மட்டும் இல்லாமல், பிரான்சில் ஒரு விமானத் தயாரிப்பு நிலையத்தில் வேலைபார்த்த நாலுதமிழர்கள் விமானப் பாகங்கள் அடங்கிய பெட்டிகளுடன் தலை மறைவாகி விட்டார்கள் என்ற செய்தியும் இந்த மேலதிகப் பாதுகாப்பு நடவடிக்கைக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

தொடர்ச்சி மறு பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திர தமிழீழமே...

7 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஒரு காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் போர் நடைபெறுகின்றமைக்கான அறிகுறியோ அசுமாத்தமோ கொழும்பில் வெளிப்படையாகத் தெரியவில்லை.

இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

கொழும்பில் அலரிமாளிகையைச் சுற்றியுள்ள வீதிகள் மூடப்பட்டுவிட்டது. முழத்துக்கொரு தடுப்புக் காவல் நிலையம் போடப்பட்டுள்ளது. இரவு பகல் இருபத்திநான்கு மணித்தியாலமும் ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் கொழும்பு நகரைக் காவல் செய்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு இவ்வளவு 'மரியாதை' கொடுக்கப்படும் என்று கொஞ்சக் காலத்துக்கு முன் யாரும் ஆரூடம் சொல்லியிருக்க முடியாது.

இராணுவ ரீதியாக முற்றுகைக்கு உள்ளாகி இருக்கும் சிறிலங்கா அரசு அரசியல் முற்றுகை ஒன்றுக்கும் உள்ளாகியுள்ளது.

முதலாவது, இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் சிங்கள பௌத்த தீவிரவாதிகளின் எதிர்ப்புக்குள்ளாகி வருகிறது. பிரதேச சபையை கலைக்கும் உரிமை சனாதிபதிக்கு உண்டு என்று திருத்தம் செய்யப்பட்டாலும் தீர்வுத் திட்டத்தை பௌத்த மத பீடாதிபதிகள் கடுமையாக எதிர்க்கப்போவதாக அறிவித்துள்ளார்கள். சிறிலங்கா அரசியல் சதுரங்கத்தில் பௌத்த பீடாதிபதிகள் வைத்ததே சட்டம் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியமாகும். சனாதிபதி சந்திரிகா தனது போர் மூலமும் சமாதானம் என்ற கோட்பாட்டின் மூலம் சற்று அடங்கிக் கிடந்த சிங்கள பௌத்த இனவாத சக்திகளுக்கு புத்துயிர் கொடுத்துவிட்டார் என்பதையே பீடாதிபதிகளின் போர்க்கோலம் தெளிவாக்குகிறது.

இரண்டாவதாக ஐ.தே.கட்சி ஆட்சியிலுள்ள மத்திய மாகாண சபை, சப்பிரகமுவ மாகாண சபை சனாதிபதி சந்திரிகாவால் கலைக்கப்பட்டது மாகாண சபை அமைப்பை அதன் மூலம் கையளிக்கப்பட்ட அரசியல் பரவலாக்கலை கேலிக் கூத்தாக்கிவிட்டது. உத்தேச பிரதேச சபையும், ஆளும் கட்சி எதிர்க்கட்சி இரண்டுக்கும் இடையிலான அரசியல் கயிறிழுப்பில் அகப்பட்டு அரசியல் பரவலாக்கலை கேலிக்கூத்தாக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

அரசியல் தீர்வுத் திட்டத்தை சந்திரிகா பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு மேலும் காலம் தாழ்த்தாது சமர்ப்பிக்க வேண்டும் என்று கெஞ்சிக் கூத்தாடிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் மத்திய மாகாணம், சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கு நேர்ந்த கதியை கொஞ்சம் யோசித்துப் பார்த்திருக்க வேண்டும்.

மாகாண சபைகள் கலைக்கப்பட்டது சட்ட விரோதம் என அந்தச் சட்டத்தைச் சட்டமாக்கிய ஐ.தே.கட்சி அப்போது ஒப்பாரி வைத்தது.

மாகாண சபைத் திட்டத்தை தீவிரமாக எதிர்த்து மாகாண சபைத் தேர்தல்களை நீண்டகாலமாக பகிஷ்கரித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசியல் இலாபத்துக்காக மாகாண சபைகளைக் கைப்பற்ற சனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்தது.

ஆனால் இந்த இரண்டு கட்சிகளுமே தமிழ் மக்களின் அடிப்படைச் சனநாயக உரிமைகளை மறுப்பதிலும் அவர்களை ஆயுத முனையில் அடக்கி ஆள நினைப்பதிலும் எந்தவித வித்தியாசமும் இன்றி கைகோர்த்துக் கொண்டு செயல்படுகின்றன.

அதாவது சிங்கள பௌத்த இனவாதத்துக்கு வித்திட்டு அதற்கு தூபதீபம் காட்டி வளர்த்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே.கட்சியும் தமிழினப் பிரச்சனையில் தங்களுக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, தமிழர்களுக்கு சகுனப் பிழை ஏற்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

இந்த யதார்த்தத்தை தமிழீழ மக்கள் நன்றாக உணர்ந்து வைத்துக் கொண்டு, விடுதலைப் பாதையில், விடுதலைப் புலிகளின் தலைமையில், தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முழுமூச்சுடன் இறங்க வேண்டும். சுதந்திர தமிழீழமே தமிழ் மக்களின் நிரந்தர சமாதான வாழ்வுக்கு வழி சமைக்கும்.

# தமிழீழ மக்களின் இன்றைய தலைமையைப் பாதுகாத்து வலுப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழரினதும் கடமையாகும்

தமிழ்த் தேசியவாத வளர்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கு தவிர்க்க முடியாதது.

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் அதாவது 1921 இல் இருந்தே சிங்கள, தமிழ்த் தேசியவாதங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின.



அன்றிலிருந்து தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடரும் வரை, எழுச்சி பெற்ற சிங்களத் தேசியவாதம் தமிழ்த் தேசியவாதத்தை அழிக்க முற்பட்டது.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கான தலைமையாகத் தோற்றம் பெறும் வரை, எழுச்சி பெற்ற தமிழ்த் தேசியவாதம் வளர்க்கப்படவில்லை.

மாறாக அது அழிந்து செல்வதைப் பாதுகாக்கவும் முடியவில்லை.

அகிம்சை வழி முறையைப் பின் பற்றிய முன்னைய தமிழர் தலைமை, தமிழ்த்தேசியத்தைப் பாதுகாப்பதில் தோல்வி பெற்றதைத் தொடர்ந்து அல்லது செயலற்றுப் போனதைத் தொடர்ந்து இன்றைய தமிழர் தலைமை தோற்றம் பெற்றது.

இன்றைய தமிழர் தலைமை அரசியல்–இராணுவ அடித்தளங்களைக் கொண்டுள்ளது.

முன்னர் தமிழ் மக்களை வழிநடாத்தியவர்கள் அல்லது தமிழர் பிரச்சனை சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கும் மையங்களாக விளங்கியவர்கள், தமது போராட்டங்களில் இறுக்கமான கொள்கையைப் பின்பற்றவில்லை.

இதனால், காலத்திற்குக் காலம் சிங்கள அரசு பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றியது.

இந்த ஏமாற்று நிலைக்கு இன்றைய தலைமை ஒரு முற்றுப் புள்ளி வைத்துள்ளது.

உலக அரங்கிலேயே கட்டுப்பாடும், கொள்கைப் பற்றும், இலட்சிய உறுதியும் கொண்ட போராளிகள் விடுதலைப் புலிகள் எனவும் பிரபாகரன் சிறந்த ஒரு தலைவர் எனவும் சர்வதேசக் பத்திரிகைகள் செய்திகள் வெளியிடுகின்றன.

தமிழர்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அவர்களுக்கென ஒரு சொந்தப் பிரதேசம், பொருளாதாரக் கட்டமைப்பு, பண்பாடு உண்டு என்பதை வலியுறுத்தித் தமிழ்த் தேசத்தை மீட்டுப் பாதுகாக்கும் வரை, ஆயுதங்களைக் கீழே போடமுடியாது என இன்றைய தலைமை திடசங்கற்பம் பூண்டுள்ளது.

இக்கோரிக்கைகளைப் பேச்சுவார்த்தை மூலம் சிறிலங்கா அரசிடம் இருந்து பெறமுடியாது என்பதையும் உணர்ந்துள்ளது.

பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை வலுவிழந்து வருகிறது. ஏனெனில் இரண்டு முக்கிய சிங்களக் கட்சிகளான ஐ.தே.கட்சி, சிறிலங்காச் சுதந்திரக் கட்சி இரண்டையும் பொறுத்தவரை ஒரு கட்சியினால் எடுக்கப்படும் முடிவினை மறுகட்சி எதிர்த்தே தீரும். ஏனெனில் சிங்களத் தேசிய வாதமும், சிங்கள இனவெறியும் கடந்த காலங்களில் தமிழர் பிரச்சனைக்கான தீர்வினை மேற்கொள்ளத் தடையாக இருந்துள்ளது. இப்போதும் தடையாக இருக்கிறது.

இன்றைய தலைமையின் அரசியல்– இராணுவ வலு, தமிழர்களின் தாயகத்தை மீளப் பெறமுடியும் என்பதை நிரூபித்து வருகின்றது.

தமிழர்களின் இன்றைய பலமான அரசியல் – இராணுவ தலைமை இருக்கும் வரை, தமிழ் மக்கள் விரும்பாத ஓர் தீர்வினை எந்தவொரு சக்தியும் நிர்ப்பந்தித்து அமுல்படுத்த முடியாது.

சர்வதேச அரங்கில் தமிழர் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற உண்மையை வெளிக்கொணர்ந்த இன்றைய தலைமை உலகநாடுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தன் சொந்த மக்களுக்காக, தன் சொந்த நாட்டில் இருந்து கொண்டு போராடும் தலைவர் பிரபாகரன் அரசியல்– இராணுவ நிலைமைகளை நன்கு கவனத்தில் எடுத்து மூல உபாயத் திட்டங்களை வகுத்துச் செயல்பட்டு வருகிறார்.

இன்று பிரபாகரன் ஒரு தனி மனிதன் அல்ல. கொள்கைப்பற்றும். இலட்சிய உறுதியும் கொண்ட ஒரு தேசிய இனத்தின் தலைவர்.

இத்தேசியத் தலைவரின் தலைமையிலேயே தமிழினம் சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகித்துத் தனது தாயகத்தை மீட்டெடுக்கும்.

சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட விடுதலை

**தமிழர்களின் இன்றைய பலமான அரசியல் - இராணுவ தலைமை இருக்கும் வரை, தமிழ் மக்கள் விரும்பாத ஓர் தீர்வினை எந்தவொரு சக்தியும் நிர்ப்பந்தித்து அமுல்படுத்த முடியாது.**

இயக்கத் தலைவர்களை விடத் தலைவர் பிரபாகரனின் அர்ப்பணிப்பு, தியாகங்கள் அளப்பரியன.

தலைவர் பிரபாகரனின் நேரடிவழி நடத்துதலும், கொள்கைத் திட்டமிடலும், இராணுவச் செயற்பாடுகளும் சிறிலங்கா அரசின் தந்திரங்களைச் சீர் குலைத்து வருகின்றன. சிறிலங்கா அரசு தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை இன்று உணர்ந்துள்ளது.

இதனால் இன்றைய தமிழர் தலைமையைப் பாதுகாத்து. வலுப்படுத்த வேண்டியது ஒவ்வோர் தமிழரினதும் கடமையாகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிமுக்கிய கட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம்

இடம் பெயர்ந்த 500,000 மக்களையும் உணவு மருத்துவ வதிவிட அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி அவர்களை இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை நோக்கி நகர வைக்க சிறிலங்கா திட்டம் தீட்டுவதாகத் தெரியவருகிறது.

அத்துடன் சிங்களக் காடையர்களை ஆயுதமயப்படுத்தி யாழ் குடாநாட்டில் குடியமர்த்தி இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை தன்மயப்படுத்தலாம் எனவும் சிறிலங்கா சிந்திப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாண படையெடுப்பின் அரசியல் இராணுவ நோக்குகள் விடுதலைப் புலிகளால் முறியடிப்பு! கல்லறையை எதிர்பார்த்து சிங்கள இராணுவம். இதனால் உடனடி ஆட்சேர்ப்பில் சிறிலங்கா!

ஆக்கிரமிப்பாளனை அடித்து விரட்ட அனைத்துத் தமிழர்களதும் இயலுமான எல்லா உதவிகளும் உடன்தேவை!

தமிழீழ விடுதலைப் போராட்டம் அதிமுக்கிய காலகட்டமொன்றை எய்தியுள்ளது. யாழ்ப்பாண மக்களை இராணுவ அழுத்தங்கள் கொண்டு விடுதலைப் புலிகளை விட்டுப் பிரித்துத் தனிமையாக்கி அரசியல் அடிமைப்படுத்த நினைத்த சந்திரிகாவின் அரசியல் நோக்கும், பல்லாயிரம் படையினரைப் பலகோடி ரூபா பெறுமதியான சுடுதிறன் உடன் விடுதலைப் புலிகளுடன் நேரடி மோதலை ஏற்படுத்தி அவர்களைப் பலமிழக்கச் செயதல் வேண்டும் எனும் சிறிலங்காவின் இராணுவ நோக்கும், ஏககாலத்தில் விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதனால் விடுதலைப் புலிகளுக்கு பலத்த இழப்புக்களையோ அல்லது பலவீனத்தையோ எதிர்பார்த்தவாறு ஏற்படுத்த முடியாமல் தான் பறித்த குழிக்குள் தானே விழுந்து பலத்த ஆளணிச் சேதங்களையும் ஆயுத தொழில் நுட்ப இழப்புக்களையும் சந்தித்து நிற்கிறது சிறிலங்கா இராணுவம்.

ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை தன் வரட்டுக் கௌரவத்திற்காகப் பலியிட்டு யுத்தம் செய்யும் சந்திரிகா, கட்டாந் தரைகளிலும் வெட்டவெளிகளிலும் நின்று சிங்களக் கொடியை மாமன் அனுருத்த தூக்கிப் பிடிக்க அதைப் பார்த்து மகிழும் சந்திரிகா, இதுவே எங்கள் சாதனையென வானொலியிலும் உரையாற்றுகின்றார். எல்லாமே முடிந்து விடும் என்பதுபோல் பகிரங்க மன்னிப்பு பற்றிப் பேசி உலகை ஏமாற்றப் பார்க்கிறார்.

இதனால் உண்மை நிலையை விளங்காத சிங்கள பௌத்த பேரினவாதிகள் இலங்கைத் தீவு முழுவதும் தமிழர்களைக் கேலி கிண்டல் செய்து அடிமைகள் போல் நடத்தவும் முற்படுகின்றனர். சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கேவலமான செயல்களுக்கு உதாரணமாகக் கம்பளை முத்துமாரி அம்மன் கோவில்மேல் சிங்கக்கொடியை ஏற்றியுள்ளனர். அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள், திருமணம் மற்றும் மரணச் சடங்குகளிலும் கலந்து கொள்கையில் சுற்றி வளைத்து கைது செய்யப்படுகின்றனர். மலையகம் முழுவதும் இனரீதியான அச்சுறுத்தல் தமிழருக்கு நாளாந்த அனுபவமாகி வருகிறது.

கொழும்பில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாகச் சந்தேகத்துக்குரியவர்களாகவும் எதிரிகளாகவும் கருதப்படுகின்றனர். வவுனியாவில் நிரந்தர வசிப்பிடம் உள்ளவருக்கு மட்டுமே கொழும்பு வரச் சிறிலங்கா அனுமதி வழங்கத் தொடங்கியுள்ளது. இதற்கிடையில் அநுருத்த ரத்வத்த கொழும்புக்கு வரும் தமிழர்கள் வீடுகளில் தங்கமுடியாதெனவும் பொது மண்டபங்களைத் தாம் ஒழுங்கு செய்யப் போவதாகவும் கூறியுள்ளார். இதன்மூலம் அகதிமுகாம்கள் என்ற பெயரில் தமிழ் மக்களை ஒன்றுதிரட்டி பின்னர் பலவந்தமாக தம்மால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் குடாநாட்டின் பகுதிகளுக்குக் கொண்டு சென்று குடியேற்ற சிறிலங்கா திட்டம் தீட்டிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் தாண்டிக்குளம் ஊடாக யாழ் செல்ல வரும் பயணிகளையும் இவ்வாறே சிறிலங்கா தடுத்து கப்பல்களில் ஏற்ற முயல்வதாகவும் இவர்களையும் யாழ் பிரதேசத்தில் வலுக்கட்டாயமாகக் குடியமர்த்தச் சிறிலங்கா திட்டமிடுவதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இடம்பெயர்ந்த சுமார் ஐந்து இலட்சம் மக்களையும் உணவு, மருத்துவ, வதிவிட அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி அவர்களை இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை நோக்கி நகரவைக்க சிறிலங்கா திட்டம் தீட்டுவதாகவும் தெரியவருகிறது. அத்துடன் சிங்களக் காடையர்களை ஆயுதமயப்படுத்தி யாழ் குடாநாட்டில் குடியமர்த்தி இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களைத் தன்மயப்படுத்தலாம் எனவும் சிறிலங்கா சிந்திப்பதாகத் தெரிகிறது.

ஆயினும் சிறிலங்கா இராணுவம், உறுதியின் உறைவிடமான மாவீரர் குருதியில் குளித்த மண்ணில், தம்மால் நிலைத்து நிற்க முடியாது என்பதைத் தெளிவாக உணர்வதினால் தங்கள் கல்லறையை நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் உளநிலையுடன் காணப்படுவதாக இராணுவ ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. இதனைச் சமாளித்து தமது படையினரை உசார்ப்படுத்தும் வகையில் பத்தாயிரம் ஆளணியினரை சிறிலங்கா திரட்டி எட்டுவார பயிற்சியின் பின் தமிழ்ப் பிரதேசங்களில் நிலைநிறுத்த முயற்சிக்கிறது. எனினும் விடுதலைப் புலிகளின் மண்ணில் பெருந்தொகையான இராணுவத்தினரைக் குவிப்பது விடுதலைப் புலிகளின் பொறிக்குள் சிங்கள இளைஞர்களின் தலையை வைப்பதற்கு ஒப்பான செயலென சிறிலங்காவின் எதிர்க்கட்சி வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். வடக்கு–கிழக்கு மாகாணத்தில் இதுவரை சிறிலங்கா இராணுவத்தால் முற்றாக ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமென எதுவுமில்லையெனவும் காலத்துக்குக் காலம் சிறிலங்கா அரசால் தனது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமெனக் கூறப்படும் பரதேசங்கள் எல்லாவற்றிலும் கிழக்கு முதல் தீவுப்பகுதிவரை மாதகல் முதல் காங்கேசன்துறை வரை சிறிலங்கா கடும் இழப்புக்களைச் சந்தித்து வருவதைக் குறிப்பிட்ட சிங்கள சமூகத் தலைவர்கள் பலர் யாழ் குடாநாட்டுக்குள் படைகளைக் குவித்துக் கிழக்கை இழந்ததும் அல்லாமல் விடுதலைப் புலிகளின் பெருந் தாக்குதல்களுள் பெருந்தொகையான சிங்களவர்களைச் சிக்கவைத்தும் விட்டதாகச் சந்திரிகா அரசைக் குறைகூறுகின்றனர்.

"கோப்பன்கேனில்" சமாதானக் கதைகளையும், நியூயோர்க்கில் போர்ப் பிரகடனத்தையும் செய்யும் சிறிலங்கா சனாதிபதியின் முன்னுக்குப் பின்னான போக்கு தெளிவாகி வருவதினால் சர்வதேச சமூகத்திடையே சந்திரிகாவிற்கு இருந்த செல்வாக்கு சரியத்தொடங்கிவிட்டது. இதனால் முதலீட்டாளர்களின் தொகை குறையத் தொடங்கியுள்ளது. இதனால் பங்குச் சந்தையில் சிறிலங்கா படுமோசமாக வீழ்ச்சியடைந்து வருகிறது. கொலன்னாவை எண்ணெய்க் குதங்கள் நாசமாக்கப்பட்டதையடுத்து மேலும் சிக்கலான சூழ்நிலையை பொருண்மியத்தில் சிறிலங்கா அனுபவித்து வருகிறது. சமீபத்தில் போர் தீவிரமடைந்துள்ளது. ஆனால் முதலீட்டாளர்கள் அஞ்சத்தேவையில்லை என அவசர அவசரமாக சிறிலங்காவின் அமைச்சரான பீரிஸ் முதலீட்டாளர்களை அழைத்துச் சமாதானப் படுத்தினார். ஆயினும் அவர் அழைப்பிதழ் அனுப்பிய 92 வெளிநாட்டு முதலீட்டாளர்களில் 52 பேர் மட்டுமே இக்கூட்டத்திற்கு வருகை தந்தமை சிறிலங்காவிற்கு பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. உல்லாசப் பயணிகள் வருகை முற்றாக தடைப்பட்டது போல்காட்சி அளிப்பதாக கொழும்பு உல்லாசப் பயணத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பிரித்தானிய பாராளுமன்றத்திலும் பிரித்தானிய தொலைக்காட்சியிலும் சிறிலங்காவிற்கு உல்லாசப் பயணிகள் செல்வது மிகுந்த ஆபத்தானது என அறிவித்துள்ளார்கள். இதற்கிடையே 1995க்கு திட்டமிடப்பட்ட சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவு எதிர்பார்த்ததைவிட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் சிறிலங்கா அரசு பொருண்மிய ரீதியாகப் போரை நடாத்துவதில் அதிக சிரமங்களை எதிர்நோக்கத் தொடங்கியுள்ளது.

இதற்கிடையே விடுதலைப் புலிகள், புதிய நிலைகளிலிருந்து, புதிய உத்திகளுடன், பாரிய தாக்குதல்களை மேற்கொள்வதற்கான திட்டங்களை ஆறுதலாகவும் ஆழமாகவும் தீட்டி வருவதாக சிறிலங்கா வட்டாரங்களில் பெரும் அச்சம் எழுந்துள்ளது. சிறிலங்காவின் யாழ்ப்பாணம் மீதான ஆக்கிரமிப்புப் போரினால் நூற்றுக் கணக்கான இளைஞர்கள், பெண்கள் ஏன் குடும்பமாக இருப்பவர்கள் கூட தினம் தினம் தாயக மண்மீட்புப் போரிற்கு இணைந்து கொண்டிருக்கின்றனர்.

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் தினச் செய்தியில் "எவ்வளவு இளைஞர்கள், யுவதிகள் எமது அணியில் விரைவாக சேர்கிறார்களோ அவ்வளவு விரைவில் எதிரியை தமிழீழ மண்ணில் இருந்து ஓட விரட்டி அடிப்போம்" எனக் கூறி விடுத்த தேசக் கடமைக்கான அழைப்பை ஏற்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், உயர்பீட மாணவர்கள் எனப் பல தரப்பினரும் விடுதலைப் புலிகளுடன் இணைகின்றனர்.

இந்நேரத்தில் புகலிட நாடுகளில் வாழும் தமிழீழத்தவர்களுக்கு எமது தேசியத் தலைவர் விடுக்கும் செய்தி "மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் எவ்வித உதவியுமின்றி ஒரு இன அழிப்புப் போரை நாம் தனித்து நின்று முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான நேரத்தில் உலகத் தமிழினத்தின் உதவியையும், ஆதரவையும் நாம் வேண்டி நிற்கிறோம். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் எமது உரிமைப் போருக்குக் குரல் கொடுப்பதுடன் தம்மாலான உதவிகளையும் செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்...." தேசியத் தலைவர் அவர்கள் புகலிட வாழ் தமிழீழத்தவர்களுக்கு உள்ள தார்மீக கடமையை தமிழினத்தின் விடிவிற்காய் மரணித்தவர்களை நினைவுகூர்ந்த நாளில், சகலருக்கும் உணர்த்துகின்றார். எனவே காலம் கடந்துவிட முதல் தமிழீழ மக்கள் அனைவரும் எமது விடுதலையை வென்றெடுப்பதற்காக நாம் என்ன செய்தோம் என கேட்போமானால், இதற்கான விடை தேசியத் தலைவர் அவர்கள் விடுத்திருந்த கோரிக்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கப்படுவதாய் இருக்கும். எனவே தாயகத்தில் எமது முழுத் தமிழீழ சமூகமே மண்மீட்புப் போரில் ஈடுபடத் தொடங்கியுள்ளதால், இறுதி இலட்சியமாம் தமிழீழம் என்ற உயிர்மூச்சுடன் காவியமாகிவிட்ட ஆயிரமாயிரம் மாவீரர்களது கனவை நனவாக்க எல்லோரும் ஒன்றாய் இணைவோம். குரல் கொடுப்போம்!

> "மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் எவ்வித உதவியுமின்றி ஒரு இன அழிப்புப் போரை நாம் தனித்து நின்று முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான நேரத்தில் உலகத் தமிழினத்தின் உதவியையும், ஆதரவையும் நாம் வேண்டி நிற்கிறோம். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் எமது உரிமைப் போருக்குக் குரல் கொடுப்பதுடன் தம்மாலான உதவிகளையும் செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்...."
>
> –தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன்

www.tamilarangam.net

நாவண்ணன்



# வேதனை வித்துக்கள்

அவர்கள் சென்று விட்டனர். அம்மாவின் உடம்பை என்ன செய்வது? முதலில் அதனை எப்படியாவது அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும். உழவு இயந்திரத்தில் அனுப்பி வைப்பதுதான் அப்பொழுது உடனடியாகச் செய்யக்கூடியது என்று முடிவுக்கு வந்தார். ஏனெனில், அதையும் தவறவிட்டால் தனியே பிணத்தை வைத்துக்கொண்டு எதுவும் செய்ய முடியாது. வைத்தியசாலைக்கு உழவியந்திரத்தில் அனுப்பி விட்டால் அங்கு சவச்சாலையில் உடல் இருக்கும். நாளையோ மறுநாளோ அதற்குரிய கடமைகளைச் செய்யலாம் என்ற தீர்மானத்தில் தானும் சேர்ந்து தாயின் பிணத்தை ஏற்றிவிட்டார். பிணங்களோடு பிணமாக–அந்தப் பிணக்குவியலில் ஒரு பிணமாக– அன்னையின் பிணமும் அடுக்கப்பட்டது. உழவு இயந்திரம் புறப்பட்டது. பெட்டி ஓடிய வேகத்தில் வீதியின் பள்ளம் மேடுகளில் சக்கரம் இறங்கிக் குலுங்கியபோது, சிதைந்து கிடந்த பிணங்கள் ஒன்றோடு ஒன்று இறுகின. அந்த இறுக்கத்தால் நசுங்குண்டு, தசைகள் பிழிபட்டுக் கசிந்த இரத்தம், உழவியந்திரப் பெட்டியில் இருந்து வழிந்து வீதியிலே கோலமிட்டுச் சென்றது.

பல்லாக்கு ஊர்வலத்தில்
பசுந்தமிழர் பிணங்கள்
எல்லாமே போச்சுதென்று
ஏங்கியழும் மனங்கள்
கொல்லாமை போதித்த
கௌதமனின் கூட்டம்
கொலை வெறியில் ஆடுதையோ
கொடுங்கோலர் ஆட்டம்!

குமாரின் குடும்பத்தவர் சின்னப்பா வீதியில் ஒரு வீட்டிலிருப்பதாகத் தகவல் கிடைத்தது. குமார் அவர்களுடன் போய்ச்சேர்ந்துகொண்டார். 11ஆம் திகதி, யாழ்.வைத்தியசாலைச் சவச்சாலையிலிருந்து அம்மாவின் உடல் துண்டி மயானம் கொண்டுசெல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

தேவகுமார் தனது அனுபவங்களைச் சொல்லிமுடித்தபோது ஆசிரியர் ஜெயக்குமார், "இந்த ரக்ரரில் ஏத்தின விசயத்தாலே ஆட்கள் சரியாய்ப் பதட்டப்பட்டிட்டினம். காப்பாற்றக்கூடிய நிலையில் குற்றுயிராக் கிடந்தவர்களையும் பிணங்களோடை தூக்கிப் போட்டதால, அதுகளும் நசிஞ்சு செத்துப் போயிருக்குதுகள். உதாரணத்துக்கு, கோபாலகிருஸ்ணனின் மனைவி ரேவதியும் மூன்று பிள்ளைகளும், மாமியார் நாகரத்தினமும் கோயிலிலை இருந்திருக்கினம். ரேவதி அந்தக் கோயிலிலை வைச்சுக் கடலை விக்கிறவ. புக்காரா போட்ட குண்டில கிழவியும், மகளும், வினோதினி என்ற ஐஞ்சு வயதுப்பிள்ளையும் அந்த இடத்திலேயே சரி. கபில்ராஜ் என்ற அந்த எட்டுவயதுப் பெடியன் சாகேல்ல. இவங்கள் அவசரத்தில அந்தப் பெடியனையும் ரக்ரரில போட்டு, அவனுக்கு மேல பிணங்களையும் போட்டிட்டாங்கள். பாவம் அந்தப் பிள்ளை செத்துப் போச்சுது. அந்தக் குடும்பத்தில ஒரே ஒரு பெடியன் மட்டும்தான் இப்ப தப்பியிருக்குது. அந்தப் பிள்ளை இனி இருந்தும் பிரயோசனம் இல்லை. ஏனென்றால் இடுப்புக்குக் கீழ செயலிழந்து போயிற்றுதாம். இனி அது சுகமாகிறது கஸ்டம் என்று ஆஸ்ப்பத்திரியில சொன்னவையாம். பாவம்! கோபாலகிருஸ்ணனுக்கு அந்தப் பெடியன் சீவியமெல்லாம் சுமைதான். இன்னொன்று அந்த முருகன் கோயிலுக்குள்ள, அந்தக் கோயில் பூசகர் சிவமுனியும் அன்றைக்குச் செத்துப்போனார்."

"கோவிலுக்கு மேல் குண்டு விழவில்லையென்று அரசாங்கம் சமாதானம் சொல்லுறதைப்பற்றி என்ன நினைக்கிறீங்கள்?" இது டேவிட் எழுப்பிய கேள்வி.

"நான் துவக்கால சுட்டது மெய் காயம்தான் ஏற்பட்டது. ஆள் சாகவில்லைத்தானே என்று" ஒரு கொலைகாரன் சமாதானம் சொல்லுறமாதிரி இருக்குது இது. கோவிலுக்குள்ளேயும் செத்திருக்கினம். கோவில் போர்ட்டிக்கோவிலயும், வலது பக்க விறாந்தையிலும் இருந்த மக்கள் செத்திருக்கிறாங்க. கோவில் வாசலுக்குள்ள, பள்ளிக்கூட வாசலில, கோவில் வளவுக்க, சென்பீற்றர்ஸ் சனசமூக நிலையத்துக்கு அருகில, கோயில் முற்றத்தில சமைச்சுக்கொண்டிருந்ததுகள் செத்திருக்குதுகள். மூன்று சில்லு வண்டில்ல வந்த ஒரு காலில்லாத பெடியன் கோவில் வளவுக்குள்ள தானே செத்தவன்.........!"

முச்சக்கர வண்டியில வந்த அந்தச் சிறுவனைப்பற்றி ஆசிரியர் குறிப்பிட்டபோது, சங்கானைக் கிராமசேவகர் ஒருவர் அந்தப் பையனைப்பற்றித் தந்த தகவல் நினைவுக்கு வந்தது.

அந்தப் பையன் குடத்தனையைச் சேர்ந்தவன். அவனுடைய பெயர் ஞானசேகரன். வயது பன்னிரண்டு. தகப்பன் கந்தன் ஒரு தொழு நோயாளி. 27.08.93 இல் ஷெல் விழுந்ததில் அவனுடைய ஒரு காலை இழந்தான். பின்னர் ஜெய்ப்பூர் கால் வழங்கப்பட்டது. புனர்வாழ்வுக் கழகத்தால் முச்சக்கர வண்டி வழங்கப்பட்டு, விக்டோறியாக் கல்லூரியில் படித்து வந்தான். 9ஆம் திகதி ஷெல் வீச்சுக்குப் பயந்து நவாலிக் கோயிலுக்கு வந்து, கோவில் சுவரோரமாய் தனது முச்சக்கர வண்டியில இருந்தபொழுதுதான் 'புக்காரா' குண்டு வீசியது. தனது வண்டியிலிருந்து தூக்கியெறியப்பட்ட நிலையில் ஞானசேகரன் காலமானான். பாவம்! தனது ஒரு கால் இழந்த நிலையிற்கூட அவனால் வாழ முடியவில்லை.

ஆசிரியர் ஜெயக்குமார் தொடர்ந்து, "தேவகுமாருடைய வீட்டுக் கிணற்றுக்கும், கோயிலுக்கும் சில அடி தூரம்தான் வித்தியாசம் கிணற்றுக்குள்ள விழுந்தகுண்டு, கொஞ்சம் தள்ளி நிலத்தில் விழுந்திருந்தால், கோயில் வளவுக்குள்ள இன்னும் நூற்றுக்கணக்கான பிணங்கள் விழுந்திருக்கும். கோயில் வாசலுக்குள்ள தானே ஏராளமான பிரேதங்கள் கிடந்தன? உங்களுக்கு வேணுமெண்டால் சொல்லுங்கோ, கோயிலுக்குள்ளேயும், கோயில் வளவுக்குள்ளேயும் எந்த எந்த இடத்தில் எத்தனை பிரேதங்கள் கிடந்தன என்று படம்கீறிக் குறிச்சுத்தாறம்" என்றார்.



அன்றைய பேட்டிகளை முடித்துக்கொண்டு புறப்பட்டோம்.

மோட்டார் சைக்கிளிற் சென்று கொண்டிருந்தபோது, ஞானசேகரன் விக்டோறியாக் கல்லூரி மாணவன் என்ற நினைவு வரவே இந்திரகுமாரின் நினைவும் வந்தது.

"மாஸ்ரர், சங்கானை விதானையார் சொன்ன இந்திரகுமாரும் விக்ரோறியாக் கல்லூரி மாணவன்தானே? என்று டேவிட்டைக் கேட்டேன். பின்னாலிருந்த அவர் "ஓமோம்" என்றார்.

இந்திரகுமாருக்காகவும், அவன் குடும்பத்திற்காகவும் என் மனம் இரக்கப்பட்டது. அவனுடைய தந்தை பத்மநாதனை ஏழு வருடங்களுக்கு முன், கடலில் வைத்து 'ஹெலி' சுட்டுக்கொன்று விட்டது. அவனுடைய தாயாரும் இரண்டு சகோதரிகளும் இவனையே தங்கள் ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். கஷ்டத்துள்ளும் அவன் படிப்பைத் தொடரவைத்து வந்தனர். ஆனால், நவாலிக் குண்டு வீச்சினால் அவர்கள் நம்பிக்கையே தகர்ந்து போச்சு. அந்த விதவைத் தாயையும் சகோதரிகளையும் நடுத்தெருவில் தவிக்கவிட்டு, கொடியவர்கள் அவனைக் கொலைசெய்து விட்டார்கள். இந்திரகுமார் ஒருவனுக்கு மட்டும்தானா இந்தநிலை........? எத்தனை விதவைகள்......... எத்தனை அநாதைகள்........!

## அத்தியாயம் 4

தெல்லிப்பளை பிரதேசசபைச் செயலகம் தற்பொழுது திருநெல்வேலியில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த இடத்திற்குப் போன போது ஆச்சி அடிக்கடி செல்லும் பழமொழி நினைவுக்கு வந்தது. "கோழி மேய்த்தாலும் கோறணமேந்துக்குக் கீழ"........ ஆனால், இங்கே அந்தக் கோறணமேந்துச் செயலகமே கோழிக்கூட்டுக்குள்ளே இயங்கிக்கொண்டிருக்கின்றது. என்ன செய்வது, அரச பயங்கரவாதம் அரசுச் செயலகங்களையே அகதிகளாக்கி விரட்டியிருக்கிறது! அதற்குள் நுழையும்போதே கோழித்தீன் மணம் கமகமத்தது.

அளவெட்டியில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இடம்பெயர்ந்து விட்டார்கள். அவர்களது தற்காலிக முகவரிகளைத் தோடிப்பிடிப்பது இயலாத காரியமாக இருந்தது. ஆனால் உயிரிழப்புகளையும், பொருள் அழிவுகளையும் சந்தித்தவர்கள் எல்லாரும் பதிவு செய்துகொள்வதற்காக நிச்சயம் அங்குவருவார்கள். அல்லது எல்லாக் கிராம உத்தியோகத்தர்களையும் அங்கு சந்திக்க முடியுமாகையால், பாதிக்கப்பட்டவர்களின் தற்காலிக முகவரிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை. என் நம்பிக்கை வீண்போகவில்லை–நான் சென்ற அந்த நாளும் மிகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொருத்தமானதாக இருந்தது.

நான் யார் என்பதையும் வந்த நோக்கத்தையும் அறிவித்தவுடன் அங்குள்ள ஊழியர்களும், கிராம உத்தியோகத்தரும் மனமுவந்து உதவ முன்வந்தார்கள். அந்தச் செயலகத்தின் ஒரு பகுதியில் உள்ள மேசையில் நாற்காலியையும் தந்து உட்காரவைத்து விட்டார்கள். மரணங்கள், இழப்புக்களைப் பதிவுசெய்ய வருபவர்களை, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் தங்கள் பதிவுகளை முடித்துக்கொண்டு என்னிடம் நேரடியாக அனுப்பிக்கொண்டிருந்தார்கள். வந்தவர்களில் பெரும்பாலானோர்க்கு நான் யார்? இன்னார் என்ற அறிமுகம் செய்ய வேண்டிய தேவை இருக்கவில்லை. என்னையும் ஒரு அரச உத்தியோகத்தர் என நினைத்தே தகவல்களைத் தந்து கொண்டிருந்தார்கள்.

✏ ✏ ✏

சறோஜினி மகாலிங்கம் என்ற அந்த இளம் விதவை முகத்திலே சோகக் களை. பேசும்போது அடிக்கடி கண்கள் கலங்கி குரல் தளதளக்கிறது. தினமும் பொட்டணிந்திருந்த அந்த நெற்றி

வந்துவிட்டால், சுன்னாகப் பகுதியிலாவது தொழிலைச் செய்து பிழைத்துக்கொள்ளலாம் என்பது அவரது நம்பிக்கை. ஆனால் மனைவி சறோஜினி உட்பட எல்லாருமே அதற்கு தடைவிதித்து விட்டார்கள். என்றாலும் உழைத்துச் சாப்பிட்ட உடம்பல்லவா? மனம் கேட்கவில்லை. அன்றையபொழுது ஒருமாதிரிக் கழிந்தது. மறுநாள் யார் தடுத்தும் அவர் கேட்கவில்லை. "அங்கை ஆமி ஒருவரும் இல்லை, நான் போய்ச் சாமான்களை எடுத்துக்கொண்டு வாறன்" என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டார்.

மகாலிங்கம் நம்பியது மாதிரி இராணுவத்தினர் எவரும் அவருடைய கண்ணிற் சந்திக்கவில்லைதான். அவரைப்போல வேறுசிலரும் போய்வந்து கொண்டிருந்தார்கள். "தான் மற்றவர்களின் சொல்லைக் கேட்டு நிற்காமல் வந்தது நல்லதாகப் போச்சு" என்று எண்ணியவராகக் கருவிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்து, அவற்றை எடுத்துக்கொண்டு திரும்பினார். போகும்போது இராணுவத்தினரைச் சந்திக்காதபடியால் அந்தப்பயமே இல்லாமல், மிகச் சாதாரணமாகவே சைக்கிளை மிதித்துக்கொண்டு வந்தார். அலுக்கைச் சந்தி தாண்டி வந்து விட்டார்.

"என்னையும் கொண்டு போங்கோ" என்று அவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். மீண்டும் அளவெட்டிப் பக்கமிருந்து வெடிச்சத்தங்கள் கேட்கவே, எல்லாரும் தத்தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுவது தவிர இன்னொருவரைக் கொண்டு ஓடும் அளவிற்கு நிலமை அங்கில்லை அதிலும் மகாலிங்கம் முற்றாக எழுந்திருக்க முடியாத நிலையில் கிடந்தார். மகாலிங்கம் உதவி கோரியவர்களில் ஒருவர் அவருக்குத் தெரிந்தவர். தம்பளையில் இருந்து வந்தார். சுன்னாகத்திலிருந்து அவரது மனைவி பிள்ளைகளுக்கு, மகாலிங்கத்தின் நிலைபற்றித் தகவல் கொடுக்க மட்டுமே அவரால் முடிந்தது. "குருவளை வைரவர் கோவிலடியில் மகாலிங்கத்தை ஆமி சுட்டுப் போட்டான். ஆளின்னும் சாகேல்ல. உயிரோடுதான் கிடக்கிறார். உங்களுக்கு அறிவிக்கச் சொல்லி என்னட்ட சொல்லி விட்டார். ஒரே செல்லடி. என்னால் ஒண்டும் செய்ய ஏலாமல் போயிற்று. நான் உங்களுக்குச் சொல்லலாம் என்றுதான் ஓடிவந்தனான்" என்றார் அவர்.

கடுமையான செல்வீச்சு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. என்றாலும் குற்றுயிராகக் கிடக்கும் மகாலிங்கத்தைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்ற பொறுப்பும் துடிப்பும்



# எத்தனை வீழ்ந்தன

அவர்களுக்கு

இன்று வெட்டவெளியாக இருக்கிறது என்பதற்கு அடையாள

திடீரென அலுக்கைச் சந்தியிலிருந்து மகாலிங்கத்தின்

இருந்தது.

மாக, நடுநெற்றியில் பொட்டிருந்த இடத்தின்தோல் வெளிறி வித்தியாசமாக இருக்கின்றது.

சறோஜினியின் கணவன் செல்லையா மகாலிங்கம் ஏற்கெனவே திருமணமானவர். ஒரு பெண்குழந்தை. மனைவி காலமாகவே சறோஜினியை மறுமணம் செய்திருந்தார். சறோஜினி மூலம் இன்னுமொரு பெண்ணுக்கும் தந்தையானார். பனை சீவுதலே அவரது தொழில்.

அளவெட்டி தெற்கு குருவளையில் இருந்த அவரது குடும்பம், 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து, தற்போது சுன்னாகத்தில் உள்ள மாதிரிக் குடியிருப்பில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இடம்பெயர்ந்து வந்துவிட்டாலும், அளவெட்டியில் இராணுவப் பிடிக்குள் இல்லாத பகுதிகளிலே மகாலிங்கம் தொடர்ந்தும் சீவல் தொழிலை நடாத்தி வந்தார். சீவல் மூலம் அன்றாடம் கிடைக்கும் வருமானத்திலேயே வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது.

தினமும் தனது தொழிலை முடித்துக்கொண்டு, கள்ளுவிற்பனை நிலையம்' அமைந்திருக்கும் இடத்தின் சொந்தக்காரனான இராசையாவின் வீட்டில்தான் தொழிற் கருவிகளை வைத்துவிட்டுச் சுன்னாகம் வருவது வழக்கம். ஆடி எட்டாந் திகதியும் அப்படித்தான், வழக்கம்போலத் தனது தொழிற் கருவிகளை வைத்துவிட்டு வந்திருக்கிறார். 9ஆம் திகதி 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கை ஆரம்பித்துவிட்டது. அந்தப் பகுதியை இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டது. அன்றாடம் உழைத்துச் சாப்பிடும் மகாலிங்கத்தின் குடும்பத்துக்கு இது மிகவும் கஷ்டமாகவிருந்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு வந்தார். எங்காவது தொழிலைச் செய்தால்தான் பிழைக்கலாம் என்ற நிலை.

14ஆம் திகதி போராளிகள் மேற்கொண்ட 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கை வெற்றி பெற்றதையிட்டு, மகாலிங்கத்துக்குப் பெரும் மகிழ்ச்சி. மறுநாள் 15ஆம் திகதியே அளவெட்டிக்குப் புறப்பட்டார். தொழிற்கருவிகளை எடுத்துக்கொண்டு

முதுகுப்பக்கமாகத் துப்பாக்கி முழக்கம் கேட்டது. மறுகணம் துப்பாக்கி ரவை அவரது இடதுகையைத் துளைத்துக் கொண்டு சென்றது. என்ன நடந்தது என்று தீர்மானிக்க முன்னரே மகாலிங்கம் சைக்கிளோடு விழுந்துவிட்டார். விழுந்த நிலையில் திரும்பிப் பார்க்கையில், அலுக்கைச் சந்தியில் நின்று இராணுவம் குறிவைத்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. இனியும் தாமதிப்பது ஆபத்து என்று முடிவெடுத்தவராக, எப்படியும் சைக்கிளோடு ஓடித் தப்புவது என்று துணிந்தார். வலது கையால் தூக்கி நிறுத்தி, உருட்டியபடியே ஓடத்தொடங்கினார்........

மறுபடியும் துப்பாக்கி கக்கியது. இம்முறை ரவை மகாலிங்கத்தின் முழங்காலைச் சிதைத்துவிட்டது. மேற்கொண்டு ஓடமுடியவில்லை. சைக்கிளைக் கைவிட்டு கீழே விழுந்தார். ஒரு கையும் ஒரு காலும் செயற்பட முடியாத நிலையில் தரையில் புரண்டார். துடிப்பு அடங்கும்வரை பாம்பை அடிப்பதுபோல் அடிக்க, அந்தச் சிப்பாய் நினைத்துவிட்டான்போலும்! இன்னுமொரு வேட்டு, அவன் துப்பாக்கியில் இருந்து பறந்து வந்து விலாவினில் புகுந்துகொண்டது. அசைய முடியாத நிலையில் மகாலிங்கம் அலமந்து கிடந்தார். ஆனால் உயிர் பிரியவில்லை. தொலைத்துவிட்ட சாதனையில் திருப்தியுற்ற இராணுவக் கொலைஞர்கள் சென்று விட்டார்கள்.

சிறிது நேரம் கழிந்து மீண்டும் ஒன்றிரண்டு பேர் அவ்வழியால் வரத்தொடங்கினர். வீதியோரமாகக் கிடந்த மகாலிங்கம்

மகாலிங்கத்தின் தங்கையின் கணவனும்–அக்காளின் மகனும் எப்படியாவது........ இவர்கள் போகுமுன் இறந்து போயிருந்தால் உடம்பையாவது கொண்டுவந்து சேர்ப்பது என்ற முடிவுடன், துணிந்து புறப்பட்டார்கள். ஒவ்வொரு செல் சத்தத்திற்கும் படுத்தும், பதுங்கியும் ஊர்ந்தும் அந்த இரண்டு இளைஞர்கள் குருவளை ஞானவைரவர் கோவிலடியைப் போய்ச்சேர்ந்தார்கள். அப்பொழுதும் மகாலிங்கத்தின் உயிர் பிரியவில்லை. கடின உழைப்பாளியின் உடல், அவ்வளவு இரத்தப்பெருக்கின் பின்னரும் ஈடுகொடுத்து, உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தது. காலை 7.30 மணியளவில் சுடப்பட்ட மகாலிங்கத்தை மீட்டுக்கொண்டு வரும்போது, நேரம் பகல் 12.00 ஐத் தாண்டிவிட்டது.

போராளிகளின் வாகனத்தில் மகாலிங்கம் ஏற்றப்பட்டு, யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மகாலிங்கத்தால் அன்று மாலை பேசக்கூடியதாய் இருந்தது. தனது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் பார்த்துக் கலங்கினார். அவர்களைப் பட்டினி கிடக்கவிடாமல் உழைத்துக் கொடுப்பதற்காகத்தானே, அவர்கள் தடுத்தபோதும் கேளாமல் இவர் அங்கு சென்றார்! ஆனால், இப்பொழுது



நிரந்தரமாகவே அவர்களைக் கண்கலங்கவிட்டுப் போகப்போகின்றேனே என்ற கவலை அவரை ஆட்கொண்டிருந்தது. "மூத்தவளுக்கு ஏற்கெனவே தாய் இல்லை.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

www.tamilarangam.net





# அப்புவும் நானும்

இரண்டு, மூன்று நாட்களாய்ப் பார்க்கிறன் இந்த அப்பு நித்திரை கொள்ளுகிறாரில்லை. எல்லோரும் படுக்கப் போகும் போது தானும் ஏதோ சாட்டுக்குப் போய்ப் பாயில் படுக்கிறார். சிறிது நேரம் கழித்து எழுந்து விடுகிறார். முற்றத்திற் போய் நிற்பதும், வந்து பாயில் இருப்பதும், இடைமிடையே வெற்றிலை போடுவதும், தண்ணீர் குடிப்பதும் – விடியும் வரை இந்நிகழ்வு தொடரும்.

வண்ணார் பண்ணைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சரசாலையில் வந்திருந்த எனது உறவினர், தனது பிள்ளையின் திருமணத்துக்கு, ஒரு வாரத்துக்கு எனது வீட்டைத் தந்துதவும்படி கேட்டார். அப்படி வந்த இருபது, இருபத்தைந்து பேரைக் கொண்ட 'திருமணக்குழு'வில் அந்த "அறிமுகமில்லாத அப்பு"வும் ஒருவர். அறுபத்தைந்து, எழுவது வயதிலும் பாக வதர் தோரணையில் வெண்சிலுப்பாத் தலைமுடி. சிவந்த, பருத்த, வயதுக்கேற்ற கூன் விழுந்த, தொந்தி சுருங்காத உடம்பு. வெள்ளை வேட்டி, 'நசனலுடன்' வெற்றிலை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தால், பழைய கால நாதஸ்வர வித்துவான் மாதிரியான தோற்றம்.

திருமணத்திற்கு முன் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதையும் திருமணத்திற்குப் பின் திருமணத்தை அறிந்துவரும் உறவினர், நண்பர்களை உபசரிப்பது, திருமணத்துக்கென இரவல் வாங்கப்பட்ட பொருட்களைத் திருப்பிக் கொடுப்பது போன்ற ஆரவாரங்களை, வீட்டிற்குக் குளிர்மை தருகின்ற மாமரத்து அடியோடு ஒரு கதிரையில் உட்கார்ந்து கொண்டு மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருப்பார்.

வீட்டிக்கு வந்தோருள் வித்தியாசமானவராய் இருக்கும் அவரை அறிவதற்காய் அவரருகிற் சென்று பேச்சைத் தொடுத்தேன். "அப்பு வெற்றிலை போடுங்கோவன்"........ அப்புவும் என்னைப் போல் ஒரு வெற்றிலைப் பிரியன். நிமிர்ந்து பார்த்தார். "வேண்டாம் தம்பி, இப்ப கொஞ்சம் முந்தித் தான் போட்டனான். செல்லப் போடுறன்" பொருட்களைப் போல வாய்ச்சொல்லையும் வீணே உபயோகிக்கக் கூடாது. சிக்கனமாய் முத்தாய் இருக்க வேண்டும் என்ற பொருள் அவரது சொல்லில் இருந்தது. "வீட்டின் ஒரு அறைக்குள் மணமக்கள், மறு அறைக்குள் குசு குசுக்கும் கன்னிப் பெண்கள். உள்விறாந்தைக்குள் எனது மனைவியும் மற்றைய பெண்களும். வெளி விறாந்தையில் நானும் என்னோடு இரண்டு வாலுகளும். சற்றுத் 'தள்ளி இந்த அப்புவும் இன்னும் மூன்று, நான்கு வயது போன ஆண்களும். கல்யாணத் தகரப்பந்தலுக்குள் விருப்பம் போல எதையும் கதைக்கும் ஐந்தாறு பேரைக் கொண்ட இளைஞர் குழுவும். இதுவே ஒரு வாரமாக எனது வீட்டின் இராக் கிடைச்சதாலை 'இந்த வெளிச்சம்' எனக்கு ஏற்பட்டது. அப்புவுக்குப் பக்கத்திலைபடுக்கைக்க, நெல்லியடி வணிகர்கழக இரவுப் பாதுகாப்பு உத்தியோகத்தரின் மணியோசை இரண்டு தடவை அடித்து ஓய்ந்தது. தொடர்ந்து எனது வளர்ப்பு மெமேரியன் "ஜீவா"வின் எச்சரிக்கை ஒலி. எழுந்து பார்த்தேன். அப்பு முற்றத்தில் நிற்பது நிலாவொளியில் தெரிந்தது. பேசாமல் படுத்துக் கொண்டேன். சிறிது நேரத்தில் ஜீவாவின் ஒலியைச் சகிக்கேலாமலோ என்னவோ, அப்பு பாயில் வந்து உட்கார்ந்து கொண்டார். ஜீவாவும் ஓய்வெடுத்துக்கொண்டது.

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. "அப்பு என்ன விடயம்: ஏதும் உடம்பு சரியில்லையோ........? இல்லாட்டி படுக்கை, சாப்பாடு, தண்ணி பிடிக்கேல்லையோ.......? வீட்டுச் சாமான்கள் என்னென்ன இருக்கோ........ போச்சுதோ....... எண்ட கவலையோ.......? வந்த நாள்முதல் பார்க்கிறன், நித்திரை கொள்ளிறியள் இல்லை" எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன். சிறிது நேர அமைதிக்குப் பின் என்னைப் பார்த்துத் திரும்பினார். "தம்பி இந்த வயதிலையும் வண்ணார்பண்ணையிலிருந்து மட்டுவில் வரை நடந்துதான் வந்தனான்: இப்பவும் இரண்டு நாளைக்குள் ஒரு உதவியோடை ஒரு மட்டம் பதிச்ச நிலை செய்து முடிப்பன். அந்தளவிற்கு இந்த மனம் திடகாத்திரமாய் இருக்கு. உடம்பிலும் சுகயீனம் ஏதும் இல்லை. நல்ல பாய் தலையணை தந்திருக்கிறியள். அதிலையும் குறையில்லை. நுளம்புத் தொல்லையும் இல்லை. நடந்த கல்யாணவீட்டுச் சாப்பாட்டுக் குறையும் இல்லை. இந்த இக்கட்டான காலத்திலை இந்த நாவலர் மடத்துத் தண்ணீர் கிடைச்சதே பெரும் பாக்கியம். வீடு சாமான்கள் போனால் என்ன தம்பி? சுவர் இருந்தாற்தான் சித்திரம் எழுதலாம் எண்டு எங்களை உயிரோடு இஞ்சாலை வரப்பண்ணிப் போட்டான் 'சீமான்.' உவ்வளவு சனமும் பிள்ளை குட்டி, பொருள் பண்டம், ஆடு மாடுகளைக் கொண்டு உந்த ஒரு றோட்டாலை எவ்வளவு சீரழிஞ்சு வந்ததுகள். வந்து மழை, பனி, வெயில், சாப்பாடு எண்டு எவ்வளவு சீரழியுதுகள்? இதுகளை நினைச்சு ஒருதன் நித்திரை கொள்ளாமல் இருப்பான் தம்பி. எப்ப சிங்கக் கொடிக் கம்பத்தை முறிக்கிறது, எப்ப என்ர மக்களை கொண்டு போய் அவரவர் இடத்திலை நிம்மதியாய் வாழவிடுகிறது எண்டு சிந்தித்துக் கொண்டு, 'பாவம்' நித்திரை கொள்ளாமல் இருப்பான் தம்பி. எனக்குத் தெரியும், இவற்றுக்கொரு முடிவு கட்டித்தான் 'அந்தப் பிள்ளை' நிம்மதியாய் நித்திரை கொள்ளுவான். அந்தத் தலைவன்ரை நித்திரையை நினைச்சுத் தான், நான் நித்திரை கொள்ளாமல் இருக்கிறன்." இடி மின்னலோடு பெய்த மழை ஓய்ந்தது. மேகம் போல் என் மனம் வெளித்தது.

# வேர்கள்

உடுப்புக்களை உரப்பை ஒன்றுக்குள் திணித்து மூட்டையை இறுகக் கட்டி ஒரு ஓரத்தில் உருட்டி வைத்தார் வல்லிபுரம்.

தலைமயிரில் விழுந்திருந்த நரைத் தோற்றம் அவருக்கு ஐம்பது வயது கடந்துவிட்டது என்பதை உணர்த்துவதாக இருந்தது. எனினும் மடித்துக் கட்டிய சாரமுடன் ஓடியோடி அவர் செயற்பட்ட விதம் உற்சாகம் ஊட்டுவதாகவே காணப்பட்டது.

"உடுப்புக்கள் எல்லாம் கட்டியாச்சு. சாப்பாட்டுச் சாமான்களையும் கட்டி வைச்சிட்டா குசினிப்பாத்திரங்களை பிறகு கட்டலாம்" தனக்குத் தானே எண்ணிக் கொண்டவர்,

"இஞ்சருமப்பா" மனைவியை நோக்கிக் குரல் கொடுத்தார்.

"என்ன......" குசினிக்குள்ளிருந்து சத்தம் மட்டும் வெளியே வந்தது.

"சாப்பாட்டுச் சாமானுகள் என்ன கிடக்கு... கட்டி வைக்க வேணுமெல்லே"

"அறையுக்குள்ள ஒரு அரை மூடை நெல்லுக் கிடக்கு.... துணிப்பையில கோதம்ப மாவையும், பெட்டியுக்கை கிடக்கிற அரிசி மாவையும் எடுங்கோ. மற்றது தூள், உப்பு, பருப்பு, அப்பிடிக் கிடக்கிறதுகளையும் எடுத்துக் கட்டுங்கோ. தேங்காயையும் கட்டுங்கோ" அவளது பட்டியல் நீண்டு கொண்டே போனது.

"எல்லாத்தையும் கட்டுங்கோ... கட்டி எடுத்துக் கொண்டு ஓடுங்கோ.....எத்தின நாளைக்கு ஓடப் போறியள்.....எங்கைதான் ஓடப்போறியள்." குளித்துவிட்டு தோளில் போட்ட துவாயால் தலைமயிரைத் துவட்டியபடி வந்த அருணா குரலில் சலிப்பைக் காட்டினாள்.

"என்ன பிள்ளை செய்யிறது பின்ன..." மகளின் சலிப்பைப் புரிந்து கொண்டவராக வல்லிபுரத்தார் கேள்வி எழுப்பினார்.

"ஏன் ஓடுவான்... பேசாம எங்கட இடத்தில இருந்தாலென்ன?"

"இருக்கலாம் தான்... இருக்கத்தான் வேணும்.... அப்பிடித்தான் ஆசைப் படுறம். ஆனா..." வல்லிபுரம் இழுத்தார்.

"ஆனா..என்ன ஆனாவும் ஆவன்னாவும்..."

"பிள்ளை..... உனக்குத் தெரியாதே.. நீயும் படிச்ச பிள்ளை தானே... பெரியாளாயும் வளர்ந்திட்டாய்"

"அது தெரிஞ்சா காணாதே" அவள் சீறினாள்.

என்ன செய்யலாம் எண்டு சொல்லன் பாப்பம் பிள்ளை" சாந்தமான குரலில் தந்தையின் கேள்வி பிறந்தது.

"அப்பா... இஞ்சை பாருங்கோ ... அப்ப சிங்களம் படிக்க மாட்டன் எண்டு எழுதிக் குடுத்து வேலையை விட்டிட்டு வந்தியள், அதால கஷ்டப்பட்டது எங்கடை குடும்பம் தான்....

உங்களோட வேலை செய்தாக்கள் சத்தம் போடாம சிங்களமும் படிச்சு....பிறமோஷன் எடுத்திச்சினம்.... இப்ப பெஞ்சனும் எடுக்கினம்... ஆனா நீங்கள்..." கேட்டுவிட்டு அவள் நிறுத்தினாள்.

"வேலையை விட்டதால் நான் கஷ்டப்பட்டது மெய்தான். ஆனா செத்துப் போகேல்லை. நான் வேலை விட்டது கூட என்ரை சுயநலத்துக்காக இல்லை. இனம் எண்டதுக்காகத்தான். இண்டைக்கு வரை இந்தப் போராட்டம் ஓயவில்லை பாத்தியே". அவள் கனத்த மௌனத்தைக் காட்டினாள்.

"சாமானுகளைக் கட்டியாச்சே... குளிச்சிட்டு வாங்கோ சாப்பிடலாம். வெளிக்கிட வேணுமெல்லே.. பழங் கதைகள் எல்லாம் பிறகு பறையலாம்" குசினிக்குள் இருந்து குரல் காற்றில் கலந்தது.

> **"எல்லாத்தையும் கட்டுங்கோ... கட்டி எடுத்துக் கொண்டு ஓடுங்கோ....எத்தின நாளைக்கு ஓடப் போறியள்....எங்கைதான் ஓடப் போறியள்." குளித்துவிட்டு தோளில் போட்ட துவாயால் தலைமயிரைத் துவட்டியபடி வந்த அருணா குரலில் சலிப்பைக் காட்டினாள்.**

"சிங்களம் படிச்சு பிறமோஷன் எடுத்தவை எல்லாம் அப்ப தங்களைக் கெட்டிக்காரர்கள் எண்டுதான் நினைச்சவை. ஆனா அப்பிடிப் போனவையாலதான் இண்டைக்கு சனம் முழுக்க கஷ்டப்படுகுது. இப்பவும் சிலபேர் வெள்ளைக்கொடியோட நாவற்குழியைக் கடந்திட்டா வசதியாய் போய் சீவிக்கலாமெண்டு நினைக்கிற மாதிரித்தான் இதுகும். ஆனால் சரியான மனுசன் வசதி இருக்கிற பாதையை அல்ல, கடமை இருக்கிற பாதையைத்தான் நாடுவான்." தோளில் கிடந்த துண்டை உதறியபடி வல்லிபுரத்தார் கூறினார் உறுதியான குரலில்.

தந்தைக்குள் ஒரு தியாக சொரூபம் சுடர் விடுவதாக உணர்ந்து கொண்ட அருணா, மேலதிகமாக எந்த வார்த்தையையும் கூறவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செவ்வந்தி



- கச்சாயூர் வேதநந்தினி

அம்மா...... அம்மா...... சித்தப்பா வாறார் எனக்கத்தியபடி, முற்றத்தில் நின்ற ஐந்து வயதுப் பிரணவன் குசினிக்குள் நுழைய, வாங்கண்ணா எனக்கூறிக்கொண்டு குசினிக்குள் இருந்து வெளியில் வந்தாள் ராஜி.

"என்னம்மா ஆச்சு அண்ணைக்கு........" என்று ராஜியைக் கபிலன் கேட்க,

அண்ணா.......! என ஓடிவந்து கபிலனைக் கட்டியணைத்து அழுதாள்.

அழாதே ராஜி....... அண்ணி எங்கே? எனக் கபிலன் கேட்ட போது, குசினிக்குள் இருந்து செவ்வந்தி வெளிப்பட்டாள். அண்ணியாரைக்கண்ட கபிலன் அதிர்ந்து போனான். ஐந்து மாதத்துக்கு முன்பு எவ்வளவு அழகாக, நெற்றி நிறையக் குங்குமம் இட்டுத் தலையிலே பூச்சூடி ஆனந்தத்துடன் வாழ்ந்தாள். இன்று....... நெற்றிமிலே பூ இல்லை. கண்களிலே கண்ணீர்....... செவ்வந்தி விக்கி விக்கி அழுதாள். கபிலனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. செவ்வந்தி பெரிதாக அழ ஆரம்பிக்க, "அண்ணி அழாதேங்கோ......." "என்ன செய்யிறது......... எப்படிக்கபிலன் அழாமல் இருக்கிறது........ என்னால தாங்க முடியேல்லை." அண்ணை உங்களுக்கு அழுகையே வரேல்லையோ........?

"ராஜி...... நாங்கள் அழுறம். ஆனால் வெளியில காட்டிக்கொள்ள மாட்டம். மனதிற்குள்ளேயே அழுது தீர்ப்போம்" என்றான் கபிலன்.

ஏன் அண்ணை இவ்வளவு நாளும் வரேல்லை?

"நீ போட்ட கடிதம் நேற்றுத்தானம்மா கிடைச்சது. நான் களத்தில நிண்டனான். அதுதான் எனக்குக் கடிதம் பிந்திக்கிடைச்சது......." "அண்ணை இறந்து இரண்டு மாதமாச்சு" என்றாள் ராஜி. "தோட்டத்துக்குப் போட்டு வாறன் எண்டு போனார். கொஞ்ச நேரத்தால கெலியிலிருந்து சுடும் சத்தம் கேட்டது. பிணமாய்க்கொண்டு வந்தார்கள்"

எனக்கூறி செவ்வந்தி அழ, ராஜியும் அழுதாள். "அண்ணி அழாதேங்கோ....... நீங்க அழுவதாலோ, ராஜி நீ அழுவதாலோ போன அண்ணன் திரும்பி வரமாட்டார்.

ஆனா...... அண்ணைக்கு......" எனக் கபிலன் முடிக்காமல் மௌனமானான்.

"எல்லாம் என்ர தலைஎழுத்து" என்று கூறிய படி, கண்களைத் துடைத்த செவ்வந்தி, "கைகால் கழுவிப் பேட்டு, வாரும் கபிலன்" எனக் கூறிவிட்டுக் குசினிக்குள் சென்றாள். எழுந்த கபிலன், சுவரில் மாலையுடன் படத்தில் தொங்கிய தமையனைக்கண்டு சுவர் அருகிற் சென்று "அண்ணை தாய்க்குத்தாயாக....... தந்தைக்குத் தந்தையாக இருந்த உங்களை, அரக்கர்கள் கொன்று விட்டார்கள். அண்ணியை இந்தக் கோலத்திலையா பார்ப்பேன்?" என மனதிற்குள் அழுத கபிலனின் மனத்திரையிற் சில கடந்த கால நினைவுகள் வந்து எட்டிப்பார்த்தன.

ராஜிக்கு இரண்டு வயதாக இருக்கும் போதே தாய் நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டாள். தகப்பன் தோட்ட வேலை செய்து தன் மூன்று பிள்ளைகளையும் கண்போலக் காத்தார். நாதனுக்குப் பதினைந்து வயது வர, "தம்பியினதும், தங்கையினதும் எதிர்காலம் உன்கையில்" என்ற பெரியதொரு பொறுப்பை நாதனின் தலையிற் சுமத்தி விட்டு அவரும் கண்ணை மூடி விட்டார். சகோதரர்களின் நலன் கருதி நாதன் இடையில் படிப்பை நிறுத்தித் தந்தை செய்த தொழிலையே செய்து, சகோதரர்களைப் படிக்க வைத்தான். கபிலன் படிப்பிலும் கெட்டிக்காரன். ஆனால் அவன், தன்னின

ஐந்து மாதத்துக்கு முன்பு எவ்வளவு அழகாக, நெற்றி நிறையக் குங்குமம் இட்டுத் தலையிலே பூச்சூடி ஆனந்தத்துடன் வாழ்ந்தாள். இன்று....... நெற்றியிலே பூ இல்லை. கண்களிலே கண்ணீர்....... செவ்வந்தி விக்கி விக்கி அழுதாள். கபிலனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. செவ்வந்தி பெரிதாக அழ ஆரம்பிக்க, ''அண்ணி அழாதேங்கோ........'' ''என்ன செய்யிறது......... எப்படிக்கபிலன் அழாமல் இருக்கிறது........ என்னால தாங்க முடியேல்லை.'' அண்ணை உங்களுக்கு அழுகையே வரேல்லையோ........?

மக்கள் படும் வேதனைகளையும், துயரங்களையும் கண்டு உள்ளம் கொதித்தான். தனக்குப் பின்னால் வரும் இளம் சந்ததியினராவது, சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே அவனது இலட்சியமாக இருந்தது. அதற்காக அவன் ஓர் போராளியாகக் களம் புகந்தான். போராளியாகப் புறப்பட்ட கபிலன், இரு வருடத்தின் பின் தயங்கியபடி வீட்டுக்கு வந்தான். தமையன் தன்னைத்திட்டப் போகிறான் என்று நினைத்து வந்த கபிலன் தமையனும், தங்கையும் தன்னை அன்போடு உபசரித்ததையிட்டு உளம் மகிழ்ந்தான். தமையன் ராஜியிடம், "ராஜி தம்பி வந்திருக்கிறான். அவன் மனசு நோகிற மாதிரி எதுவும் செய்யாதே. அவன் ஓர் புலி வீரன். தமிழினத்தின் விடிவிற்காகச் சாவைக் கழுத்திலே கட்டிக் கொண்டு போராடும் தியாகப் பரம்பரையைச் சேர்ந்தவன். நான், எங்கள் அப்பா, பூட்டன்மார் செய்யாமல் விட்ட கடமையைக் கபிலன் போன்ற தம்பிமார் செய்கிறார்கள். இவன் இயக்கத்திற்குப் போனவுடன் கோபம் கொண்டேன். ஆனால் இப்போது அவன் செய்தது சரி என்று எனது மனசாட்சி சொல்லுது" எனத் தங்கைக்குக் கூறியதை ஒளித்து நின்று கேட்ட கபிலன், தனது முடிவை நினைத்துப் பூரிப்படைந்தான்.

நாதனின் தாய்மாமன் மகள்தான் செவ்வந்தி. செவ்வந்தி பிறந்தபோதே நாதனுக்குத்தான் எனப் பெற்றோர்கள் இரு பகுதியினரும் முடிவு செய்திருந்தார்கள். செவ்வந்தியோ..... படித்துப்பட்டம் பெற்ற ஓர் ஆசிரியை. ஆனால், நாதனோ..... படிக்காத ஓர் விவசாயி. செவ்வந்தி தன்னை ஏற்பாளா என மனம் கலங்கிய நாதனுக்கு, நாதன் மேல் தான் கொண்ட காதல் உண்மையானது என்பதை, செவ்வந்தி நாதனைத் திருமணம் செய்து உறுதிப்படுத்தினாள். திருமணம் செய்தபின் செவ்வந்தி படிப்பிக்கப்போவதை நிறுத்தினாள். இது நாதனின் வேண்டுகோள் அல்ல. அவளின் விருப்பம். நாதனும் செவ்வந்தியும் ஆறுவருடம் சந்தோசமாகக் குடும்பம் நடத்தினார்கள் என்பதற்குப் பிள்ளைகள் பிரணவனும் பிரதீபாவும் சாட்சியான அன்புச் சின்னங்கள். ஐந்துமாதத்திற்கு முன் கபிலன் ஒருமுறை வீட்டுக்கு வந்திருந்தான். திரும்ப இன்று வந்துள்ளான். கபிலன் தன்னையும் அறியாமற் கண்களில் கண்ணீர் வடியச் சுவரில் சாய்ந்து நின்றான். அவனருகில் வந்த பிரதீபா, "சித்தப்பா...... சித்தப்பா உங்களுக்குக் கண்ணுக்கை தூசி விழுந்து விட்டதா.........?" எனக் கேட்டாள்.

"கண்களைத் துடைத்தபடியே ஏன் அம்மா கேட்கிறாய்.......?" எனக் கபிலன் வினாவ......

"அதில்லைச் சித்தப்பா...... அம்மாவுக்குக் கண்ணுக்கை நெடுகவும் தூசு விழும்.

நான்தான் ஊதி விடுறனான். அதுதான் உங்களுக்கும் ஊதி விடட்டுமா"....... எனப் பிரதீபா கேட்டாள். அண்ணி தன் கவலையை மறைக்கப் பிள்ளைகளுக்குப் பொய் சொல்லியிருக்கிறா என்பதைக் கபிலன் உணர்ந்தான்.

"சித்தப்பா......... என்ன யோசிக்கிறீர்கள்........?" எனக் கேட்ட பிரதீபா, தூசி ஊதி விடட்டுமா.......? என்றாள்.

"அது......... ஒன்றும் இல்லைப் பிரதீபா......" "ஆமா தூசி ஊதி விடட்டுமா.........."

பிரதீபா, கபிலனின் கண்களைத் தன் இரு கைகளாலும் திறந்தபடி ஊதிவிட்டாள்.

அடுத்த நாள், ராஜீ பாடசாலைக்குப் போய்விட்டாள். பிரணவனும் பிரதீபாவும் விளையாடிக் கொண்டு நின்றார்கள். செவ்வந்தி சமையலில் மும்மரமாக இருந்தாள். கபிலன் ஏதோ பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்க, செவ்வந்தி...! செவ்வந்தி........! என அழைத்தபடி செவ்வந்தியின் தகப்பன் வீட்டுக்குள் நுழைந்தார். வாங்க மாமா எனக் கபிலன் அவரை வரவேற்றான்.

"எங்க செவ்வந்தி..........!" என்ற தகப்பனின் குரல்கேட்டு குசினிக்குள் இருந்து வெளியில் வந்தாள் செவ்வந்தி.

"கெதியில வெளிக்கிடு செவ்வந்தி .........."

"எங்க அப்பா.......?"

"கொழும்புக்குத்தான்........!"

"கொழும்புக்கா........? எதுக்கு........?"

"உன்னையும் பிள்ளைகளையும் கொண்ணை ஆட்கள் லண்டனுக்குக் கூப்பிடப் போறாங்களாம். கடிதம் போட்டிருக்கிறாங்கள்........."

"வெளிநாட்டுக்கா........? நானா........? நான் வெளிநாட்டுக்குப் போகேல்லை........"

"உனக்கென்ன விசரே........?"

"இல்ல அப்பா இல்ல........ எனக்கு விசர் இல்ல........."

"மருமகன் புண்ணியவான். அவர் உன்னைத் தவிக்க விட்டிட்டுப் போட்டார். அவரில்லாத வீட்டில உனக்கென்ன அலுவல்.........?

"இனிமேற்தான் அப்பா எனக்கு இஞ்ச அலுவலே இருக்கு........."

"என்ன சொல்லுறாய் நீ........"

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பொருண்மிய ஆக்கிரமிப்பை உடைத்தெறிந்த கியூபா தேசம்

எமது தமிழீழ தனியரசிற்கான போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் அது முனைப்புப் பெறும் ஒவ்வொரு வேளையிலும் சிறிலங்காவின் சிங்களப் பேரினவாத அரசு பல்வேறு நெருக்குதல்களையும் அழுத்தங்களையும் பிரயோகித்து போராட்டத்தை மழுங்கடிப்பதற்காக முயலுவதை உலகறியும். உற்பத்திப் பொருட்களு



க்கான தடை என ஆரம்பித்து இன்று சகலதுமே தடைசெய்யப்படும் நிலைவரை அதன் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இவையெல்லாம் தமிழீழப் போராட்டத்திற்கு மட்டுமே போடப்படும் அழுத்தங்கள் அல்ல. உலகிலுள்ள தேசிய இனங்கள் தமது உரிமை வேண்டிப் போரிட முனைந்த போதெல்லாம் அந்தந்த அரசுகளால் வழக்கமாக கையாளப்படும் நெருக்குதல்களே இவை. எனினும் இவற்றை எல்லாம் உடைத்தெறிந்து, தமது உரிமைகளை வென்றெடுத்த தேசங்கள் பல.

### நெருக்குதலை முறியடிப்போம்

அமெரிக்க வல்லரசின் பல்வேறு நெருக்குதல்களையும், புலனாய்வுச் சமர்களையும் சமாளித்து இன்று உலகிற்கே முன்னுதாரணமாகத் திகழும் கியூபா தேசத்திலிருந்து தமிழீழம் அறிந்து கொள்ளவேண்டியது ஏராளம்.

இன்று எதிரியின் இராணுவ அரசியல் உத்திகளை எல்லாம் ஒரே தலைமையின் கீழ் நின்று, ஒட்டுமொத்த இடப்பெயர்வினால் முறியடித்த தமிழீழம், மனதைத் திடப்படுத்தி எதிரியின் பொருண்மிய, புலனாய்வு நெருக்குதல்களையும் முறியடிக்க திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

### காஸ்ட்ரோ விளக்கம்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இவ்வாறான தடைகளை கியூபா எவ்வாறு முறியடித்தது என்பது பற்றி கியூபாப் புரட்சியை வழிநடத்திய பிடல் காஸ்ட்ரோ அவர்கள் கியூபாவின் தலைநகர் கவானாவில் 1994-11-25 அன்று நடைபெற்ற கியூபாவிற்கான உலக ஆதரவு மாநாட்டில் விளக்கினார்.

"எமது நாடு எவ்வளவு பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பினும் உலகிலேயே தலைக்கு அதிக மருத்துவர்களையும், ஆசிரியர்களையும், கலைஞர்களையும் மற்றும் புத்திஜீவிகளையும் கொண்டது. நாங்கள் பழைய தவறுகள் புதிய தவறுகள் எல்லாவற்றையும் களைந்து செப்பனிட்டு முன்னேறி வருகிறோம். போரில் நாங்கள் பல எதிரிகளை கைதிகளாகப் பிடித்திருக்கின்றோம். அவர்களுக்கு மன்னிப்பும் வழங்கியுள்ளோம். தொடர்ந்தும் வழங்குவோம்.

ஆனால் சி.ஐ.ஏ. பணத்தைப் பெற்று நாட்டை நாசப்படுத்துவோர், இதலிருந்து விதிவிலக்காகவே அமைவர். உலகளாவிய ரீதியில் பாரிய பொருண்மியத் தடையை நாங்கள் சந்தித்தோம். அதனையெல்லாம் நாம் உடலுழைப்பால் முறியடித்தோம்.

### முக்கியமான காலப்பகுதி

நாங்களே உணவுற்பத்தியில் ஈடுபட்டோம். உரமில்லாமல், கிருமிநாசினியில்லாமல், உற்பத்தியில் ஈடுபட்டு எமது நகர்ப்புற மக்களின் 80 சதவிகிதமான தேவையை பூர்த்தி செய்துள்ளோம். இவ்வாறு நாங்கள் பாரிய பொருண்மிய நெருக்கடியைச் சந்தித்த காலத்தை 'விசேட காலம்' என்கிறோம். நாம் பல அழுத்தங்களைச் சந்தித்தபோதும் எமது புரட்சி பிச்சை எடுக்கும் நிலையை ஒழித்துக் கட்டியுள்ளது. எமது புரட்சி சூதாட்டத்தை ஒழித்துக் கட்டியுள்ளது. எமது புரட்சி மதுபாவனையை ஒழித்துள்ளது. பொருண்மியச் சிரமங்களால் துரதிஸ்டவசமான சில பிரச்சினைகள் தலைதூக்கினாலுவும் முதலாளித்துவ சமூக பாதுகாப்பற்ற பல மோசமான நிலைமைகளை கியூபாவில் காணமுடியாது.

### நம்மை தெளிவு படுத்தவேண்டும்.

நம்மை நாமே தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். இன்று உள்ள நிலைமையைப் போல நாளையும் இருக்கும் என்பதற்கில்லை. நாம் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்றும் வாங்கியும் வாழ வேண்டிய நிலையில் உள்ளோம். இதன்பொருள் இந்தப் புதிய சூழலில் நாம் தனித்து நின்று அனைத்தையும் சாதித்து விடமுடியும் என்பதல்ல. நாம் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. இதில் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றோம். எந்தத் தொழில்நுட்பம் சோலிச நாடுகளில் இல்லையோ அந்தத் தொழில் நுட்பத்தையும், முதலீட்டளார்களையும் மட்டுமே நாம் அனுமதித்துள்ளோம். நாம் மாற்றத்தை செய்யப் போகிறோம். அதற்காக எந்தக் காரணத்தைக் கொண்டும் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் விட்டுக் கொடுக்கப்வோதில்லை.

நாம் மாற்றத்தை செய்யப் போகிறோம். ஆனால் மக்களுக்கான நம்முடைய அரசின் மக்களுக்கான உண்மையான எதையும் விட்டுக் கொடுக்காமல் மாற்றத்தை செய்யப் போகிறோம். இதையே புரட்சிகரமான மொழியில் சொல்வதானால் உழைப்பாளி மக்களின் அரசு, மக்களின் வாயிலாக உழைப்பாளி மக்களின் வாயிலாக உழைப்பாளி மக்களுக்காக மாற்றம் செய்யப்போகிறது என்ற காஸ்ட்ரோ அவர்களது உரையிலிருந்து நாம் மனங்கொள்ள வேண்டியது என்னவெ-னில் உழைப்பாளிகளால் உருவாகும் எமது தமிழீழத் தேசம், உழைப்பாளிகளுக்காக ஏற்படும் மாற்றங்களை சகித்துக் கொண்டு பேரினவாதத்தின் தடைகளை போராட்டத்திற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே அதுவாகும்.

# தமிழீழ மக்களுக்கு றுவாண்டா கூறும் செய்தி



"எந்தத் துயர் வந்தாலும் கலங்காதீர், பேரிடி விழுந்தாலும் மனம் தளராதீர், கொண்ட இலக்கில் குறிவைத்து செயற்படுந் தலைமை இருக்கும்வரை எதற்கும் அஞ்சத் தேவையில்லை" எனத் தமிழீழ மக்களை நோக்கி ஆறுதல் சொல்கின்றார்கள் றுவாண்டாவின் 'துட்சி' இனமக்கள். இவர்கள் பட்ட துயரம், இழந்த இழப்புக்கள் போல் எவருக்கும் ஏற்பட்டதில்லை.

ஐரோப்பிய ஏகாதிபத்திய காலகட்டத்தில் எங்கும் நடந்தது போலவே றுவாண்டாவிலும் நடந்தது. முதலில் ஜேர்மனியின் பின் பெல்ஜியத்தின் கைகளிலும் றுவாண்டா சிக்கியபோது பெரும்பான்மைக் கூட்டு இனத்தார்க்கும் சிறுபான்மைத் 'துட்சி' இனத்தார்க்குமிடையே பிரித்தாளும் உத்தி செயற்படுத்தப்பட்டு, பகைமையின் நச்சு விதைகள் ஊன்றப்பட்டன. இவை வளர்ந்து பெரு விருட்சமாகியபோது, உலகம் என்றுமறியாப் படுகொலைகள் நடந்தேறின.

1950 இல் ஒரு இலட்சம் பேர் 1970 இல் ஒன்றரை இலட்சம் பேர் என, படுகொலைகள் தொடர்கதையான போது 'துட்சி' இன மக்கள் அருகிலிருந்த ஆதரவு நாடான உகண்டாவிற்கு இலட்சக்கணக்கில் அகதிகளாக இடம்பெயர்ந்தனர். பல்லாண்டுகால அகதி வாழ்க்கை அவர்களைச் செயலற்றவர்களாக்கவில்லை. பதிலாகத் தாயகத்தை மீட்க அகதி முகாம்களிலிருந்தே ஆயிரக்கணக்கில் போராளிகள் தோன்றினர். பயிற்சிகள் பெற்றனர். ஆர்.பி.எப் என அழைக்கப்படும் 'றுவாண்டா தேசப்பற்றாளர் முன்னணி' என்கிற போராட்ட அணியாகினர்.

தொடக்கத்தில் பலவீன நிலையிலிருந்த ஆர்.பி.எவ் இயக்கத்தைப் பொறுப்பேற்றபோது 'போல் ககாமே' பின்வருமாறு குறிப்பிட்டார். "யார் என்னோடு வரப்போகிறீர்கள்? போரிடுதல் என்பது துப்பாக்கிகளையோ அல்லது பிரதேசங்களையோ பொறுத்ததல்ல. அது மனங்களையே பொறுத்தது. நாங்கள் கம்புகளால் ஏன் கற்களாற் கூடப் போராட முடியும்." பின்னர் ஆர்.பி.எவ் பெரு வெற்றிகளைக் கண்டு நாட்டின் மூன்றிலொரு பகுதியைக் கட்டுபாட்டிக்குள் கொண்டு வந்தபோதே, சென்ற ஆண்டு உலகத்தையே உலுக்கிய படுகொலைகள் நடந்தன.



இதுவரை நடந்த படுகொலைகளின் உச்சமாகப் பல இலட்சம்பேர், சில வாரங்களுக்குள்ளேயே பெரும்பான்மை கூட்டு இனக் கொலைக் குழுக்களால் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். தலைநகரான கிகாலியே பிணக்கிடங்காகியது. அச்சத்தினால் வதிவிடம் விட்டு வெளியே வராத மக்கள் சில வாரங்களின் பின் பட்டினியாலும், நோயாலும் வீட்டுக்குள்ளேயே மாண்டனர். தெருவெங்கும் கைக்கோடரிகளாலும், கத்திகளாலும், கை, கால்கள் சீவப்பட்டு, கண்டதுண்டம் ஆக்கப்பட்டனர். தலையற்ற முண்டங்கள் நிரம்பி வழிந்தன. பிண வாடையே எங்கும் மேலோங்கி நின்றது. ஆனால் இவ்வளவு படுகொலைகள் நிகழ்ந்தபோதும், சற்றேனும் நிதானம் இழக்கவில்லை. தடுமாறவில்லை. கொண்ட இலக்கினில் வழிதவறவில்லை. காகமே இதன் பின்னரே கூட்டு இராணுவத்திற்கு மரண அடியைக் கொடுக்கத் தொடங்கினார்.

பல்லாயிரம் படைகட்குப் புதைகுழிகள் தோண்டப்பட்டன. மிகுதிப் படைகள் சிதறித் தலைதெறிக்க அய்ல் நாடுகட்கு ஓடினர். ஓடியோடி, தேடிப் பழிவாங்கினர். ஆர்.பி.எவ். போராளிகள் இப்போது றுவாண்டாவின் ஆட்சியாளர். அவர்கள், கூட்டு இனத்தோரில் நல்லோரையும் இணைத்து 'காகமே' செய்யும் ஆட்சியின் ஒழுங்கையும், சிறப்பையும் உலகம் இன்று அங்கீகரிக்கின்றது.

எனவேதான், 'துட்சி' மக்கள் தமிழீழ மக்களை நோக்கி அஞ்ச வேண்டாமென ஆறுதல் கூறுவதாகச் சொன்னோம். 50 ஆயிரம் இராணுவத்திற்குச் சென்று ஆண்டு புதைகுழிகள் தோண்டப்பட்டது. அங்கே இன்னொரு நாற்பதினாயிரம் சிங்கள இராணுவத்திற்கு முகாம்களிலேயே புதைகுழிகள் தோண்டப்படவுள்ளன. அண்மையில், ஆயிரக்கணக்கான போராளிகள் போராட்டத்துடன் இணைந்தமையே இத்தனைக்கும் காரணமென்பது தெளிவான நிலையில் எம்மைப் பார்த்து அவர்கள் சொல்கிறார்கள், "ஆற்றல் மிகு கரங்களில் ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத்திற்கான வழி" என்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வென்றால் நாங்கள் தோற்றால் அவர்கள்

ஆட்சியாளர்களின் பொதுப் பண்புகளில் ஒன்று, நடக்கும் தவறுகள் யாவற்றுக்கும் கடந்த கால ஆட்சியாளர்களைக் குறை கூறுவதும் விளையும் நன்மைகள் யாவற்றுக்கும் தாமே காரணம் எனக் கூறிக்கொள்வதுமாகும். அண்மையில் மிகிந்தலை ராஜரட்ட பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா, "அரசியற் காரணங்களுக்காக உலகில் அதிகளவில் மனிதக் கொலைகள் இடம் பெறும் நாடாக இலங்கை சாதனை எடுத்துள்ளது: ஆண்டு 13 கற்கும் மாணவர் ஒருவர் பயங்கரவாத நடவடிக்கையில் சம்பந்தப்படுவதற்குக் காரணம், எமது கல்வியில் ஏற்பட்டுள்ள தவறேயாகும். இதனை ஆராய்ச்சியாளர்கள் தேடிப் பார்க்க வேண்டும்" எனக் கூறியதுடன், எமது நாகரீகத்தையும் கல்விமுறையையும் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் நாசப்படுத்தினர் எனவும் குற்றம் சாட்டியுள்ளார். சனாதிபதி சந்திரிகாவின் இக்கூற்றுக்களில் உண்மையில்லாமல் இல்லை. உலகத்தில் அரசியற் கொலைகள் அதிகம் இடம்பெறும் நாடுகளில் சிறிலங்காவே முன்னணி நாடு என்பதும் அந்நிய ஏகாதிபத்தியத்தினால் கல்விக் கொள்கை பாதிப்படைந்து நெருக்கடிகள் உருவாகியது என்பதும் உண்மைதான். இவை யாவும் இன்னும் பாதிப்பை விளைவிப்பவையாக இருப்பதற்குக் காரணம், இன்றும் ஏகாதிபத்தியவாதிகள் தானா? ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையைவிட்டு வெளியேறி இன்னும் 2 ஆண்டுகளில் அரைநூற்றாண்டு நிறைவு பெறுகின்றது. அத்தோடு சிறிலங்கா அரசு, தன்னைக் குடியரசாகப் பிரகடனப்படுத்தி இன்னும் ஓரிரு ஆண்டுகளில் கால் நூற்றாண்டும் நிறைவு பெறப்போகின்றது. இக்காலகட்டம் முழுவதும் இலங்கையில் ஆட்சிபுரிவது சிங்களவர்களே. இந்த நிலையில் இன்றைய நிலைக்குக் காரணம், தனியாக அரைநூற்றாண்டுக்கு முற்பட்ட அந்நிய ஏகாதிபத்தியம் என்று கூறமுடியுமா? தனித்தனியாக இருந்த அரசுகளை அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் ஒரு நிர்வாக அலகாகக் கொண்டு வந்தமையே, இங்கு இனப்பிரச்சனை ஒன்று உருவாகியிருப்பதற்குப் பிரதான காரணமாகும். இது மறுப்பதற்கு இல்லை. ஆனால் அன்று ஒரே நிர்வாக அலகாக இருந்தபோது இல்லாத நெருக்கடிகள் பின் உருவானமைக்கு– அது பூதாகாரப் பிரச்சனையாக வெளிப்பட்டமைக்குக் காரணம், சிங்கள ஆட்சியாளர்களும் கல்விக் கொள்கை தொடர்பான விடயமுமாகும். அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் தமக்கேற்ற கல்விக் கொள்கை ஒன்றை செயற்படுத்தியதும், தமது நாகரீகத்தைப் புகுத்தியமையும் உண்மைதான். ஆனால் இன்னும் அதே கல்விக் கொள்கையின் தாக்கம் இருப்பதற்கும் அதனாற் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கும் அவ் ஏகாதிபத்தியம் முழுமையான காரணம் அல்ல. சிங்கள அரசியல்வாதிகளே காரணமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்பட்ட பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் எவரும், ஒரு நீண்ட ஆய்வின் அடிப்படையிலான கல்விக் கொள்கையினையோ அன்றிப் பொருண்மியக் கொள்கையினையோ வகுக்கவில்லை. மாறிமாறி வந்த ஆட்சியாளர்கள், தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஏற்றவகையில் கல்விக் கொள்கையையும் பொருண்மியக் கொள்கையையும் வகுக்க முனைந்தார்களே ஒழிய, நாட்டிற்கும் பொதுமக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய கொள்கையை வகுக்க முயலவில்லை. எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், கல்வியில் தமிழர்கள் வகித்த முதன்மை, அதனால் அரச நிர்வாகத்தில் அவர்கள் பெற்றுக் கொண்ட அதிக இடம் என்பன அவர்களின் கண்களுக்கும், சிந்தனைகளுக்கும் தெரிந்தளவில் இக்கல்விக் கொள்கையில் உள்ள தப்போ அல்லது தவறோ அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை எனலாம். இந்த நிலையில் நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடிய கல்விக் கொள்கையை உருவாக்கினர் என்பதைவிட, கல்வியிற் தமிழர் பெற்றிருந்த முதன்மையை ஒழிப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இதன் அடிப்படையில், பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தி இனப்பூசல் வெளிவர வழிவகுத்தனர்.

இதைத்தவிர கல்விக் கொள்கை என்பது நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்தை நோக்காக்க் கொண்டு, அரசியல்–பொருண்மியக் கொள்கையின் அடிப்படையில் வகுக்கப்படவேண்டும். ஆனால் கடந்த 50 ஆண்டு காலச் சிங்கள ஆட்சியில் நிலையான அரசியற் கொள்கையோ பொருண்மிய மற்றும் அபிவிருத்திக் கொள்கையோ அரசினால் உருவாக்கப்படவில்லை. ஆட்சியைப் பிடித்தல் அல்லது அவைகளைத் தக்கவைத்துக் கொள்ளல் என்ற அடிப்படையிலேயே பொருண்மியக் கொள்கைகள் வகுக்கப்பட்டன. இந்த நிலையில் இன்று சிங்களக் கட்சிகள் இரண்டும், (ஐ.தே.க, சிறிலங்கா சுதந்திரக்கட்சி) திறந்த பொருண்மியக் கொள்கையை ஆதரித்து உள்ளன. திறந்த பொருண்மியக் கொள்கையென்பது, அந்நிய சக்திகள் நாட்டின் சூழல் வளங்களைத் தமது தேவைக்கு ஏற்றவிதத்தில் பயன்படுத்த அனுமதிப்பதேயாகும். இந்த நிலையிற் கடந்த காலத்தில் ஏகாதிபத்தியச் சக்திகள் எமது கல்வியைப் பாழடைவு செய்தனரென்றால், தற்பொழுது திறந்த பொருண்மியக் கொள்கைக்கு ஏற்றபடி கல்வியை அளித்தல் என்பது, எவ்வாறு கல்வியைப் பாழ்படுத்தாது விடும்? அதாவது அன்று ஏகாதிபத்தியவாதிகள் தமது தேவைக்கேற்ப கல்விக் கொள்கையைச் செய்தார்கள். இன்று ஏகாதிபத்தியவாதிகளின் அல்லது சர்வதேச நிதி அமைப்புக்களின் தேவைக்கேற்ப கல்விக் கொள்கையை ஆட்சியாளர்களே மாற்றியமைத்து வழங்க முனைகின்றனர் என்பதே இதன் யதார்த்தமாகும். இந்த நிலையில் இன்று 13ஆம் ஆண்டு மாணவர்கள் வன்முறையில் இறங்குவதற்கும் அரசியற் கொலைகள் அதிகரித்தளவில் இடம்பெறுவதற்கும் காரணம், ஏகாதிபத்தியவாதிகள் அறிமுகப்படுத்திச் சென்ற கல்விக் கொள்கையல்ல. அக்கல்விக் கொள்கை சுமார் 50 ஆண்டுகாலமாக மாற்றப்படாமையும், கல்வியில் அரசியல்வாதிகள் ஆதாயம் தேட முனைந்தமையுமே காரணமாகும். ஆகையினால், இதை ஆய்வதற்கோ அறிவதற்கோ பெரிய ஆய்வாளர்களோ அல்லது கல்விமான்களோ தேவையில்லை. அரசியல்வாதிகள் கல்வியில் ஆதாயம் தேட முனையாது இருந்திருந்தால், இலங்கை அரசு கல்விக் கொள்கைகளில் பின்னணி நாடாகவோ அன்றி 13ஆம் ஆண்டு மாணவன் பங்கரவாதச் செயலில் ஈடுபடவேண்டிய நிலையோ ஏற்பட்டிருக்காது.

# குறளகம்

தேவை எது?

"வள்ளுவப் பெருந்தகையே! ஒரு நாட்டிற்கு அவசியம் தேவையானவை எவை?" என்றேன்.

வள்ளுவர் மெல்லெனச் சிரித்தார்.

"மக்கள், உணவுவளம், நல்லமைச்சு, பிறர்நட்பு, அரண் ஆகிய அறம்" என்றார்.

"இங்கு ஐந்தைத்தானே கூறினீர்கள்? என்றேன்.

"ஆமாம், இன்னொன்று– மிக முக்கியமானது உண்டு. அதனை உன் மனதிற் பதிக்கவே இவ்விதம் முயன்றேன்" என ஆழ்ந்த குரலில் பதில் அளித்தார்.

"அது என்ன?" என்றேன்.

"படை" என அழுத்திக் கூறினார் வள்ளுவர்.

"படை

குடி

கூழ் (உணவு)

அமைச்சு நட்பு அரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு"

நாட்டின் வாழ்வுக்கு முதற் தேவை அதன் படை என்ற பேருண்மையை மீண்டும் மீண்டும் என் நெஞ்சம் இடித்துரைப்பதை உணர்கிறேன்.

(குறள் 381)

நாக. பத்மநாதன்

# தாயகத்து மைந்தர்கள்

போராட்டத்துக்கு கவசமாய் இருந்த ஏராளமான குடும்பங்களுள் அம்மாவினுடையதும் ஒன்று. தென்மராட்சியில் மையமாக உள்ள மீசாலை ஊர்தான் அந்தக் குடும்பத்தின் அடி. ஒன்றொன்றாக அம்மாவின் பிள்ளைகளில் மூவர் இயக்கத்துக்குப் போய்விட்டனர்.

முதலில் போனவன் சேகர். மதுவன் அடுத்ததாகப் போனான்.

கேரதீவு இறங்குதுறையில் இந்திய வானூர்திகள் பொழிந்த நெருப்புமழையில் கண்களுக்கு முன்னால் கருகிப் போன அப்பாவை பறிகொடுத்துவிட்டு கதறிக்கொண்டுவந்தவன், அவன் நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருந்த அந்த நினைவோடுதான் மதுவன் புறப்பட்டுப் போனான்.

கொஞ்ச நாட்களின் பின் கான்சும் வெளிக்கிட்டுப் போய்விட்டான்.

அம்மாவுக்குத் துயர் இயக்கத்துக்குப் போனதுக்காகவல்ல. மூவரும் போய்விட்டதற்கு.

அம்மா தலைவருக்கு வேண்டுகோள் எழுதினாள். தயவு செய்து மதுவனை மட்டும் என்னிடம் அனுப்பி வையுங்கள்.

மதுவன் கடைசிப் பையன். பெற்றவர்களின் அபரிமிதமான பாசம் அவன் மேல் இருந்தது. வேலைகளில் எல்லாம் அம்மாவின் கையாள் அவன்தான்.

அம்மா காத்திருந்த பதிலோடு மூத்தவன் சேகர் வீட்டுக்கு வந்த ஒரு மகிழ்வான இரவு அந்த சந்தோசத்தில் அம்மாவுக்கு தூக்கமே வரவில்லை. அம்மாவுக்கு சேதியைச் சொன்ன சேகர் இரவோடு இரவாகவே தம்பியைக் கூட்டிவர மணலாற்றுக்கு பயணமானான்.

–இனியவன்

மறுநாள்–மணலாற்றில் ஒருவழியாக அன்பு அண்ணனைத் தேடிப்பிடித்து சந்தித்து கடிதத்தைக் கொடுத்து கதைத்தபோது –சண்டை ஒன்றுக்காக சற்று எட்டத்துக்குப் போய்விட்ட ஒரு தாக்குதலணியில் மதுவன் போன தகவலைச் சொன்ன அன்பு அண்ணன் இரண்டுநாளில் அந்த அணி திரும்பிவிடுமென்றும் நின்று அவனை அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

இரண்டு நாட்களாக தம்பிக்காக காத்திருந்தான் சேகர்.

முந்திரிகைக்குளம் என்ற ஊருக்குப் பக்கத்தில் இருந்த இராணுவ மினி முகாமைத் தாக்கி அழித்து அந்த அணி இரண்டாம் நாள் திரும்பியது.

சேகர் ஆர்வத்தோடு தம்பியை தேடிய வேளை முகாமிலிருந்த எல்லோரும் அந்த வீரர்களைச் சூழ்ந்து கொண்ட பொழுது வெற்றியோடு மீண்ட தோழர்களின் தோள்களில் மதுவன்.

அந்த வெற்றிக்கு விலை போய்விட்ட மேஜர் சங்கர், முசோலினியுடன்..... 2ம் லெப். மதுவன்.

சேகருக்கு தலை வெடித்துச் சிதறியதைப் போலிருந்தது.

தம்பியை கூட்டிவரப்போன அண்ணன் தம்பியின் உடலைக் கொண்டு வந்தான்.

எல்லாம் முடிந்துவிட்டது.

இதன் பிறகு அடுத்தவன் கான்ஸை இயக்கம் அம்மாவிடம் அனுப்பியது.

அவனுக்கோ வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. இனிமேல் தலைவருக்கு கடிதம் எழுதக்கூடாது என்று எச்சரித்துவிட்டு ஒரு நாள் மீண்டும் புறப்பட்டுப் போய்விட்டான்.

போனவன் ஆனையிறவு படைத்தளத்திற்கான அரணிலிருந்து அடிக்கடி வந்து அம்மாவைப் பார்த்துவிட்டுப் போனான்.

அம்மாவுக்கு உள்ளூர பயம்–சண்டையில நிக்கிறான் அவனுக்கு ஏதாவது நடந்துவிட்டால்.

ஒருநாள் வீட்டுக்கு வந்தவன் அம்மாவுக்கு சேதி ஒன்றைச் சொன்னான்.

"என்னை வேறு இடத்துக்கு மாத்திபிருக்கு அம்மா. நாளைக்கு மட்டும் தான் ஆனையிறவில. போகும்போது நாளை வந்திட்டுப் போறன்."

அம்மாவுக்கு ஆறுதல். இரவு நிம்மதியாக உறங்கி காலையில் எழுந்தாள்.

பின்னேரம் பிள்ளைவருவான் நல்ல சாப்பாடு செய்து குடுக்க வேணும். அம்மா ஆர்வத்தோடு சமையலறையில் மூழ்கிப் போனாள்.

மாலை வந்து இரவாகியபோதும் பிள்ளை வரவில்லை. அம்மா காத்திருந்த போது அந்தச் செய்திதான் வந்தது.

அன்று காலை நடந்த சண்டையொன்றில் அம்மாவின் அந்த மைந்தனும்....

கப்டன் கான்ஸ்

அம்மாவின் உச்சந் தலையிலிருந்து நுனிக்கால் வரை மின்சாரம் பாய்ந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகளால் அம்பலமான இரட்டைவேட நடிப்புக்கள்

இந்திய அமைதிப்படை 'விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி ஒடுக்கி விட்டோம்' என்று கூறியதை இந்திய அரசு 1989 முற்பகுதியில் ஏற்கும் நிலையில் இருக்கவில்லை. அதேநேரத்தில் விடுதலைப் புலிகளின் உயர்பீடத் தலைவர்களை கொன்றொழிக்காமை அல்லது கைப்பற்றாமைக்கு அமைதிப்படையினர் சார்பில் இந்தியாவில் ஒரு கருத்து உருவாகத் தொடங்கிற்று. அதாவது விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இல்லாமல் செய்வது அரசியல் ரீதியாக புத்திசாலித்தனம் அற்ற செயல் என்று டில்லி உயர்மட்டம் எண்ணுகிறது என்ற கருத்து பத்திரிகைகளில் வெளிவந்தது. விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்று கூறுவது போன்ற நிலையில் இந்தியா இருக்கையில் 1989ல் கோடைகாலப் பகுதியில் பிரேமதாசாவின் சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் இரகசிய பேச்சு வார்த்தைகளில் ஈடுபடத் தொடங்கியது.

## இந்தியாவுக்கு திரும்பு

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையில் உற்சாகம் கொண்ட பிரேமதாசா 1989 ஆனி 1ம் திகதி நடந்த பொதுக்கூட்டமொன்றில் இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேற வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை முழங்கினார். 1989 ஆடி 29 சிறிலங்கா இந்திய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு இரண்டாவது ஆண்டு நிறைவு தினத்திற்கு முன் வெளியேற வேண்டுமென்று திகதியையும் அவர் குறித்தார்.

## திரும்ப முடியாது

இந்திய அமைதிப்படை, தான் வந்த நோக்கங்களில் ஒன்றான சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தி விட்டதாக பீற்றிக்கொண்டாலும் அதே நேரத்தில் இந்தியர்கள் நாடு திரும்ப மறுப்புத் தெரிவித்து அவ்விதம் செய்வதற்கு இரு அரசுகளும் சம்மதம் தெரிவிக்க வேண்டுமென்று வாதாடினர். மேலும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கத்தை முன்னெடுப்பதில் தோல்வி கண்டுவிட்டதென்றும் ஆகவே வேறுவழியின்றி இந்திய அமைதி காப்புப் படை இங்கு நிலைகொள்வது அவசியமான ஒன்றாகும் எனவும் கூறினர். இலங்கை சனாதிபதியின் அழைப்பின்படியே இந்திய அமைதி காப்புப் படை இங்கு வந்ததும் தமிழர்களுக்கான அதிகாரப் பரவலாக்கத்தை இந்தியா உறுதி செய்யவேண்டும் என ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்படாததும் மேற்கூறிய இரண்டு விவாதங்களையும் நியாயப்படுத்தவில்லை.

## "புஷ்பக்" நடைமுறை

இதேவேளை 1989 புரட்டாதியில் இடம்பெற்ற உயர்மட்டப் பேச்சுக்களின் விளைவாக விடுதலைப் புலிகளுக்கும் அமைதிகாப்புப் படையினருக்குமிடையே போர் நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டதுடன் 1989 மார்கழி 31ம் திகதியில் அமைதிகாப்புப் படை வாபஸ்பெற ஆரம்பிக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த வாபஸ் பெறுவதற்கான திகதி நியமனம் உத்தேசமானதென்றும் அது இழுபட்டுக் கொண்டு போகும் என்றும் இரகசியமாக தெரிந்துவைத்திருந்த இந்திய இராணுவத்தினர் உதவிப் படையாக சென்னையில் நிலை கொண்டிருந்த ஒரு டிவிஷனுடன் திருகோணமலையில் சுயாதீன பிரிக்கேட் ஒன்றை நிரந்தரமாக நிலைநிறுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கினர். இந்தத் திட்டங்களுக்கு 'புஷ்பக்' நடவடிக்கை எனப் பெயரிடப்பட்டது.

## தொண்டர் படை

இதேவேளை இந்திய ஆதரவுபெற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினருக்கு ஆயுதமும் பணமும் பயிற்சியும் வழங்கப்பட்டு மேலும் பலப்படுத்தப்பட்டனர். குடிமக்கள் தொண்டர் படையொன்று சிறிலங்கா அரசின் சம்மதத்துடன் உருவாக்கப்பட்டது. அதன் பெயருக்கு மாறாக மிகக் குறைந்த எண்ணிக்கையான தொண்டர்களே அதில் இணைவதற்கு முன் வந்தனர். பாடசாலை மாணவர்கள் இதில் கட்டாயப்படுத்தி சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதனால் கல்லூரிகள் இயங்க முடியாது மூடப்பட்டன. இந்த கட்டாய படைத் திரட்டல் நடவடிக்கையால் அதனது ஆட்பலம் 7000 ஆக உயர்த்தப்பட்டது. வடக்கு கிழக்கின் ஆயுதப்படை என்று கூறப்படுகின்ற தமிழ்த் தேசிய இராணுவம் என்ற இன்னொரு ஆயுதப்படை, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆலும் ஏனைய தமிழ் இராணுவ அமைப்புக்களாலும் கொழும்பினது சம்மதமின்றி உருவாக்கப்பட்டது. தமிழ் தேசிய இராணுவம் நன்றாக ஆயுத மயப்படுத்தப்பட்ட சிறந்த பயிற்சியளிக்கப்பட்ட படையாக விருந்தபோதும் விடுதலைப் புலிகளுக்கு இணையாக அதனால் முன்வரமுடியவில்லை.

## அரசின் அழுத்தம்

அமைதிகாப்புப் படையை வாபஸ் பெறுவதற்கு இந்தியா முன்வராமையால் 1989 புரட்டாதியில் நடந்த பேச்சுக்களின் போது வடக்கு கிழக்கு மாகாண சபையிலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அரசாங்கத்தைக் கொழும்பு வெளிப்படையாகப் புறக்கணித்தது. இருப்பினும் அதே மாதத்தில் இடம்பெற்ற இந்திய சிறிலங்கா சந்திப்புக்களைத் தொடர்ந்து இந்தியாவின் அழுத்தத்தால் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் சாசனம் வடக்கு கிழக்கின் சட்ட ஒழுங்கை கடைப்பிடிப்பதற்கும் அங்கிருந்த நிர்வாக இயந்திரத்தை பலப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தது.

## வி.பி.சிங்

1989இன் பிற்பகுதியில் இந்தியாவின் அரசாங்கம் மாற்றமடைந்தது. இந்திய அமைதிகாக்கும் படை நிபந்தனையின்றி வாபஸ் பெற்றுக் கொள்வது அவசியம் என்பதை ஆரம்பம் முதலேவலியுறுத்தி வந்த விஸ்வநாத் பிரதாப்சிங் பிரதமமந்திரியாக ராஜீவ் காந்தியின் இடத்திற்கு வந்தார்.

இந்திய அமைதிகாப்புப் படையினர் ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்தும் படிப்படியாக அகற்றப்பட்டனர். இந்திய இராணுவம் விலகும் இடங்களில் விடுதலைப் புலிகள் தங்களை நிலை நிறுத்திக் கொண்டனர். இவ்விதம் விடுதலைப் புலிகள் திரும்பி வந்ததையும் தமிழ்ப் பகுதிகளில் சுமூக நிலை தோன்றியதையும் இந்திய உயர்ஸ்தானிகர் எல்.எல்.மெ. காத்ரா 'இந்த ஒழுங்குகள் சிறிலங்கா அரசுக்கும் வடகிழக்கு மக்களுக்கும் ஏற்புடையதென்றால் எமக்கும் ஏற்புடையதாகும்' என்று சலிப்புடன் கூறினார்.

இலங்கையின் எஞ்சிய பகுதிகளில் ஜே.வி.பி.யி னரின் கலவரங்களை அடுத்து அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டு பரவலாகப் படுகொலைகளுக்கு சிங்கள இளைஞர்கள் உள்ளாகினார்கள். அதுவுமல்லாமல் ஜே.வி.பி.யின் உயர் தலைமைப்பீடமும் ஒழித்துக்கட்டப்பட்டது. தொடக்கத்திலிருந்தே ஒரு தீர்வை எட்டுவதில் அசமந்தப்போக்கும் அக்கறையின்மையும் கொண்டிருந்த பிரேமதாசா இந்தியப்படையை வெளியேற்ற வேண்டுமென்ற தன் எண்ணம் நிறைவேறியதும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைத் தொடர முடியாத நிலைமைகளை உருவாக்கினார். பேச்சுவார்த்தையும் முறிந்தது. ஆனால் விடுதலைப் புலிகளை ஏமாற்றலாம் என்ற பிரேமதாசாவின் எண்ணம் பலிக்கவில்லை. அமைதிப்படையினருக்கும் அதேகதிதான். விடுதலைப் புலிகளைப் பொறுத்தளவில் தமிழ் மண்ணில் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பையும் அட்டூழியங்களையும் ஒழிப்பதும் அவர்களை எம்மண்ணில் இருந்து அகற்றுவதும்தான் முழு நோக்குமாகும். இதில் அவர்கள் வெற்றியும் ஈட்டினர்.

# எத்தனை எத்தனை ...

நடுப்பக்கத் தொடர்ச்சி...

தான் போய்விட்டால் தந்தையும் இல்லை. இந்த இரண்டு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு சறோஜினி என்ன செய்யப்போகிறாள்" இந்த நினைவே அவரைத் தாங்கமுடியாமல், வதைத்துக்கொண்டிருந்தது.

மறுநாள் காலை – 17 ஆம் திகதி காலை 7.30 மணியளவில், அவர் நினைத்தது நடந்துவிட்டது. மகாலிங்கம் தன் மனைவி பிள்ளைக–ளைக் கதறி அழவிட்டு, வைத்தியசாலையிலிருந்து நிரந்தரமாகப் போய்விட்டார். மைத்துனனும், மருமகனும் தமது உயிரைப் பணயம் வைத்து அவரை மீட்டுக்கொண்டு வந்தும்கூட, எமனிடமிருந்து அவரை மீட்க முடியாமற் போய்விட்டது.

"அவர் போயிற்றார். இந்த இரண்டு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு இனி நான் என்ன செய்யப் போகின்றேன்" என்று சொல்லும்போது கண்ணீர் விட்டு அழுதார். என்னையும் மீறி என் கண்கள் கலங்கின.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர், மன்னார் வைத்தியசாலை முற்றத்தில், அந்த வேப்பமரத்து நிழலில், தலைவிரிகோலமாக என் அம்மா இப்படித்தானே இந்த நாலு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு, இனி என்ன செய்யப்போகின்றேன்? என்று அழுதிருப்பாள், அன்று நான் கனவிலே கண்டது போல், நினைவில் நிற்கும் காட்சியை இன்று நேராகவே அனுபவிக்கிறேன்.

நான் ஆறுதல் கூறினாலும், அந்தஇளம் விதவைத் தாயின் மனம் ஆறுதல் அடையுமா? சறோஜினியைப் போன்று எத்தனை பேரை, 'விதவை சந்திரிகா' தன் ஆட்சியில் உருவாக்கப் போகிறாரோ......?

தருமராஜசிங்கம் ஒரு ஓய்வுபெற்ற உதவி வைத்திய அதிகாரி. அவரும் மனைவியும் மட்டும்தான். இவர்களோடு மனைவியின் தாய் மாமனான மயில்வாகனம் பொன்னையா. பெரியவருக்கு வயது எண்பத்து மூன்று. இவர்களுக்கு அவர்தான் துணை. அவருக்கு இவர்கள்தான் துணை. கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலின் பின்பகுதியிற்தான் இவர்களது வீடு.

முதியவர் பொன்னையாவுக்கு வயதின் காரணமாகப் பார்வை குறைவு. பெரும்பாலும் எதற்கும் மற்றவர் துணை வேண்டும். 9ஆம் திகதி இராணுவம் வருகிறதாம் என்று சனங்கள் ஓடத் தொடங்கவே, இவர்களும் புறப்பட்டு விட்டார்கள். முதலில் கணவனும் மனைவியுமாகப் புறப்பட்டு அளவெட்டி தெற்கு வரை வந்தார்கள். அதற்கு மேல் இராணுவம் வரப்போவதில்லை என்ற நம்பிக்கை. அங்கு தெரிந்தவர் வீட்டில் மனைவியைப் பாதுகாப்பாக விட்டு, பெரியவரை ஏற்றி வருவதற்காகத் தருமராஜசிங்கம் சென்றார். அப்பொழுது கூட, ஆமி வாறான் என்ற பல்லவியுடன் மக்கள் சென்று கொண்டிருக்கின்றனரே தவிர, இராணுவம் வந்ததாகத் தெரியவில்லை.

வழக்கமாகப் படித்தவர்களுக்கு ஏற்படும் சலிப்பு அவருக்கும் ஏற்பட்டதில் வியப்பில்லை. ஏனென்றால் கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலடியில் அடிக்கடி நடக்கின்ற நிகழ்வு இது. இராணுவம் வருவதாகத் திடீர்ப் பரபரப்பு ஏற்படுவதும் மூட்டை மூடிச்சுகளுடன் தலைதெறிக்க ஓடுவதும், பின்னர் ஒன்றும் இல்லையென்று ஆயாசத்துடன் வீடு திரும்புவதும் அங்கு இடம் பெறும் சாதாரண நிகழ்வுதான். எனவேதான் அளவெட்டி மேற்குவரை, தானும் மனைவியும் ஓடியிருக்கத் தேவையில்லை என்று நினைத்தார். எதற்கும் பெரியவரை வீட்டில் விடாது மாசியப்பிட்டிவரை கொண்டு வந்து, அவருடைய நண்பர் ஒருவர் வீட்டில் விட்டுவிட்டு, மீண்டும் வந்து மனைவியையும் அழைத்துக்கொண்டு மாசியப்பிட்டிக்குத் திரும்புவது என்று முடிவெடுத்துக் கொண்டார். அதன்படியே கும்பளாவளைக்குச் சென்று பெரியவர் பொன்னையாவைச் சைக்கிளில் ஏற்றி, மாசியப்பிட்டியில் குறிப்பிட்ட நண்பர் வீட்டில் இறக்கி விட்டார். அந்த வீட்டிலும் அப்பொழுது ஒருவரும் இருக்கவில்லை. அவர்களும் ஏற்கனவே அங்கிருந்து புறப்பட்டுப் போயிருந்தனர். அவர்கள் இப்படிப் பயந்து போயிருக்கத் தேவையில்லை என்று அவர் மனம் எண்ணிக்கொண்டது.

அந்த வீட்டின் முன்னறையை அடிக்கடி இவர்கள் வந்து பாவிப்பது என்றபடியால், அதற்குரிய சாவி இவரிடம் இருந்தது. எனவே அறையைத் திறந்து பெரியவரை அதில் இருக்கும்படி கூறிவிட்டு, மீண்டும் மனைவியை அழைத்துக் கொண்டு வருவதற்காக அளவெட்டி மேற்கு வந்து விட்டார். ஆனால், டொக்ரர் நினைத்ததற்கு மாறாக அங்கு நிலைமை மாறிவிட்டது. மாசியப்பிட்டி வரை இராணுவம் முன்னேறி விட்டது. அளவெட்டியிலிருந்து முன்னேறிய இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத்தொடங்கியது. செல் அடிக்கத்தொடங்கியதும் மாசியப்பிட்டியில் இருந்துதான். எனவே திட்டமிட்டபடி மாசியப்பிட்டிக்குப் போக முடியவில்லை. அது மட்டுமல்ல, அளவெட்டி மேற்கில் இருந்தும் ஓடவேண்டியிருந்தது. எனவே அவரும் மனைவியும் உடுவிலுக்குத் தெரிந்த ஒருவரின் வீட்டுக்கு வந்தனர். பெரியவருக்கு என்ன நடந்ததோ என்று கவலைப்பட முடிந்ததே தவிர, வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

'புலிப்பாய்ச்சல்' அதிரடியின் பிறகு இராணுவம் மாசியப்பிட்டியில் இருந்து பின்வாங்கி விட்டனர். போராளிகள் அப்பகுதிக்கு மக்களைப் போக அனுமதித்த பின்னர், 17ஆம் திகதி காலை டொக்ரர் மாசியப்பிட்டிக்குச் சென்று, பெரியவரைத் தான் விட்டு வந்த வீட்டில் பார்த்தபோது, பெரியவர் அங்கு இருக்கவில்லை. வீட்டைச் சுற்றித் தேடினால். அவர் அங்கு எங்கும் காணப்படவில்லை. பெரியவருக்கு என்ன நடந்தது?

மிகுதி அடுத்த இதழில்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரஷ்யாவில் கம்யூனிஸ்டுகள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவார்களா?

ரஷ்யாவில் கம்யூனிஸ்டுகள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவார்களா?

ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவின் கிரம்ளின் சதுக்கத்தில் இருந்து சனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் கம்யூனிச அடையாளச் சின்னங்களான சுத்தியலையும், அரிவாளையும் 1991ல் தூர விசிறி எறிவதாகவும், ஆனால் 1995 இலே இதே சுத்தியலும், அரிவாளும் திரும்பி வந்து முறையே தலையிலும், முதுகிலும் அடிப்பதும் குத்துவதுமாக பிரபல 'ரைம்' வாரச் சஞ்சிகையில் அண்மையில் வரையப்பட்டுள்ள கேலிச் சித்திரம் தற்போது ரஷ்யாவில் உள்ள அரசியல் நிலைமையை வெகுவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

கடந்த மார்கழி மாதம் 17ம் திகதி "டுமா" (DUMA) என அழைக்கப்படும் ரஷ்யப் பாராளுமன்றத்திற்கான தேர்தலில் 22 வீதமான வாக்காளர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களித்திருப்பது ரஷ்யாவில் உள்ள 'சீர்திருத்தக் கட்சிகளையும்', மேற்குலக நாடுகளையும் விழித்தெழச் செய்துள்ளது. இதேவேளை விளாடிமிர் சிறினோவ்ஸ்கியின் 'தேசிய லிபரல் சனநாயகக் கட்சி' 11 வீத வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. டுமாவிற்கான 450 ஆசனங்களில் மொத்தமாக 157 ஆசனங்கள் இத்தேர்தலின் பின் கம்யூனிஸ்டுகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சனாதிபதி யெல்ட்சினை ஆதரிக்கும் 'ரஷ்யா எமது தாயகம்' எனும் கட்சிக்கு 55 ஆசனங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன.

டுமாவில் கணிசமான செல்வாக்கினைப் பெற்ற கம்யூனிஸ்டுகள் எதிர்வரும் யூன் மாதத்தில் இடம்பெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் தற்போது தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர்.

சோவியத் அதிகார பீடத்தில் உள்ள தீவிரவாதிகளை 1993 ஐப்பசியில் தாங்கிகளின் உதவியுடன் அடக்கி ஒடுக்கிய யெல்ட்சின் தனது ஆளுமையை நிலைநிறுத்தி அதிகாரப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைத்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இதனைத் தொடர்ந்து டுமாவையும், கூட்டமைப்புக் கவுன்சிலையும், மேல் சபையையும் உருவாக்கிய யெல்ட்சின் 1993ல் தேர்தல் ஒன்றினையும் நடத்தி முடித்தார்.

ரஷ்ய அரசியலமைப்பை மாற்றி எழுதிய யெல்ட்சின் சர்வ அதிகாரமுள்ள பிரான்சிய சனாதிபதியின் பதவியை ஒத்ததாக தனது பதவியையும் சக்தி வாய்ந்ததொன்றாக அமைத்துக் கொண்டார். இதன் மூலம் ரஷ்ய பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன.

1993ல் இடம்பெற்ற தேர்தலில் சீர்திருத்தக்கட்சியே பெரும்பான்மைக் கட்சியாக தெரியப்பட்டாலும் கணிசமான தேசியவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் கூட தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

1993ல் ஏற்பட்ட வன்முறை முரண்பாடுகள் போலில்லாவிட்டாலும் இவர்கள் யெல்ட்சினுக்கு தலையிடியைக் கொடுத்துக் கொண்டே இருந்தனர். ஆனால் 1995ல் இடம் பெற்ற தேர்தலில் கம்யூனிஸ்டுகளும், தேசியவாதிகளும் அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியிருப்பது அவர்களுக்கு உளரீதியான உந்துதலை அளித்துள்ளது எனக் கூறலாம்.

இவ் வெற்றி அலையைப் பாவித்து இவர்கள் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலிலும் வெற்றியீட்டுவார்களாயின் அதிகாரம் மீண்டும் கம்யூனிஸ்டுகள் கைக்கு மீண்டும் மாறிவிடும் எனவும் இடம் பெற்று வரும் சீர்திருத்த நடவடிக்கைகளில் தடங்கல்கள் ஏற்படும் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் கம்யூனிஸ்டுகள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவது என்பது ரஷ்யாவில் மட்டும் இடம் பெறவில்லை. அண்மையில் போலந்தில் இடம் பெற்ற தேர்தலிலும் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

போலந்தில் சுதந்திரமான தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும் என்ற லெக் வலசாவின் போராட்டத்தின் விளைவாக அங்கு ஆட்சியில் இருந்த கம்யூனிஸ்ட் அரசு 1989 ஆனி தேர்தலை நடாத்தியது.

'சனநாயகத்தின் வீரன்' எனக் கருதப்பட்ட வலசா தேர்தலில் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், கடந்த கார்த்திகை மாதத்தில் மீளவும் அவர் போட்டியிட்ட போது கம்யூனிஸ்டுகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளார். இதே போன்று ரஷ்யாவிலும் சனநாயகத்தை முன்னெடுத்துச் செல்லுகின்ற யெல்ட்சினும் எதிர்வரும் தேர்தலில் கம்யூனிஸ்டுகளினால் தோற்கடிக்கப்படுவாரா? என்பதே பலர் மனதில் இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

யெல்ட்சினுக்கு இன்று போட்டியாக இருப்பவர் ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான ஜெனடி ஜுகானோவ் என்பவராவார். தென் மேற்கு ரஷ்ய கிராமம் ஒன்றின் பாடசாலை ஆசிரியர் ஒருவரின் மகனான இவர் 1967ல் தனது கட்சிக்காக முழு நேரமாக உழைக்கத் தொடங்கினார்.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட சீர்திருத்தப் போக்குக்கு எதிராக இருந்த இவர் 1990ல் தனியான ஒரு கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றினை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

1991ல் கம்யூனிஸ்ட் கட்சிகள் தடைசெய்யப்பட்டபோது பல தேசியவாத அமைப்புக்களுடன் இணைந்த ஜுகானோவ் யெல்ட்சினுக்கெதிராக இடம்பெற்ற பல போராட்டங்களில் கலந்து கொண்டார்.

1992ல் இத்தடை நீக்கப்பட்டபோது தனது கட்சியை மீளவும் உருவாக்கி அதன் மத்திய குழுவின் தலைவரானார். இன்று இவரது கட்சிக்கு 5 இலட்சம் அங்கத்தவர்கள் உள்ளதுடன், ரஷ்யாவின் ஒவ்வொரு பகுதியிலும் கிளைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவரது இவ்வெற்றிக்குக் காரணம் ரஷ்ய மக்கள் முதலாளித்துவம் மீது தொடர்ந்து அதிருப்தியடைந்து வருவதே. பொருளாதார ரீதியில் நோக்குவோமாயின் முதலாளித்துவத்தின் பெறுபேறுகள் நீண்ட காலத்திலேயே சாதகமானவையாக இருக்கும்.

ஆரம்ப காலத்தில் குற்றங்கள், ஊழல்கள் அதிகரிப்பதும், வருமானத்தில் பாரிய இடைவெளி ஏற்படுவதும், வறுமையான சூழ்நிலைகள் தோன்றுவதும் தவிர்க்க முடியாதவைகளாகின்றன.

ஓரளவு நியாயமான ஆனால் நிலையான வருமானத்துடன் வாழ்ந்த பெருந்தொகையானோர் உதாரணமாக அரச உத்தியோகத்தரான பொலிஸ்காரர்கள், ஆசிரியர்கள், தாதிமார் போன்றோர் ஒப்பீட்டு வருமான அளவுகோலின் விளைவாக நிலை தடுமாறியுள்ளனர். அதேவேளை ஓய்வூதியம் பெறுவோர், மற்றும் முன்னாள் போர்வீரர்கள் போன்றோர் இறந்து வாழும் கீழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மேலும் ரஷ்யாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு பெரும் காலாக இருந்த பல பழைய கம்யூனிசவாதிகள் புதிய முதலாளித்துவ ஏணியில் விரைவாக ஏறிச் செல்வது பலருக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. அரச தொழிற்சாலைகள், தனியார் மயப்படுத்தப்படும் போது பழைய முகாமையாளர்களே மிகவும் அடிமட்ட விலையில் அவற்றை வாங்குகின்றனர். இவர்கள் தமது செல்வாக்கைப் பாவித்து அரச வங்கிகளில் மிகக் குறைந்த வட்டி வீதங்களில் கடன்களைப் பெற்று தம்மை உயர்த்திக் கொண்டு போகின்றனர். இது பலர் மத்தியில் அதிருப்தியையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அரச உடைமைகள் பாரியளவிலும், விரைவாகவும் தனியார் மயப்படுத்தப்பட்டதால் தொழிற்சாலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதுடன் முன்னெப்போதுமில்லாதவாறு வேலையற்றோர் தொகையிலும், பணவீக்கத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டு ரஷ்ய சமூகத்தவரிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்திருந்தது.

மேலும் சோவியத் யூனியன் பிளவுபட்ட பின் அமெரிக்காவும், அதன் நேசநாடுகளும் சர்வதேச ரீதியில் மொஸ்கோவை ஓரங்கட்டும் வகையில் தமது வெளிநாட்டுக் கொள்கையை வகுத்து வருகின்றன எனும் உணர்வு பலர் மத்தியில் ஏற்பட்டுள்ளது. கிழக்கைரோப்பாவில் உள்ள முன்னாள் சோவியத் நேசநாடுகள் பல இன்று நேட்டோவின் செல்வாக்கின் கீழ் வருவது, பொஸ்னிய அமைதிகாக்கும் பணியில் நேட்டோ முக்கிய பங்கு வகிப்பது போன்றன கம்யூனிஸ்டுகள் மற்றும் தேசியவாதிகளை ஆத்திரமடையச் செய்துள்ளதுடன் யெல்ட்சின் வெளிநாட்டுக்கொள்கையில் மிகவும் மென்மையான போக்கைக் கொண்டிருக்கிறார் என விமர்சிக்கவும், பிரச்சாரம் செய்யவும் வழிவகுத்துள்ளன.

மேலும் ஐப்பசி இறுதியில் 64 வயதுடைய யெல்ட்சினின் இருதயத்துக்கான இரத்த ஓட்டத்தில் நிலையற்ற தன்மை காணப்படுகின்றதெனக் கூறி வைத்தியர்கள் கட்டாய ஓய்வு எடுக்கும்படி கூறியிருந் தமையால் டுமா தேர்தலில் இவரால் முழுமையாகப் பங்கெடுக்க முடியாமல் போய்விட்டது.

கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை அவர்கள் தாம் நாஸ்திகக் கொள்கைகளை கைவிட்டுள்ளதுடன், கலப்புப் பொருளாதாரத்தை ஆதரிப்பதாகவும், தனியார் மயப்படுத்தலை எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர். ஆனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அந்நியப்படுத்தக் கூடாது என்பதற்காக சகல தொழிற்சாலைகளும் மீளவும் தனியார் மயப்படுத்தப்படும் என்பதற்கில்லை எனவும் கூறுகின்றனர். நிலைகுலைந்துள்ள இராணுவத்துக்கு புத்துணர்வு கொடுத்து பேச்சுவார்த்தைகள் மூலமாக சோவியத் யூனியனை மீளவும் கட்டி எழுப்புவோம் அல்லது முன்னாள் குடியரசுகளைக் கொண்ட 'பாரிய ரஷ்ய அரசை' உருவாக்குவோம் என்றும் இவர்கள் கூறி ரஷ்ய மக்களின் உணர்வுகளை தட்டி எழுப்புகின்றனர். மேலும் கல்வி, சுகாதாரம், ஏனைய சமூக துறைகளில் அரசமானியம் வழங்கப்படும் என்றும் பலம் வாய்ந்த ரஷ்யாவுக்கான வெளிநாட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் என்றும் தமது கொள்கைகளை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை இரண்டு மாதங்களாக ஓய்வெடுத்து விட்டு வந்துள்ள யெல்ட்சினோ "கம்யூனிஸ்டுகள் தனது சீர்திருத்தக் கொள்கைகளை முடிவுக்கு கொண்டுவருவதை அனுமதிக்க மாட்டேன்" என்று கூறியுள்ளார்.

நடந்து முடிந்த டுமா தேர்தலில் 43 கட்சிகள் போட்டியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் மாதங்களில் இவற்றில் எத்தனை கட்சிகள் கம்யூனிச அணியில் ஒன்றிணைகின்றார்கள் என்பதைப் பொறுத்தே கம்யூனிஸ்டுகளின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது எனலாம்.



ரஷ்ய அரசியலமைப்பை மாற்றி எழுதிய யெல்ட்சின் சர்வ அதிகாரமுள்ள பிரான்சிய சனாதிபதியின் பதவியை ஒத்ததாக தனது பதவியையும் சக்தி வாய்ந்ததொன்றாக அமைத்துக் கொண்டார். இதன் மூலம் ரஷ்ய பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன.

www.tamilarangam.net



# கவிதைக் களம்

## குஞ்சி அழகும் மஞ்சள் அழகும் அழகல்ல இளையவரே!

எங்கும் போகவில்லை எமது வலிகாமம்.
அங்கேயே இருக்கிறது ஆனால், நாம்தாம்
அதைவிட்டு ஓடி அதிக தொலை வந்துவிட்டோம்!
பதைக்கலையோ உம்நெஞ்சம்? பற்றி எரியலையோ?
கதையளந்து கொண்டு கல்லுமுள்ளில் திரிகின்றோம்!
விதைவிட்ட நிலமங்கே வெந்தழிய விட்டோமே!
சுவையில்லா வாழ்வில் சுருண்டு மடிவதுவோ?
இவையெல்லாம் ஏனென்று எண்ணிப் பார்த்திடுக!
வந்த பகை ஓட்ட வல்லமை அற்றவர்தாம்
முந்திப் பிறந்த மூத்தகுடி எனலாமோ?
ஊமைமுடம் குருடென்னும் உடற்குறையர் அல்லோமே
தீமையினைக் கண்டும் சினந்தெழார் கோழையரே!
அஞ்சியஞ்சிச் சாவார், அடுகளத்தில் போராடார்
நெஞ்சுரம் இல்லா நடுமரங்கள் போல்வார்க்கு
குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல இளையவரே!
வஞ்சியரே வாரும்! காளையரே வாரும்!
கஞ்சி குடிக்கவழி கண்டிடலாம் கையில்
கலந்தூக்கிக் களமாடக் கடிது செல்வீர்!
பழந்தமிழர் வீரத்தைப் பகையுணரக் காட்டுங்கள்!
எங்கும் போகவில்லை எமது வலிகாமம்,
அங்கேயே இருக்கிறது அதிவிரைவில் போவோமே!

-வீ. பரந்தாமன்

## ஆறிலுஞ்சா, நூறிலுஞ்சா ஆகட்டும் பார்ப்போம்!

யாழ்ப்பாண நங்கைமுகம் சிதைஞ்சு போச்சுது
யானைச் சண்டைநடந்த நிலம்போல் நசிந்து போச்சுது
காழ்ப்பான சிங்களவன் படை நடத்துறான்
கட்டிடங்கள் சிதைந் துடையச் செல்லடிக்கிறான்
தாழ்ப்பாளுடைத் தெங்கள் வீட்டுப் பொருளை அள்ளுறான்
தமிழரெங்கள் வீடுமனையில் எரியை வைத்தின்று
ஆப்பிழுத்த குரங்கினைப்போல் அகப்பட்டுப் போனான்
அடியடா படலெயிலெழுந் தோடிவா மச்சான்!

மாப்பாண முதலிநல்லூர்க் கோவிற் பக்கமும்
மற்றுமெங்கள் கொழும்புத்துறை ஊரின் பக்கமும்
காப்பாய் எண்ணிப் படையமர்த்திக் கண்டி வீதியை
காணவென்று வந்துபுலியின் கண்ணி வெடிகளில்
சிக்காய்க்குலை போலத்தலைகள் சிதறிப் போகிறார்
செத்தவரைத் தானுந் தூக்குந் தென்பில்லாமலே
வாய்ப்பாய்க்கொடி ஏற்ற வந்தார் மீளப்போறாரோ
வாடாமச்சான் சிங்களவன் வாயையடக்குவோம்.

மட்டமாக நினைத்து வந்தார் புலிகள் வீரத்தை
மக்களெமைப் பிரித்துப் புலியை மடக்க வந்தவர்
கிட்டவந்தே புரிந்து கொண்டார் நிலைமை மோசத்தை
கிழடுகளும் குண்டுகையிற் கொண்டு புலிகள்பின்
வட்டமிட, வாலிபர்செந் தீயைச் சுமக்கிறார்
வனிதையர்கைச் சுடுகுழல்கள் நெருப்பைக் கக்குது
பட்டதினிப் போதுமென்று ஓடுவார் மச்சான்!
பயப்படாமல் வாடா புலிகள் பாசறை போவோம்.

-தில்லைச்சிவன்

## நிலையாகப் பகை வாழ முடியாது

செம்மணித் தெரு
தமிழன் வாழ்வதைச் சுட்டெரிக்க வந்த
சிங்களத்துச் சூரியக்கதிரிலிருந்து விடுபடவைத்து
ஒரு வரலாற்றுப் பதிவது.
உலகத்திலுள்ள தமிழனை
ஒன்றாக்கி எழவைத்த
புதியதொரு வரலாற்றின் வடிவது.
மழையில் நனைந்தபடி
அந்தத் தெருவைக் கடந்தோரின்
அழுகை ஒலி எட்டுத்திசை
கடந்தும் இன்னும் ஒலிக்கிறது.
அந்தத் தெருவும் அழுகிறது.
ஊர்பிரிந்து வந்தவரை சுமந்து
நின்ற சிறு தெருவே
எம்ஊரில் வந்தபகை துரத்த
எங்கள் வேங்கைகளை ஏற்றிச்சென்ற எம்தெருவே
உன்மீது அழுதபடி சென்ற மக்கள் சினந்தபடி.....
மீண்டும் ஊர் போவார்
மீண்டும் நீ எம்மோடு
கலகலப்பாய் சிரித்திருப்பாய்
புலிவீரர் பகைதுரத்தி வருவார்கள்
சென்றமக்கள் துயர்போக்கித் தருவார்கள்
ஒருநாளும் எம்மண்ணில்
நிலையாக பகைவாழ முடியாது.

-வெள்ளை

## எதிரி எனக்கு அளித்த வரம்

இடர்சூழ்ந்தவாழ்வே இன்னும் வருக.
என்னை விட்டகலாதே.
நீ வரும்போதே
நான் புதிது புதிதாகப் பிறக்கின்றேன்.
இருளையும் பகலையும் இனம் காணுகின்றேன்.
மேலும் மேலும் எழவேண்டுமென்ற எண்ணம்
என்னுள்ளே பெருகிறது.
துயரம் அழுவதற்காக வருவதில்லை
எழுவதற்கென்று இப்போதுணர்கின்றேன்.
இன்னலிடை இருக்கும் போது
இன்பமறிகின்றேன்.
போரிடும் எண்ணம் பிறக்கிறது
ஊர்விட்டகலாது இருந்தவரை
உலகம் இவ்வளவு விரிந்ததென்று
விளங்கவில்லை.
இடம்பெயர்ந்து செல்லச்செல்ல
திசைகளும் நீண்டு செல்கிறது.
இதுகாலவரை
முட்டைக்குள்ளிருந்தேனென அறிகிறேன்.
உறவு நரம்புகளில் புதிய குருதி பாய்ந்து
எவரெவரின் கோடியெல்லாம்
எனக்கு உரிமையாகிறது.
"சாப்பிட்டாச்சா"
நேற்றுவரை மனைவியே கேட்டாள்.
இன்று எவரெவரெல்லாம் கேட்கின்றனர்
"செலவுக்கு பணமுண்டா?
தேவையெனிற் தருகிறேன்
வழிமறித்துப் பல வாய்கள் குரல்வைக்கின்றன.
நான் தனியனல்லன்
பாலைவனத்தில் வழிதவறிய பயணியுமல்ல......
பெரிய சொந்தங்கள் கூடிய சந்தைக்குக்
குத்தகைக்காரன்
எதிரி எனக்களித்த வரமிது.

-புதுவை இரத்தினதுரை

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

## -இத்தாலிக் கிளையின் செய்தி

தமிழர் புனர்வாழ்வுக்கழக 10வது ஆண்டை நிறைவு கொள்ளும் முகமாகவும், சிங்களப் பேரினவாத அரசின் இராணுவ முற்றுகையினால் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு, சொத்துச் சுகங்களை இழந்து அவதியுறும் எமது உடன்பிறப்புக்களுக்கு உதவும் முகமாகவும், தமிழர் புனர்வாழ்வுக் கழக இத்தாலிக் கிளையினரால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட 10வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அதிஸ்டலாபச் சீட்டிழுப் பொன்றும் நடாத்தப்பட்டது. இதில் தெரிவு செய்யப்பட்ட அதிஸ்டசாலிகள் அனைவரும் தாயகத்தின் தேவையறிந்து, நெஞ்சம் கனத்த துயரோடு, உணவுக் கஷ்டத்தினால் எத்தனையோ நாட்கள் சாப்பிட்டும் சாப்பிடாமலும் அவதிப்படும் எமது உறவுகளுக்காகத் தங்களுக்குக் கிடைத்த பரிசில்கள் அனைத்தையும் திருப்பித் தந்துள்ளனர். இவர்களையும் இவ்வதிஸ்டலாபச் சீட்டிழுப்பிற் கலந்து கொண்ட அனைத்துத் தேசப்பற்றாளர்களையும் தமிழர் புனர்வாழ்வுக்கழக இத்தாலிக் கிளையின் சார்பில் நன்றியுணர்வுடன் கரம் பற்றிக் கொள்கின்றோம்.

| | | சீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1ஆம் பரிசுக்குரியவர் | றெசால்பா–பலெர்மோ | 0269 |
| 2ஆம் பரிசுக்குரியவர் | ஞா.யோன்செபரட்ணம் –மணற்காடு | 01313 |
| 3ஆம் பரிசுக்குரியவர் | ந.றுபினா–ஆனைக்கோட்டை | 0052 |

10 ஆறுதல் பரிசில்கள்

| | | |
|---|---|---|
| 1. | கொன்சன் பலெர்மோ | 0676 |
| 2. | பி.வேலுப்பிள்ளை–யாழ்ப்பாணம் | 1237 |
| 3. | கிறேஸ–மணற்காடு | 0274 |
| 4. | றெபின்–பலெர்மோ | 1276 |
| 5. | சீலன்–பொயிட்டி | 1301 |
| 6. | வசீகரன்–ரஞ்ஞனாஸ்–பலெர்மோ | 0674 |
| 7. | எட்மன்–பலெர்மோ | 0087 |
| 8. | றகி–மணற்காடு | 1097 |
| 9. | ரகு–பலெர்மோ | 0734 |
| 10. | சற்குணம்–பலெர்மோ | 0729 |

# இலங்கைத் தீவில் ...

4 ஆம் பக்கத் தொடர்ச்சி —

புத்த மதத்திற்கு மாறி அமைதி பெற்றான்.

ஆனால் சிறிலங்கா பௌத்த மதபீடாதிபதிகளோ யுத்தத்திற்கு தூப தீபம் காட்டி உயிரழிவுகளுக்கு வழிகோலுகிறார்கள்.

பௌத்த மத பீடாதிபதிகளும், புத்த தேரர்களும் யுத்தவெறி பிடித்து அலையும்போது சிங்கள இராணுவத்தினரைப் பற்றி சொல்லத் தேவையில்லை.

மேஜர் B.C.K.L. சில்வா,S.L.L.P ஐலண்ட் பத்திரிகையில் (24.12.95) ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அதனைப் படித்தால் சிங்கள பௌத்த இனவெறி எவ்வளவு தூரம் தலைக்கு ஏறியிருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

"We are bestowed with a magnificent history. We should never forget our ancestoral records that go as far back as the Ravana Era. The history of our country shows how in the ancient times kings like Dutagemunu untied our divided land.

King Dutagemunu is born again. King Abaya is with us. King Parakum is fighting here once again. Their chief ministers and soldiers are re-born to save our motherland. Thus bold soldiers are re-born to play the same role....."

தமிழினத்துக்கு எதிரான போரில், இறந்துபோன துட்டகைமுனுக்களும், பராக்கிரமபாகுக்களும் எப்படி துணைக்கு அழைக்கப்படுகிறார்கள் என்பதற்கு சில்வா எழுதிய கட்டுரை சிறு உதாரணமாகும்.

இலங்கை வேந்தன் எண்திசையும் தன் புகழை வைத்து ஆட்சி செய்த இராவணனை கட்டுரையாளர் சொந்தம் கொண்டாடுவது இங்கு கவனிக்கத்தக்கது. இராவணன் பரம்பரை சிங்களவர் என்று சொல்லுவதன் மூலம் தாங்களே இலங்கைத் தீவின் மூத்த குடியென்று கட்டுரையாளர் நிரூபிக்கப் பார்க்கிறார்.

தமிழருக்கு எதிரான சிங்கள பௌத்த வெறியர்களது போர்க்கோலத்தை எம்மால் ஓரளவேனும் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் சிங்கள கத்தோலிக்க திருச்சபையின் மேற்றிராணியார் தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் அளிப்பதை புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. சிறிலங்கா தேசிய பாதுகாப்பு நிதிக்கு உதவுமாறு அழைப்பு விடுத்ததும் அல்லாமல் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையையும் கத்தோலிக்க திருச்சபையின் மேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டு நியாயப்படுத்தியுள்ளார்.

**Question: how do you see operaion Riviresa and the capture of Jaffna by the troops?**

**Answer: The 'Reviresa' battle began because the LTTE would not come for political talks. Therefore the government had no alternative. There was no choice but to go into battle with the hope of achieving peace finally.**

சனாதிபதி சந்திரிகா சொல்வதையே கத்தோலிக்க மேற்றிராணியார் கிளிப்பிள்ளை மாதிரி ஒப்புவிக்கிறார். 'போர் மூலம் சமாதானம்' இதுவே சந்திரிகாவின் பல்லவி. 'சண்டை மூலம் சமாதானம்' இது கத்தோலிக்க மேற்றிராணியாரின் அனுபல்லவி. இருவருக்கும் இடையில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?

இதே சமயம் மறைந்த முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அவர்கட்கு வகுப்புவாதிப் பட்டம் சூட்டி அவரது பெயருக்கு களங்கம் கற்பிக்க சிங்கள பௌத்த பேரினவாதிகள் மெத்தப் பாடுபடுகிறார்கள்.

அப்படி என்னதான் பேராசிரியர் துரைராசா செய்து விட்டார்?

நீர்வேலியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட இரண்டடுக்கு பாதாள மருத்துவமனை பேராசிரியர் துரைராசா அவர்களின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்டதாம்.

இராணுவத்திற்கு மருத்துவ மனைகள் கட்ட சிங்களப் பொறியியலாளர்கள் உதவலாம். அது தேசிய வாதம். விடுதலைப் புலிகளுக்கு மருத்துவ மனைகட்ட தமிழ்ப்பேராசிரியர் உதவக் கூடாது. அது வகுப்புவாதம்.

கொழும்பில் இருந்து தமிழ் மக்கள் சார்பாக குரல் கொடுக்கும் அமைப்பு ஒன்றின் செயலாளர் சதானந்தனின் வீடு இராணுவம் காவல்துறை அதிகாரிகளால் விடுதலைப் புலிகளது ஆதரவாளர் என்ற சந்தேகத்தில் சல்லடை போட்டுத் துளைக்கப்பட்டது. சோதனை செய்வதற்கு வேண்டிய நீதிமன்ற அனுமதிப் பத்திரம் காட்டப்படவில்லை. சோதனையின் முடிவில் சிங்களத்தில் எழுதிய அறிக்கையில் சதானந்தன் கையெழுத்திடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். மொழி பெயர்ப்பு மறுக்கப்பட்டது.

தமிழுக்கு சமஅந்தஸ்த்து சிங்கள அரசால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தமிழ்க் கைகூலிகள் ஒப்பாரி வைக்கிறார்களே. அதன் (அவ) லட்சணம் இப்போது தெரிகிறதா?

மொத்தத்தில் இவை யாவும் சிங்களவரும் தமிழரும் ஒரு நாட்டில் ஒரு ஆட்சியின் கீழ் இருக்க முடியாது இனரீதியாகவும் மதரீதியாகவும் அவர்களுக்கிடையில் பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட்டதையே எடுத்துக் காட்டுகிறது.

# "நாம் அனைவரும் ஆயுதம் தூக்க அரசால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்"

"மாணவர் என்ற மகத்தான சக்தியால், தோள் நிமிர்த்துகின்ற நீங்கள் பதில் சொல்ல வேண்டிய காலம் இது: கல்வியை இழந்தவர் தலை நிமிர்த்துவதில்லை. ஆனால் அடிமை பெறும் கல்வியால் யாருக்கேனும் லாபமுண்டா? ஊர் எரியும்போது வாயாலே ஓதும் கல்வியும், கலையும் நெருப்பை அணைக்குமா?"

-இவ்வாறு பருத்தித்துறைக் கோட்ட ஆசிரியர்கள், எமதன்புக்குரிய மாணவர் செல்வங்களே எனத் தலைப்பிட்டு வெளியிட்டுள்ள கடிதப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அப்பிரசுரத்தில்:-

"நாம் உரிமையுடன் நேசித்துப் பேணி, அழகுறச் செய்த அந்த அறிவாலயங்களையெல்லாம் எதிரி ஆக்கிரமித்துக் கொடி நாட்டி வெறியோடு நிற்கிறான்: நாங்கள் இது வரை எதிரியின் இடையூறுகளின்றி கண்விழித்துக் கல்வி கற்பதற்கெல்லாம் காரண கர்த்தாக்கள் யார்? களத்திலே கண்ணிமை மூடாது நின்று, வல்லமை பேசி நின்ற விலங்குகளை வரவிடாது தடுத்தது உங்கள் சகோதரர்கள்தானே. குப்பி விளக்கிலே நீங்கள் படிக்க, அவர்கள் செந்நீரை எண்ணையாய்த் தந்தார்கள். எத்தனை நாட்கள் அவர்கள் மட்டும் பாரத்தைச் சுமப்பது? காலத்தின் சேதி எங்களையும், உங்களையும் பாரந் தூக்கச் சொல்கிறது. இனியும் நாம் கைகட்டி வாளாதிருப்போமானால் எமது வாழ்வே அஸ்தமனமாகிவிடும். அப்படி வாழ்ந்தால் எம்மை ஒரு போதும் வரலாறு மன்னிக்காது"

"இன்று எம்மை வாழவே விடப்போவதில்லையென்று, எதிரி தன் செயல்களால் விளங்கப்படுத்திய பின்பும், எமது உயிருக்கே உத்தரவாதம் இல்லை என்பதை, எதிரி தனது வெறித்தனத்தால் உணர்த்திய பின்பும் கல்வி உங்களுக்கு வாழ்வைத் தருமென இனியும் எப்படி நாம் உங்களுக்கு அறிவுரை சொல்ல முடியும்?"

"நாம் எல்லோரும் ஆயுதந்தூக்கி, ஆயுதத்துடன் எமைக் கொல்ல வருபவனைக் கொல்வதைத் தவிர வேறு எந்த வழியையும் சிங்கள அரசு எமக்கு விட்டு வைக்கவில்லை. எனவே, நாமனைவரும் ஆயுதந்தூக்கச் சிங்கள அரசால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்"

இந்த வரலாற்றுத் தேவையை விளங்கிக் கொண்டு விழிப்புணர்ச்சியுடைய வேண்டியது, எங்கள் எல்லோரினதும் கட்டாய தேவையாகிவிட்டது. நாமனைவரும் களத்திற் சந்தித்தால் மட்டுமே, மீண்டும் யாவரும் எங்கள் நிலத்தில் சந்திக்க முடியும் என்பதே ஆசிரியர்களாகிய நாம் இன்று உங்களுக்குச் சொல்லக் கூடிய அறிவுரையாகும்" எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# செவ்வந்தி ....

## சிறுகதைத் தொடர்ச்சி .......

"ராஜீ ஒரு டாக்டராக வரவேணும் எண்டது, அவற்ற ஆசை. நான் திரும்பவும் வேலைக்கு எழுதிப் போட்டு ள்ளேன். நான் வேலைக்குப்போய் ராஜியை ஒரு டாக்டராக ஆக்க வேண்டியது என்ர கடமை......"

"உன்ர கடமையா......?"

"ஆமா—அப்பா. அவர் வாழ்ந்த இந்த வீட்டை விட்டு எண்ணால வரமுடியாது. அவரோட ஆறுவருசம் குடும்பம் நடத்திறிருக்கிறன்.

ஒரு பெண் புருசன் வீட்டுக்குப் போனபின், அவளுக்கு இன்பமோ, துன்பமோ அதைப் புருசன் வீட்டிற்தான் அனுபவிக்கவேணும் அப்பா நீங்கள் உங்கள் பெண்ணைத் தாரைவார்த்து இன்னொருவர் கையில் ஒப்படைத்தபின், அவளுடைய விருப்பங்களுக்கு நீங்கள் தடையாக இருக்கக் கூடாது—"

"இந்தச்சின்ன வயதில விதவையாகி நிற்கிறாயே—! வெளிநாட்டுக்குப் போனால் கொஞ்சம் மனநிம்மதியோட இருப்பாய் பிள்ளை—"

"அப்பா— இங்க கிடைக்காத மனநிம்மதி வெளிநாட்டில கிடைக்கப் போகுதா?"

"நீ இப்ப வரப்போறியா இல்லையா—?"

"முடியாது. இந்தமண்ணை விட்டு ஓிடமும் போக, எனது மனசுக்குத் தைரியமே இல்லை. நான் வரமாட்டன்—"

"எக்கேடு கெட்டாவது போ—" எனத் தகப்பன் கோபமாகக் கூறி விட்டு வீட்டிலிருந்து வெளியேறினார். செவ்வந்தி குசினிக்குள்போக எத்தனிக்க, அவ்வளவு நேரமும் மௌனமாயிருந்த கபிலன், அண்ணி நீங்களும் பிரணவனும் பிறிதிரமாய் வெளிநாட்டில கொஞ்சக்காலம் இருந்திட்டு வாருங்கோ. நான் ஏதாவது வேலைசெய்து ராஜியைப் படிப்பிக்கிறன் என்ற கபிலனைக் கூர்ந்து பார்த்த செவ்வந்தி, கபிலன் நீ ஒரு போராளி. நீ வீட்டைப்பற்றி நினைக்கவே கூடாது என்றாள். 'அண்ணி— நீங்கள் வேலைக்கும் போகவேண்டாம். நான் உழைத்து— என்று ஏதோ கபிலன் சொல்ல வர 'கபிலன், ஒரு இலட்சியத்தைத் தேடிப்போன நீ, அந்த இலட்சியத்தை நிறைவேற்றாமற் பாதியிலேயே விட்டிட்டு வாறன் என்று சொல்லுகிறீரே, இது என்ன நியாயம் அண்ணி— எனக்குப் போராடத்தான் விருப்பம். ஆனால் என்ர வீட்டு நிலைமை—

'கபிலன்— என்னைப்போல எத்தனையோ பெண்கள் இண்டைக்குப் பூவில்லாமல், பொட்டில்லாமல், தாலியில்லாமல் கயவர்களின் அட்டூழியத்தால் வாழுகின்றார்கள். இப்படியே இந்த அட்டூழியம் தொடர்ந்தால் தமிழர்களின் நிலை என்ன? அதுக்கு உம்மைப் போல இளைஞர்கள் தான் இந்த நாட்டையும், மக்களையும் காப்பாற்ற வேணும். அது உங்கட கடமை' என்றாள் செவ்வந்தி. 'அண்ணி— வந்து—'

"இதோ பாரும் கபிலன், உமக்குப்பின்னால் பிரணவன் உம்முடைய பணியைத் தொடர்வான்......" 'அண்ணி நீங்கள் என்ன செல்லுறியள்......'

"அவன் தன்ர தகப்பனைக் கொன்ற பாவியளைக் கொல்ல வேண்டாமா? அவனை நானே சந்தோசமாய்க் களத்திற்கு அனுப்பி வைப்பன்......"

"அண்ணி, நான் ஒரு இலட்சியத்தை நினைத்துக்கொண்டுதான் களம் புகுந்தேன்: இப்ப அண்ணையின் மறைவால் குழம்பி விட்டேன். ஆனால், இப்போது திரும்ப நான் நிமிர்கிறேன். எமது நாட்டையும், மக்களையும் காக்க வேண்டியது எங்கள் கடமை......"

"சரி சரி வீட்டில நிண்டு சோம்பேறி பத்தாமற் கெதியில போய்ப்போராடும்" எனச்சொல்லி விட்டுப்போன செவ்வந்தியைப் பார்த்து, புருசனைப் பறிகொடுத்தும் எங்கள் நாடு விடுதலை பெறவேண்டும் என்று நினைக்கும் அண்ணியாரை எண்ணிக் கபிலன் பூரிப்படைந்தான்.


www.tamilarangam.net

# தாக்கியடித் தெதிரியுயிர் போக்க வாநீ

என்று படுவாயென்று எதிரியெதிர் பார்க்கையிலே
தின்று படுத்திருப்பதுவும் ஆண்டுதோறும்
கன்று படுவதுமாக இருத்தல் நன்றோ?
கொன்றொழிக்கும் சிங்களத்தின் கொடியதீமை
வென்றொழிக்க இன்றொழிய இனிநாளில்லை!
தமிழினமே ஒன்றுபடு இல்லையென்றால்
தலைகுனிய நமக்கதிக நாட்களில்லை!
மாறுபட்ட கொள்கையினால் மதியிழந்து
மாளுகிறாய் மறுகுகிறாய் மானங்கெட்டு
மாற்றாரின் மாயவலை நூலில் மாட்டி
மானமழிந் தீனமடைந்தழிதல் நன்றோ!
போற்றோர்மம் போர்வீரர் வீரங்கண்டு
பொய்யாதே போய்ச்சேர்நீ புலிகளோடு
ஈன்ற நிலம் செல்லடியால் சிதையுந் தோறும்
ஈன்றவரும் ஆன்றவரும் உலைகின்றார்கள்
பொன்னாட்டை மீட்டெடுக்கப் பொருதும்போது
பொற்பிழந்து நீ யெதிரிக் குதவல் நன்றோ?

போதுமினி உன்னுடைய போலிவாழ்வு
பெயர்ந்துவிடு தமிழ் காக்கும் முகாமுக்குள்ளே
நடந்த கதை கனவுலகச் செயலாகட்டும்
நடக்க இனி இருப்பவைகள் சரியாகட்டும்
ஒன்றுபடு ஊன்றுகொடு உதவ வா நீ
உளவறியும் தலையாட்டி வேலை வேண்டாம்
பாவமுறு சிங்களத்தார் குண்டு போட்டுப்
பாலகரைப் பள்ளியிலே கொல்லும்போது
பதவிபெற வேண்டுமென்ற வேட்கை யாலே
பொதுநீதி பறையாமை பேரநீதி
சரியென்ன பிழையென்ன தமிழர் நம்முள்
சரிக்கின்றார் தமிழினத்தை அதுதான் உண்மை
பழம்பழிகள் சுமத்துதற்கு நேரமீதா?
பழையவற்றை மறந்து தமிழ் வீரனாய் வா
தயங்காதே ஒருநிமிடம் ஓடிவாநீ!
தாக்கியடித் தெதிரியுயிர் போக்கவாநீ!

- கவிஞர் செ. சிறீக்கந்தராசா




T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palemo, Italy
T/F: 091- 611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss
T/F: 01- 273- 29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O, 211 Katherine Rd
London E6 1Bu, U.K
Tel: 0181 503 4294
Fax:0181 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel: 022- 350 980 Fax: 381010

W.T.C.C
170 - 10 Cadarcroft Road
Suite 1-L,Jamaica,
New York 11432 U.S.A.
T/ F: 718- 657- 9463

L.T.T.E
P.O.Box 47, 7400 Herning
Denmark
T/F: 97- 155299

T.C.C
Groot Hertoginneisaan
2517 BL Den Haag, Nederland
Tel:070 - 346 1963 Fax:384 0583

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F: 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia.
T: 03-470 6441 F: 560 8224


Disigned by Euro Graphics & Printing Ltd - 0181 801 3822

Printed by Observer Group News papers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்